விலை
ரூபா 20
பக்கங்கள்
28

# உதயன்

சுடர் 31 | கதிர் 124 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 16, செவ்வாய்க்கிழமை 29.03.2016




சம்பத் ரேகா
அதிர்ஷ்டத்தின் ஸ்வர்ண ரேகை
இன்றைய சுப்பர் பரிசு
ரூ. 13,669,120.00
சம்பத் ரேகா
தேசிய லொத்தர் சபை




ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுற்பகல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ள அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான புளூ ரிட்ஜ் கப்பலைப் பார்வையிட்டார். அமெரிக்கக் கடற்படையினர் அவருக்கு இராணுவ மரியாதை அளித்தனர். (தி)

# தமிழில் பிரித் ஓதி வடக்கில் வெசாக்

## நல்லிணக்கத்துக்கு இதுவே வழி என்கிறார் வடக்கு ஆளுநர்
## தெற்கு மக்களைக் கூட்டி வந்து கொண்டாட்டத்துக்கும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 29
தென்பகுதி மக்களை அழைத்து வந்து, தமிழில் பௌத்த உபதேசங்களை ஓதி வெசாக் கொண்டாட்டத்தை வடக்கில் அனுஷ்டிப்பதன் ஊடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். அதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.



வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
இதன்போது அவர் மேலும் கூறுகையில்,
வடக்கு - தெற்கு இடையிலான மத நல்லிணக் கத்தை பக். 26

# 65,000 வீட்டுத்திட்டத் தெரிவுக்கு புதியதொரு விண்ணப்பப் படிவம்

## ஏற்கனவே விநியோகிக்கப்பட்டதற்கு மேலதிகமாக வழங்கியுள்ளது அமைச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 29
65 ஆயிரம் வீட்டுத்திட்டத்துக்குப் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான புதியதொரு விண்ணப்பப் படிவம் மாவட்டச் செயலகத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ளது.
ஏற்கனவே விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துக்கு மேலதிகமாகவே, மீள்குடியேற்ற அமைச்சினாலேயே இந்தப் புதிய விண்ணப்பப் படிவங்கள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
மீள்குடியேற்ற அமைச்சினால், வடக்கு - கிழக்கில் 65 ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தனியார் ஒப்பந்த நிறுவனத்தினாலேயே, இந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இவை உருக்கில் அமைந்த பொருத்து வீடுகளாகும்.
இந்த வீட்டுத் பக். 26

# நயினையில் புத்தர் சிலை வைப்பதால் பாதிப்பில்லை

## அப்பகுதி மக்களும் சம்மதம் என்கிறார் ஆளுநர்

யாழ்ப்பாணம், மார்ச் 29
பௌத்த விகாரைகளில் இந்துத் தெய்வங்களின் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் நயினாதீவில் புத்தர் சிலை அமைப்பதால் எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. நயினாதீவு மக்களின் சம்மதத்துடனேயே இந்தப் புத்தர் சிலை அமைக்கப்பட்டு வருகின்றது.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே.
வடக்கு மாகாண பக். 26

# வித்தியா கொலைச் சந்தேகநபர்களின் மறியலை நீடிக்க அனுமதி பெறப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 29
புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட வழக்கில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்திருப்பதற்காகச் சட்ட முறைப்படி சட்டமா அதிபரிடம் அனுமதி பெறப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதுமட்டுமன்றி, அவர்களில் இரண்டு சந்தேக நபர்களைச் சந்தித்துக் கதைக்க அனுமதி தருமாறு அவர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி விடுத்த கோரிக்கைக்கும், சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படவேண்டும் என்று நீதிமன்று தெரிவித்துள்ளது.
கூட்டுவன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட சிவலோகநாதன் பக். 25

முச்சந்தி முரளி



ஓகோ நல்லா இருக்கு இந்தப் பிளான் பாத்தியளே...

# வடக்கில் 'சிங்க லே'



யாழ்ப்பாணம், மார்ச் 29
பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர், வடக்குக்கு வருகை தந்து சென்றிருந்த நிலையில், சிங்க லே அமைப்பினர் வடக்குக்கு நேற்று முன்தினம் வருகை தந்துள்ளனர்.
வவுனியா மாவட்டத்துக்கு வருகை தந்த சிங்க லே பக். 26

# பழைய முறைமையில் இனி நடக்காது தேர்தல்

## அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 29
பழைய முறையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படாது என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இதன்போது அமைச்சர் பைசர் முஸ்தபா கூறுகையில், பக். 26

# மல்லாவி விபத்தில் இளம் ஆசிரியர் சாவு

மாங்குளம், மார்ச் 29
ஓட்டோ - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஆசிரியர் ஒருவர் சாவடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மல்லாவி - ஒட்டறுத்தகுளம் அந்தோனியார் கோவிலடி வீதியில் நடைபெற்றுள்ளது.
சம்பவத்தில் கறவெட்டி மத்தொனியைச் சேர்ந்த நடராஜா சுஜீவன் (வயது -25) என்ற துணுக்காய் கல்வி வலய பெரிய புளியங்குளம் அ.த.க.பாடசாலையில் கல்வி கற்பிக்கும் கணித பாட பக். 26

# நேரத்தை மாற்ற ஆராய்கிறது அரசு

கொழும்பு, மார்ச் 29
இலங்கையில் நடைமுறையிலுள்ள நேரத்தை மாற்றியமைப்பது குறித்து ஆராயப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
வரட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக, வழமையைவிட தற்போது மின்சார பாவனை அதிகரித்துள்ளதால், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மின்சாரப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், நேரத்தை மாற்றியமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகப் புத்தாக்க சக்திவலு அதிகார சபையின் தலைவர் கீர்த்தி விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் எதிர்வரும் வாரத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற வுள்ளதாகவும், பக். 23

# கிணறு வெட்டும் போது வெளிவந்த வெடிமருந்து

யாழ்ப்பாணம், மார்ச் 29
நல்லூரில் கிணறு வெட்டிக்கொண்டிருந்தபோது, வெடிமருந்துப் பொருள் கொண்ட பெரல் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.
அத்துடன், மேலும் சில பெரிய பெரல்கள் புதைக்கப்பட்டுள்ளதனால், அவை இன்று மீட்கப்பட வுள்ளதோடு, அதுவரை பக். 25



# சூட்டைத் தணிக்காத மழை

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் 1.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.
திடீர் மழை பெய்துள்ளபோதும் வெப்பநிலை குறைவடையவில்லை என்றும் வானிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக வெப்பமான காலநிலை நிலவி வருகின்றது. சூரியன் மத்திய கோட்டுக்கு நேரே உச்சம் கொடுப்பதனால், இந்த வெப்பமான காலநிலை எதிர்வரும் 15 ஆம் திகதி வரையில் நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட் பக். 26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்து வீட்டுத்திட்ட உடன்பாட்டை இறுதி செய்ய வருகிறது இந்தியக் குழு

யாழ்ப்பாணம், மார்ச் 29
போரால் பாதிக்கப்பட்ட வடக்கில் 65 ஆயிரம் உருக்கு வீடுகளை (பொருத்து) அமைக்கும் திட்டம் தொடர்பான, உடன்பாட்டை இறுதி செய்வதற்காக, இந்திய தொழிலதிபரான லக்ஸ்மி மிட்டலுக்குச் சொந்தமான, ஆர்சிலோர் மிட்டல் நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று நாளை மறுதினம் வியாழக்கிழமை கொழும்பு வரவுள்ளது.

இந்த உடன்பாட்டை இறுதி செய்வது தொடர்பாக அமைச்சரவை நியமித்துள்ள, கேள்விப்பத்திரச் சபையுடன், இந்தக் குழுவினர் பேச்சு நடத்தவுள்ளனர் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் பின்னர், உடன்பாட்டு வரைவு, அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உருக்கால் தயாரிக்கப்பட்ட பொருத்து வீடுகள் வடக்கின் காலநிலைக்கு ஏற்புடையதல்ல என்றும், நடைமுறைப் பிரச்சினைகள் பலவற்றைக் கொண்டுள்ளது என்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் கடுமையான விமர்சனத்தை முன்வைத்திருந்தார்.

இந்தவகையான வீடுகளை அமைக்கும் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, இந்த வீட்டுத் திட்டம் தொடர்பில் அமைச்சரவையில் முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-5)

> பொருத்து வீடுகள் வடக்கின் காலநிலைக்கு ஏற்புடையதல்ல என்றும், நடைமுறைப் பிரச்சினைகள் பலவற்றைக் கொண்டுள்ளது என்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் கடுமையான விமர்சனத்தை முன்வைத்திருந்தார்.

## வீடும், கடையும் சேர்ந்து முற்றாக எரிந்து நாசம்

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, மார்ச் 29
கிளிநொச்சியில் உயிர்த்த ஞாயிறு பூசைக்காக கோவிலுக்கு சென்ற வேளை திடீரென ஏற்பட்ட தீ விபத்தால் வீடும் அதனுடன் இணைந்த கடையும் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன.

வீட்டில் தீ ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் எதுவும் இல்லை எனவும் இது விசமிகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை கிளிநொச்சி டிப்போ சந்தியில் உள்ள ஜீவபரியாரியார் ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது. குறித்த ஒழுங்கையில் உள்ள வீடும் அதனுடன் இணைந்த கடையுமே முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன.

நேற்று முன்தினம் கிறிஸ்தவ மக்களின் உயிர்த்த ஞாயிறு தினமானதால், அந்த வழிபாட்டுக்காக வீட்டின் உரிமையாளரும் அவருடைய பிள்ளைகள், மனைவி என அனைவரும் அதிகாலை கோவிலுக்குச் சென்றுள்ளனர். கோவில் பூசை முடிந்து திரும்பி வந்து பார்த்த போது வீடு முற்றாக எரிந்து சாம்பலாகியிருந்தது. வீட்டில் தீ பற்றி எரியும் போது அதை அணைப்பதற்கு அயலவர்கள் முயற்சித்தும் எந்தப் பயனும் இல்லாது போனதாலேயே வீடு முற்றாக எரிந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

எரிந்த வீட்டுடன் குறித்த குடும்பத்தினுடைய வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்ட சிறிய கடையும் எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக வீட்டினுடைய உரிமையாளர் தெரிவித்ததாவது–
அதிகாலையில் வீடு தீ பற்றி எரிவதற்கான எந்த வாய்ப்புக்களும் எங்களுடைய வீட்டில் இல்லை. யாரோ விசமிகள் திட்டமிட்டே இந்த வேலையைச் செய்துள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஐ-21)



துப்பாக்கியால் சுட்டார் என்று குற்றஞ்சாட்டப்படும் வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சர்வா எனப்படும் குமாரு சர்வானந்தன் தனக்கு நோய் என்று கூறி, யாழ்.போதனா வைத்தியசாலை விடுதியில் உள்ளார். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஒருவர் சட்டத்தின்படி அலைபேசி பயன்படுத்த முடியாது என்று சட்டத்தரணிகள் கூறுகின்றனர். ஆனால் அவர் அலைபேசியைக் காதில் வைத்தபடி உள்ளார். (ற-ஐ-4,5)

## சுகாதாரமின்றி ஐஸ்கிறீம் விற்பனை செய்தோருக்கு ரூ.36 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 29
சுகாதாரச் சீர்கேடாக ஐஸ்கிறீம் விற்பனையில் ஈடுபட்ட இருவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்று 36 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

ஊர்காவற்றுறையில் ஐஸ்கிறீம் வியாபாரத்தில் ஈடுபட்ட வாகனத்தைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மறித்துச் சோதனை செய்த போது சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக – சுகாதார சீர்கேடாக வியாபாரத்தில் ஈடுபட்டமை தெரியவந்தது.

அதனையடுத்து சாரதிக்கும், விற்பனையாளருக்கும் எதிராக சுகாதாரப் பரிசோதகரால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அவர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட 9 குற்றச்சாட்டுக்களையும் அவர்கள் ஏற்றுக் கொண்டனர். அதையடுத்து நீதிமன்று இருவருக்கும் தலா 18 ஆயிரம் ரூபா வீதம் ரூபா 36 ஆயிரம் அபராதம் விதித்தது. (ற-ஐ-4,115)

## மீள்குடியமர்வு குறித்த விவரங்களை பெற்றுக் கொண்டார் வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், மார்ச் 29
வடக்கு மாகாணத்தின் மீள்குடியமர்வு தொடர்பிலான முழுமையான விவரங்களை அரச அதிபர்களிடமிருந்து வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே நேற்றுப் பெற்றுக் கொண்டார்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுக் காலை 10 மணியிலிருந்து 12 மணி வரையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களினதும் அரச அதிபர்கள், பிரதம செயலாளர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் மீள்குடியமர்வு தொடர்பில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. ஒவ்வொரு மாவட்ட அரச அதிபரிடமிருந்தும், மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டியவர்களது விவரங்கள், மீள்குடியமர்த்தப்பட்டோரின் தேவைகள் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

இதன்போது ஒவ்வொரு அரச அதிபர்களும், தமது மாவட்டத்தின் உடனடித் தேவைகளை ஆளுநருக்குத் தெரியப்படுத்தினர். அத்துடன் திணைக்களத் தலைவர்களும் தமது தேவைகளைக் குறிப்பிட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் ஆளுநர், மீள்குடியமர்வு தொடர்பிலான பல்வேறு விவரங்களைப் பெற்றுக் கொண்டுள்ள போதும், எந்தவொரு பதிலையும் வழங்கவில்லை என்று கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-ஐ-[illegible])

## வித்தியா படுகொலையில் நடந்தது என்ன? சற்றலைட் மூலம் தெரிந்து கொள்ளுங்கள்

### ஊடகங்களிடம் கூறினார் சுவிஸ்குமார்

யாழ்ப்பாணம், மார்ச் 29
வித்தியா வன்புணர்வின் பின்னரான கொலையில், உண்மையில் என்ன நடந்தது என்று சற்றலைற் மூலமாகப் பாருங்கள் என்று கூறியுள்ளார் சுவிஸ்குமார் என்று அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. இதன்போது குறித்த 10 சந்தேக நபர்களும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, விளக்கமறியல் உத்தரவுப்படி வவுனியா சிறைச்சாலைக்குக் கொண்டு செல்வதற்காக நீதிமன்றக் [illegible] வெளியே கொண்டு செல்லப்பட்டபோதே, இவ்வாறு அவர் ஊடகங்களுக்கு குறிப்பிட்டார்.

வித்தியா வழக்கில் உண்மையில் என்ன நடந்தது என்பது பற்றி சற்றலைட் மூலமாகப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள் என்று குறித்த வழக்கின் சந்தேகநபர் கூறியுள்ளார். தவிர மரபணுப் பரிசோதனை அறிக்கை ஏன் இதுவரை வரவில்லை? என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதேவேளை, குறித்த வழக்கில் வித்தியா முன்னரே கடத்தப்படவுள்ளமை, வன்புணரப்படவுள்ளமை மற்றும் கொலை செய்யப்படவுள்ளமை பற்றிய அனைத்துத் தகவல்களும் சுவிஸ்குமாருக்குத் தெரிந்திருந்தது என்று ஏற்கனவே குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றிச் சாதாரண காயத்துக்கு மருந்து கட்டியிருப்பது போன்று சுவிஸ்குமார் நேற்றுத் தலையில் துணி கட்டியவாறு நீதிமன்றுக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் வழமைபோன்று குறித்த சந்தேகநபர்கள் தற்போதும் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டுப் பின்னர் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நிர்வாகத்தெரிவு

சாவகச்சேரி,மார்ச் 29

எழுதுமட்டுவாழ் விழுபளை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் பொதுக் கூட்டம் நேற்று முன் தினம் ஆலய முன்றலில் தலைவர் த.வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது.

அதில் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக த.வேலாயுதம், உப தலைவராக கு.சீவரத்தினம், இணைச் செயலாளர்களாக த.சோதிலிங்கம், மு.தவநாதன் ஆகியோரும், உதவிச் செயலாளராக க.யோகராசா, பொருளாளர் சி.நடராசலிங்கம் ஆகியோரும், நிர்வாக சபை உறுப்பினர்களாக பொ.நவரத்தினராசா, ச.சரவணமுத்து, சி.சோமசுந்தரம், ம.அபியுகன், ப.பாலமுரளி, க.கனகேந்திரன், வ.வேல்முருகு செ.நடராசா, சி.தயாபரன், த.தட்சணாமூர்த்தி, செ.அருந்ததி ச.புஸ்பராணி, இ.தெய்வேந்திரம் பிள்ளை, இ.சிவதர்மபாலன் ந.சசீகரன், வே.ரவீந்திரன், க.கஜேந்திரன் ஆகிய 17 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

(ற-ஐ-9)


## தீவக வலயத்தின் சாதனையாளர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலயத்தின் 2015 ஆம் ஆண்டு க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியெய்தி சாதனை படைத்த மாணவிகளைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulation



ம.அபிராமி
8A B

Congratulations



க.துளசிகா
8A C

| | | | | |
|---|---|---|---|---|
| இ.சயானா | 4A | 3B | C | S |
| சி.மீரா எம்சியா | 2A | 4B | 2C | |
| அ.நிலோஜினி | A | 4B | C | 2S |
| ப.தக்ஷாயினி | A | 3B | 4C | S |
| யே.யூடி அபின்ஷா | A | 3B | 4C | S |

பாடசாலையின் சித்தி வீதங்கள்
கணிதம் - 73.3%
விஞ்ஞானம் - 87%
ஆங்கிலம் - 40%
ஏனைய பாடங்கள் அனைத்தும் 100%
க.பொ.த.உயர்தரத்துக்குத் தகுதி பெற்றோர் - 73.3%

இச்சாதனைக்குப் பின்புலமாக நின்று அயராது உழைத்த தீவக வலயத்தின் கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

பழைய மாணவர்கள்

(70342)(11,17,18)

## TRADE FINANCE & INVESTMENTS PLC

பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு

| MODEL | REG.NO | CHASIS NO |
|---|---|---|
| ROAD MATE | NPQY - 38XX | LSRHCKL11A1C00308 |
| ROAD MATE | NPQY - 39XX | LSRHCKL11B1300097 |
| DISCOVER - 125 | NPXE - 98XX | MD2DSJZZZUWE82168 |
| DELUXE | NP BAG - 57XX | MBLHA 11EWD9A22232 |
| DAWN | NP BBR - 47XX | MBLHA 11EYE9H00342 |
| PASSION PRO | NP BAU - 84XX | MBLHA 10AXDGA01973 |
| GLAMOUR | NP BBC - 07XX | MBLJA 06AHEGBO1135 |
| XL SUPER | NP BBV - 37XX | MD626CG43F2G86335 |
| DAWN | NP BBB - 70XX | MBLHA11EYE9B00159 |
| SCOOTY ZEST | NP BCT - 35XX | MD626CG43F2G86335 |
| PHOTO COPY MACHINE | TOSHIBA | DP - 1810 |

பணம் செலுத்தியவுடன் அனைத்து ஆவணங்களினையும் பெற்றுக் கொள்ளலாம்.

* நிபந்தனைக்குட்பட்டது.

மேலதிக விவரங்களுக்கு
021 228 0110 / 021 228 0108 / 077 166 1648 / 077 109 2236

## மணிவிழா வாழ்த்து

சுவாமிநாதன் தவேந்திரன்
(சுகாதார திணைக்களம்)



இன்று 29.03.2016 இல் 60 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் இவ்வேளையில் அவருடைய ஓய்வுக் காலம் சீரும் சிறப்புமாக அமைய வாழ்த்தி நிற்கின்றோம்.

தவம் ஸ்ரோர்ஸ்,
அம்பலவாணர் வீதி,
உடுவில்.

வாழ்த்துவோர்
திரு. திருமதி தவராசா குடும்பம்

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகர் மற்றும் கொக்குவிலில் இயங்கிவரும் எமது ஐஸ்கிறீம் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களுக்கு கீழ்காணும் வேலைக்கு ஆள்கள் தேவை. நிரந்தரமாக வேலை செய்யக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். EPF / ETF உடன் திறமைக்கும் அனுபவத்துக்கும் ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும்.

* உணவு மற்றும் ஐஸ்கிறீம் பரிமாறுநர்கள்
* உதவி எலக்றிசியன் (ஓரளவு Electrical Machanical வேலை செய்யக் கூடியவர்கள்)
* உதவியாள்கள் / வேலை பழக விருப்பமுள்ளோர் (O/L, A/L முடித்த 20 - 25 வயதுக்குட்பட்டோர்)
* உணவக மேற்பார்வையாளர்
* விற்பனைப் பிரதிநிதி ( Sales Rep)
* ஐஸ்கிறீம் வாகன சாரதி (ஐஸ்கிறீம் வாகனத்தில் அனுபவமுள் ஐஸ்கிறீம் விற்பனையில் அனுபவமுள்ள AD சாரதி அனுமதிப் பத்திரமுள்ளவர்கள்)
* ஐஸ்கிறீம் பட்டறை வேலை செய்யக் கூடியவர்கள்
* ஐஸ்கிறீம் உற்பத்திப் பிரிவில் (கொக்குவிலில்) வேலை செய்யக் கூடிய (உற்பத்தி, பொதியிடல், கிளீனிங் வேலையில் அனுபவமுள்ள / அனுபவமில்லாத பெண் பிள்ளைகள்.
* நல்ல சுகாதார பழக்க வழக்கங்களுடன் மருத்துவ ரீதியில் உணவு கையாளக் கூடிய திறன் கொண்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

ஷைலோ ஐஸ்கிறீம் மற்றும் உணவகம்
இல.442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 771 0785

## காணியும் வீடும் விற்பனைக்கு

5/4, ஏழாலை தெற்கு சூராவத்தையில் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
077 820 1802

## திருமண சேவை

எம்மிடம் வெளிநாடு, உள்நாடு அரச உத்தியோகம் வியாபாரிகளின் சாதகங்கள் உள்ளன.

S.S. திருமண ஏற்பாட்டாளர்,
தலையாழி கிழக்கு , கொக்குவில்
075 506 8407

## Marketing Officer (Part Time)

சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (பகுதி நேரம்)

சுற்றுலாசார் தொழிற்துறையில் ஆர்வமுள்ள உயர் கல்வி கற்கும் அல்லது வேலை செய்வோர் விண்ணப்பிக்க முடியும்.

அடிப்படைத் தகைமைகள்
★ க.பொ. த உயர்தர கல்வித் தகைமை
★ மோட்டார் சைக்கிள் செலுத்துனர் அனுமதிப் பத்திரம்
★ ஆங்கிலத்தில் பேசும் ஆற்றல்.

கவர்ச்சிகரமான சம்பள முறைமை உண்டு.
உங்களது விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஐடியா
த.பெ. எண் 44, யாழ்ப்பாணம்.
PO Box No. 44, Jaffna
ideaedc@gmail.com

## Majestic Cineplex Jaffna

கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 4.15 p.m / 7.00 p.m 3D

விசாரணை ☏ 021- 2227712

facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

## வட மாகாண சுற்றுலா தகவல் திரட்டு

முதலமைச்சரின் அமைச்சு, வட மாகாண சபை

வட மாகாணத்தில் சுற்றுலாத்துறையினை ஊக்குவிக்கும் நோக்குடன் சுற்றுலாத்துறை சார்ந்த சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் விவரங்கள் அடங்கிய தகவல் திரட்டு ஒன்று எமது அமைச்சினால், விளம்பரக் கட்டண அறவீடு இன்றி வெளியிடத் தீர்மானிககப்பட்டுள்ளது. மேலும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் (UNDP) வட மாகாண சபைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டு ஆவண நிபந்தனைகளின் அடிப்படையில் வட மாகாண சுற்றுலாத் தகவல் நிலையமானது மாங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் சுற்றுலாத் துறைக்கென இணையத்தளம் ஒன்றும் வடிவமைக்கப்பட்டு வருகின்றது. இவற்றிலும் சுற்றுலாத்துறை சார்ந்த பின்வரும் சேவைகளை வழங்குபவர்களின் விவரங்களை வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**சேவை வழங்குநர் வகுதிகள்:**

- தங்குமிடங்கள் (Hotels, Villas, Lodges, Home stay units)
- உணவகங்கள் மற்றும் பாரம்பரிய உணவுகளை வழங்கும் நிறுவனங்கள்
- வாடகை அடிப்படையில் கார், வான், மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி என்பனவற்றை வழங்கும் நிறுவனங்கள்
- சுற்றுலா செயற்பாட்டாளர்கள் (Tour operators)
- பதிவு செய்யப்பட்ட சுற்றுலா வழிகாட்டிகள் (Tour Guides)
- உள்ளூர் உற்பத்தி மற்றும் கைவினைப் பொருள்களை உற்பத்தி, விற்பனை செய்யும் நிறுவனங்கள்

மேற்படி சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் தமது நிறுவனத்தின் விவரங்களை (பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி, வழங்கப்படும் சேவைகள்) செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு, வட மாகாண சபை, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 18-04-2016 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வட மாகாண சுற்றுலா தகவல் திரட்டு" எனத் தெளிவாகக் குறிப்பிடவும். மேலதிக தகவல்களுக்கு 021-2057114 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

இ.வரதீஸ்வரன்
செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு, வட மாகாண சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞனை வாளால் வெட்டிய குற்றத்துக்கு மூவருக்கு மூன்று வருடங்கள் கடுழியச் சிறை

## மல்லாகம் மேலதிக நீதிவான் தீர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

இணுவில் காரைக்கால் சிவன் கோயிலை அண்மித்து, சிவராத்திரி தினத்தன்று ஒருவருக்கு வாளால் வெட்டிக் காயப்படுத்தி, அவரது ஓட்டோவைச் சேதப்படுத்திய குற்றத்துக்காக 3 பேருக்கு தலா 3 வருடங்கள் கடுழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது மல்லாகம் நீதிமன்று.

மல்லாகம் மேலதிக நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே குறித்த தண்டனை விதிக்கப்பட்டதோடு, ஒரு லட்சம் ரூபா அபராதம் செலுத்த வேண்டும் என்றும் நீதிவான் தீர்ப்பளித்தார்.

2014 ஆம் ஆண்டு சிவராத்திரி தினமான பெப்ரவரி 27 ஆம் திகதி, குறித்த வாள் வெட்டு இடம்பெற்றது. தாயும் மகளும் மகனும் கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்தபோதே, இடைமறித்து வாள் வெட்டு நடத்தப்பட்டது. சிவராத்திரி தினம் என்பதனால் தாயாரும் சகோதரியும் இரவு 12 மணிக்கு தண்ணீர் எடுத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்றுள்ளனர். அவர்கள் முன்னே செல்ல மகன் ஓட்டோவில் அவர்களின் பின்னால் பாதுகாப்புக்காகச் சென்றுகொண்டிருந்துள்ளார்.

இதன்போது அங்கு சென்ற 3 பேரும் ஓட்டோவை நிறுத்தி, அதனைச் செலுத்திக்கொண்டிருந்த இளைஞனை வாளால் வெட்டியுள்ளனர். இதில் இளைஞன் படுகாயமடைந்ததோடு, அந்தச் சம்பவத்தால் கோயிலுக்குச் சென்ற இளைஞனின் சகோதரியும் தாயாரும் கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகினர்.

காயமடைந்த இளைஞன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான். விசாரணை மூலமாக 3 பேரைச் சுன்னாகம் பொலிஸார் கைது செய்தனர். இணுவிலைச் சேர்ந்த பொன்னுத்துரை புஸ்பேந்திரன், கோண்டாவிலைச் சேர்ந்தவர்களான விஜயரூபன் பிரதீப் மற்றும் யோகேஸ்வரன் பார்த்தீபன் ஆகிய 3 பேருமே கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, தாம் வெட்டவில்லை என்றும் சுற்றவாளிகள் என்றும் கூறியிருந்தனர். அதன்பின்னர் அவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை குறித்த காலத்தில் நீதிவானாக இருந்த சி.சதீஸ்தரன் முன்னிலையில் நடைபெற்று வந்தது. புஸ்பேந்திரன் மற்றும் பார்த்தீபன் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி கே.சுகாஸ் முன்னிலையானார். பிரதீப் சார்பில் சட்டத்தரணி வி.திருக்குமரன் முன்னிலையாகி வழக்கு விசாரிக்கப்பட்டு வந்தது. வழக்கு விசாரணை முடிவில் குறித்த 3 பேரும் குற்றவாளிகளாக நீதிமன்றினால் அடையாளம் காணப்பட்டனர்.

இந்நிலையில் அவர்களுக்கான தண்டனைத் தீர்ப்பு நேற்றுவரை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. அதன்படி மேலதிக நீதிவான் சதீஸ்தரன் 3 குற்றவாளிகளுக்கும் நேற்றுத் தண்டனை விதித்தார்.

இதன்படி வாளால் வெட்டிக் காயப்படுத்திய குற்றத்துக்காக 3 பேருக்கும் தலா 2 வருடங்கள் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஓட்டோவைச் சேதப்படுத்திய குற்றத்துக்காக 3 பேருக்கும் தலா ஒவ்வொரு வருட கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கமைய தண்டணைக் காலம் 3 பேருக்கும் தலா 3 வருடங்கள் என தீர்ப்பளிக்கப்பட்டது.

எனினும் குற்ற நிரூபிப்பின் அடிப்படையில், அவர்களில் 3 ஆவது சந்தேக நபரான பார்த்தீபனுக்கு விதிக்கப்பட்ட 3 வருடங்கள் கடுழியச் சிறைத் தண்டனை 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் எங்கேனும் வாள்வெட்டுக் குற்றச்செயலில் ஈடுபடுவாராக இருப்பின், அவருக்கான தண்டனை நடைமுறைப்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-4)

## மலைப்பாம்பு பிடித்து வந்த கைதடி இளைஞன்

இளைஞர் ஒருவரால் கொண்டு வரப்பட்ட மலைப் பாம்பினால் ஊரே பரபரப்பான சம்பவம் நேற்று கைதடி கிழக்கு, கலை நகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த கதிரவேல் நந்தகுமார் எனும் இளைஞன், தொழில் நிமித்தம் மட்டுவிலுக்குச் சென்றிருந்தார். நேற்று முன்தினம் இரவு அந்தப் பகுதியில் உள்ள காணி ஒன்றில் 11 அடி நீளமான மலைப் பாம்பு சென்றுள்ளது.

குறித்த பகுதி மக்கள் தீ மூட்டிக் மலைப்பாம்பை கொல்ல முற்பட்ட போது, அதனைத் தடுத்த குறித்த இளைஞன், உயிருடன் பிடித்துள்ளார்.

இந்த நிலையில் மலைப் பாம்பை கலைநகர் பகுதியில் உள்ள அவரது வீட்டிற்குக் கொண்டு வந்து வீட்டில் வெட்டப்பட்ட மலசலகூட கிடங்கில் விட்டுள்ளார். இதை ஏராளமான மக்கள் பார்வையிட்டும் புகைப்படம் எடுத்தும் செல்கின்றனர்.

இது தொடர்பில் நேற்றுக் காலை சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவித்தும், நேற்று இரவு 10 மணிவரை பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் மலைப்பாம்பை என்ன செய்வதென்று தெரியாதுள்ளதாகவும் மேற்படி இளைஞர் குறிப்பிட்டார். (வ-288)

## சிக்கனமாக உபயோகித்தால் விசேட சலுகை வழங்கப்படும்

### மின்சார சபை திட்டம்

மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துபவர்களுக்கு விசேட சலுகைகளை வழங்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய முதல் மாதக் கட்டணத்தை விடவும் அடுத்த மாதம் 10 சதவீதம் குறைவாகப் பயன்படுத்தும் நுகர் வோருக்கு, விசேட தள்ளுபடி வழங்கப்படவுள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவுகின்ற வறட்சியான காலநிலை, இன்னமும் மூன்று மாதங்களுக்கு நீடிப்பதற்கான சாத்தியக் கூறு கள் காணப்படுகின்றன என்றும், அதன் காரணமாக மின் சாரத்தைச் சேமிக்கும் வகையிலேயே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் மின்சார சபை அறிவித்துள்ளது.

அதேவேளை மின் பிறப்பாக்கிகள் பயன்படுத்துகின்ற தனி யார் நிறுவனம் உள்ளிட்ட பிரிவினருக்கு, ஊக்கத் தொகை யொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

(ற-ஐ-5)

**வீடு வாடகைக்குத் தேவை**

மானிப்பாய் சுதுமலைக்கு அருகில் சிறிய குடும்பத்துக்கு வீடு தேவை.

021 225 6070, 077 314 8249

**பெயர் மாற்றம்**

தும்பளை வீதி, பன்னக்கட்டை ஒழுங்கை பருத்தித்துறையைச் சேர்ந்த சுதாகருணா ஆகிய நான் எனது பெயரை சுதாகரன் எனப் பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

சுதாகரன்

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் மேற்கு, K.K.S வீதி, முதலி கோயிலுக்கு அருகில் நிலப்பரப்பு 1¾ விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.

076 702 3565

**டிப்பர் லொறி தேவை**

03 கியூப் கொள்ளளவு கொண்ட டிப்பர் லொறிகள் தேவை.

(70340) (14,18,20)

077 638 9368 / 077 667 7746

**தவறிவிட்டது**

21.03.2016 திங்கட்கிழமை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பஸ்ஸில் கறுப்புக் கலர் றவலிங் பாக் ஒன்று மாறி எடுக்கப்பட்டு எம்மிடம் உள்ளது. எமது பையும் தவறிவிட்டது. தவறவிட்டவர்களும் தவறுதலாக எடுத்தவர்களும் தொடர்பு கொள்ளவும்.

077 039 8354

**கணக்குப் பதிவாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் பிரபல மின்சாதனப் பொருள்களை விற்பனை செய்யும் எமது நிறுவனத்திற்கு கணக்குப் பதிவாளர் தேவை.

தகுதியான ஆண், பெண் இருபாலாரும் எதிர்வரும் 30.03.2016 புதன்கிழமை 10 மணிக்கு சுயவிவரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்.

JAFFNA ELECTRICALS
NO: 94(6), STANLY ROAD, JAFFNA.
T.P No: 021 222 2353
Fax No: 021 222 4302

## தேசிய நுளம்பு வாரம் இன்று முதல் ஆரம்பம்

தேசிய நுளம்பு வாரம் இன்று முதல் எதிர் வரும் 4 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாரத்தில் நாடு முழுவதும் பல்வேறு நுளம்பு ஒழிப் புச் செயற்பாடுகள், விழிப்புணர்வு நிகழ்வுகள் முன்னெடுக்கப் படவுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் பாலித்த மஹிபால தெரிவித்தார்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட நுளம்பு ஒழிப்பு வேலைத் திட்டத்தின் போது டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் சூழலை வைத்திருந்த 12 ஆயிரத்து 569 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த மாதம் 4 ஆயிரத்து 229 பேரும், மார்ச் மாதம் ஆயிரத்து 799 பேரும் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

(ற-ஐ-5)

**சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்டம்**

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 30.04.2016 அன்று நடைபெறும். யாப்பின் திருத்தப்பட்ட உறுப்புரை 05.09 இற்கமைய 2016.01.31 ஆம் திகதிக்கு முன்னர் உறுப்புரிமை பெற்றோரும் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்தோருமே கூட்டத்திற் கலந்து கொள்ள உரித்துடையவராவர்.

பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 09.04.2016 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

திரு. தி. செல்வமனோகரன்
செயலாளர்.

(அ. 22235)(2.18)

## காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழு அமர்வு மன்னாரில்

### நேற்று நடைபெற்றது



மன்னார்,மார்ச் 29

காணாமற் போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழுவினுடைய சாட்சிய பதிவுகள் நேற்று திங்கட்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தலைமையில் நடைபெற்றது.

ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தலைமையில் மூன்று ஆணையாளர்கள் உள்ளடங்கலாக குறித்த விசாரணைகள் இடம்பெற்றன.

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற காணாமற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழுவினுடைய விசாரணைகளின் போது கலந்து கொண்டு சாட்சியம் வழங்காதவர்களுக்கே சாட்சியமளிக்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தன.

மன்னார்மாவட்டத்தைச்சேர்ந்த 257 பேருக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த விசாரணைகள் இடம்பெற்றன. விசாரணைகளின் போது கடந்த காலங்களில் மன்னார் மாவட்டத்தில் காணாமற்போன, கடத்தப்பட்டவர்கள் தொடர்பாக அதிகளவு விசாரணைகளும், பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ற-ஐ-56)

## இ.போ.ச ஊழியர்கள் சுயாதீனமாக ஓய்வுபெறும் முறைமை விரைவில்

கொழும்பு, மார்ச் 29

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் சுயாதீனமாக ஓய்வுபெறும் முறைமையொன்று எதிர்வரும் நாள்களில் அறிமுகம் செய்யப்படவுள்ளது என போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் டிப்போவை மேற் பார்வை செய்வதற்கான பயணத்தில் கலந்து கொண்டு, ஊழியர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த பஸ் டிப்போவில் ஒரு பஸ்ஸைச்செலுத்த நான்கு தொடக்கம் ஏழு வரையான ஊழியர்கள் உள்ளனர். ஒரு பஸ்ஸை ஏழு பேரால் செலுத்த முடியாது. இதனால், நிர்ப்பந்தத்தில் அல்ல, சுயாதீனமாக விரும்பி ஓய்வு பெறும் முறைமையொன்றை அரசு எதிர்காலத்தில் அறிமுகம் செய்யவுள்ளது. எந்தநாளும் திறைசேரியிலிருந்து போக்குவரத்து சேவைக்கு நிதி வழங்கிக் கொண்டிருக்க முடியாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியதிச் சட்டம் நடைமுறையாகியும் மாற்றமில்லாதுள்ளது மாகாண சபை

## வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 29

மாகாண அரசின் நியதிச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னரும், மத்திய அரசின் சுற்றறிக்கைகள் - உப விதிகள் என்பவற்றை மாற்றம் மேற்கொள்ளாது வடக்கு மாகாண அரசு பயன்படுத்துகின்றது. இது சட்டத்துக்கு முரணானது என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர், இதற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைக்குக் கூட செல்ல முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு அண்மையில் இடம்பெற்றது. இந்த அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது-

வடக்கு மாகாண சபையில் கல்வி நியதிச் சட்டம் மற்றும் சுகாதார நியதிச் சட்டம் என்பன நிறைவேற்றப்பட்டன. இந்த நியதிச் சட்டங்களுக்கான அங்கீகாரத்தை - ஒப்புதலை முன்னைய ஆளுநர்பளிகக்காரவழங்கியிருந்தார். அவர் அங்கீகாரம் வழங்கிய திகதியிலிருந்து மேற்படி இரண்டு நியதிச் சட்டங்களும் நடைமுறைக்கு வருகின்றன.

அந்த நியதிச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தும் திகதியிலிருந்து, வடக்கு மாகாண எல்லையினுள் மத்திய அரசின் கல்வி மற்றும் சுகாதாரம் சம்பந்தமான சட்டங்கள் செல்லுபடியாகாது. இது நியதிச் சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் நியதிச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னரும், வடக்கு மாகாணத்தில் கல்வி - சுகாதாரம்ஆகிய இரண்டு அமைச்சுக் களும் மத்திய அரசின் உப விதிகள் - சுற்றறிக்கைகளையே பயன் படுத்துகின்றனர். அதனை அப்படியே பயன்படுத்துவதாக இருந்தாலும், அதில் மாற்றங்களை மேற்கொண்டு பயன்படுத்துவதாக இருந்தாலும் அதனை வர்த்தமானிப் பிரசுரம் மேற்கொள்ள வேண்டும். இதனைச் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் செய்ய வேண்டும்.

அவ்வாறு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறு செய்யாமல், மத்திய அரசின் சுற்றறிக்கைகள் - உப விதிகளைப் பயன்படுத்துவது சட்டத் துக்கு முரணானது. இதற்கு எதிராக எவரும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் - என்றார். (ற-ஐ-5)

### சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி,மார்ச் 29

கஞ்சா வைத்திருந்த சித் தன் கேணி நபர் ஒருவரையும், அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றி வந்த சாரதியான மிருசுவில் வாசியையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த வியாழக்கிழமை கொடிகாமம் நகர்ப் பகுதியில் கஞ்சா விற்பனை செய்யப்படுகின்றது என்று கிடைத்த தகவலையடுத்து கொடிகாமம் பொலிஸார் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்துத் தேடிய போது 330 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்த வட்டுக்கோட்டை கிழக்கு சித்தன்கேணியைச் சேர்ந்த நபரைக் கைது செய்தனர்.

அதேவேளை அன்றைய தினம் மிருசுவில் உசன் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த வாகனத்தைக் கைப்பற்றி, அதன் சாரதியையும் கைது செய்தனர்.இந்த இருவரையும் மறுநாள் நீதிவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்தியபோது இருவரையும் எதிர்வரும்ஏப்ரல் மாதம் ஆறாந்திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்டார்.

அத்துடன் வரணிப் பகுதியில் 45 ஆயிரம் ரூபா பெறுமதியான அலைபேசியைத் திருடிய நபரைக் கைது செய்த பொலிஸார், அன்றைய தினம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் நாவற்குளி ஐயனார் கோவிலடிப் பகுதியில் பெண்ணொருவரைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்திய மற்றொரு பெண்ணை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். இந்தப் பெண்ணை பிணையில் செல்லுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-ஐ-9)

### பாரவூர்தி விபத்தில் இருவர்படுகாயம்

அச்சுவேலி, மார்ச் 29

புத்தூர் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 6.45 மணியளவில் இடம்பெற்ற பாரவூர்தி விபத்தில் சாரதியும், உதவியாளரும் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புத்தூர் மேற்கைச் சேர்ந்த இருவரும் படுகாயம் அடைந்த நிலையில், அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மணல் ஏற்றிக் கொண்டு புத்தூர் நோக்கிவந்து கொண்டிருந்த பாரவூர்திக்கு முன்னால் சென்று கொண்டிருந்த பாரவூர்தியை விலத்திச் செல்ல முற்பட்டபோது விபத்துக்கு உள்ளாகி வீதியோரத்தில் குடை சாய்ந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-11)

### பொதுக் கூட்டம்

பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் தென்மராட்சிக் கிளையின் பொதுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அசாந்த சீலன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஐ-131)

# கடைக்குச் சென்ற மகன் வீடு வரவில்லை விரக்தியடைந்த தந்தையும் தற்கொலை

## ஆணைக்குழு முன்பாக தாய் கதறல்

மன்னார்,மார்ச் 29

ஷம்போ வேண்டுவதற்காக கடைக்குச் சென்ற 19 வயதுடைய மகன் வீடு திரும்பவில்லை. அதனால் விரக்தியடைந்த தந்தை ஒரு வாரம் கழிந்த நிலையில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். - இவ்வாறு காணாமல் போன பாடசாலை மாணவனான யோகநாதன் குருசேத்மன் என்பவரது தாயார் ஆணைக் குழுவின் முன் சாட்சியம் அளித்தார்.

காணாமல் போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவினுடைய சாட்சிய பதிவுகள் நேற்று திங்கட்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஆணைக் குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தலைமையில் இடம் பெற்றது. இந்த அமர்வில் கலந்து கொண்டு சாட்சியம் அளிக்கும் போதே அந்தத் தாய் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது-

சிலாபத்துறை சவேரியார் புரத்தைச் சேர்ந்த நாங்கள் கடந்த 2007 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த நிலையில் மன் னார் பெரி யகமம் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றோம். 19-03-2008 அன்று இரவு எனது மகன் மன்னார் பெரிய கமம் கிராமத்தில் உள்ள இல்லத்தில் இருந்து ஷம்போ வேண்டுவதற்காக கடைக்குச் சென்றார்.

எனினும் அவர் வீடு திரும்பவில்லை. எனது மகன் யோகநாதன் குரு சேத்மன் காணாமல் போகும் போது அவருக்கு வயது-19. மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் உயர் தரம் படித்துக்கொண்டிருந்தார். கடைக்குச் சென்ற மகன் வீடு திரும்பாத நிலையில் நாங்கள் அச்சத்தில் இருந்தோம். எனது கணவர் மகனைத் தேடிய போதும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் எனது கணவர் கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். நான் தற்போது யாரும் அற்ற நிலையில் தனிமையாக எவ்வித உதவிகளும் இன்றி வாழ்ந்து வருகின்றேன்.

பல்வேறு துயரங்களையும் சந்தித்து வருகின்றேன். இது வரைக்கும் எனது மகனைப் பற்றி எவ்வித தகவல்களும் இல்லை. நான் எவ்வித உதவி களும் இன்றி வாழ்ந்து வரும் நிலையில் எனது மகனைத் தேடிக் கண்டு பிடித்துத் தாருங்கள்.- என்று அவர் கண்ணீருடன் கோரிக்கை விடுத்தார். (ற-ஐ-56)

# செங்கை ஆழியானை நினைவுகூரும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 29

ஈழத்தின் எழுத்தாளர் க.குணராசா (செங்கை ஆழியான்) வின் கலை, இலக்கிய, சமூகப் பணிகளை நினைவு கூரும் நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியிலிருந்து மாலை 6 மணி வரை கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று ஆறுதல் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார்.

தமிழர் வாழ்வியல் பற்றிய செங்கை ஆழியானின் ''பார்வையும் பதிவுகளும்'' எனும் கருப்பொருளில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நா.யோகேந்திரநாதன், பேராசிரியர் இரா. சிவசந்திரன், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-ரி)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மாதகல் சென்.யோசவ் மகா வித்தியாலயத்தில்
க.பொ.த.(சா/த) பரீட்சை 2015 இல்
சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொண்ட பின்வரும்
மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்




தியாகராசா திருமால்
7A 2B




வனஜா இராசரத்தினம்
8A C




அனுசியா பெரியதம்பி
7A B C

| | |
|---|---|
| அ.சிந்துஜன் | 5A 3B S |
| ஜெ.அனுசிகா | 4A 4B C |
| நா.யோகிதா | 4A 3B 2C |
| அ.அன்ரனி ஜெரிசன் | 4A B 2C 2S |
| ஜெ.ஜெனுசியா | 2A 4B 3C |
| ச.தர்சிகா | 2A 4B 2C S |
| இ.கிசான் | 2A 3B 2C S |
| ஜோ.ஜோட்ஸ் ஜிம்சன் | 2A B 3C 2S |
| அ.மரிய யோசலின் டினோஜா | A 4B 4C |
| கு.மேரி தர்சிகா | A 6C 2S |
| ம.அன்ரனி ஜெனைக்சன் | A B 2C 4S |
| [illegible] | [illegible] C 2S |
| [illegible] | B 5C 2S |

| | |
|---|---|
| வி.ஜோசன் | 4C 4S |
| ச.திவாகரன் | 2C 5S |
| ம.ரஜீதன் | 5A B 2C S |
| அ.அன்ரன் டனிஸ் | 4A 3B 2C |
| ச.சஜுஷா | 4A 2B 2C S |
| ஜெ.ரூக்ஷன் | 3A 4B 2C |
| வி.கஜமுகன் | 2A 4B 2C S |
| அ.மாறிவினோதினி | 2A 2B 4C S |
| ம.திவ்வியஹறம்சினி | 2A 6C S |
| ம.மேரி ஆன் விஜுஷா | A 4B 4C |
| [illegible] மேரி ரஜிபா | A 4B 3C S |
| வி.மேரி பவிதா | A 6C S |

| | |
|---|---|
| க.தனிகைக்குமரன் | 4B 4C S |
| ப.மிதுசன் | B 5C 2S |
| ந.முகுந்தன் | B 6C |
| சி.சாங்கீர்த்தன் | 4C 4S |

Congratulations

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலைச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**எஸ்.ஜே. செல்லத்துரை**
(முன்னாள் கிராம சேவை அலுவலர் - அதி விசேட தரம் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்)

எங்களில் ஒருவனாய் அன்போடு வாழ்ந்தாய்
காலமெல்லாம் எமைக் காத்திருப்பாய் என்றிருக்க
கண்ணீரைத் தந்து விட்டு விண்ணோடு நீ போனாய்
ஆற்றொண்ணாத் துயரமது ஊற்றாகி ஓடுதையா
உன் ஆத்மா சாந்தியடைய உள்ளத்தால் வேண்டுகின்றோம்

தோற்றம் 06.02.1951
மறைவு 29.03.2007

குடும்பத்தினர்.
45, நக்கா ஒழுங்கை,
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**நாகலிங்கம் சிங்கராசா**

தோற்றம் 15 . 06 . 1946
மறைவு 28 . 02 . 2016

எங்கள் குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.03.2016) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்றைய தினம் அன்னாரின் நினைவாக கைதடி சாந்தி நிலையத்திலும் மதியபோசனம் வழங்கப்படும்.

கௌசி இல்லம்,
கைதடி வடக்கு.
(70252)
(12.17.20)
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி ஜனககுமாரி குணரட்ணம்**
(ஆசிரியை - யா/கொற்றாவத்தை அமெரிக்கன் த.க.பாடசாலை)

தோற்றம் 18.03.1956
மறைவு 28.02.2016

எம் குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து
கலையை இசையாக அறிவூட்டி
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகம் புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளில்லையம்மா...

என்றும் நினைவில்.......
தவமனை, கலாநிலையம்,
நெல்லியடி வடக்கு.
(70254)(01.16)
குடும்பத்தினர்.

## 6 ஆம் மாத நினைவுகள்

அமரர்
**அ.கலாவதி**
(முகாமைத்துவ உதவியாளர்- கிளி/அக்கராயன் பிரதேச வைத்தியசாலை)




பிறப்பு 03.06.1966
இறப்பு 03.10.2015

அன்புக்கு இலக்கணமாய் பண்பின் உருவமாய்
பாசத்தின் திருவுருவாய் எம் நெஞ்சமதில் வாழ்ந்துவிட்டு
மீளாத்துயில் கொண்டு 6 மாதங்கள் ஆயினவோ - இன்று
விதி செய்த சதியதனை நினைத்து விம்மி நாம் அழுகின்றோம்
ஆறாது எங்கள் துயர் என்றென்றும் ஆறாது

**உம் ஆத்மா சாந்திபெற இறைவனை நாம் இறைஞ்சுகின்றோம்**

6ஆம் வட்டாரம், குமுழமுனை,
முள்ளியவளை.
அம்மா, சகோதரர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 . 11 . 1935
மறைவு 22 . 03 . 2014

**அமரர் தம்பு நடேசு**
(Retired Senior Tax Officer, Department Of Inland Revenue)
திதி:- அபரபக்க சஷ்டி
(29.03.2016)

இரண்டு ஆண்டுகள் கடந்து சென்றாலும்
ஒவ்வொரு நொடிகளிலும் இதயத்தின்
துடிப்பைப் போல் நீங்கள் வாழ்வதை
நாம் உணருகின்றோம்
இக் கணமும் உங்கள் நினைவால்
துயருறுகின்றோம் அப்பா!

381, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
என்றும் உங்கள் நினைவுகளுடன்......
(70254)(0.18)
குடும்பத்தினர்.

## நினைவழியா நினைவலைகள்...



பூமியில் 24 . 07 . 1930
விண்ணில் 10 . 04 . 2015

அமரர்
**சின்னையா நல்லதம்பி**



பூமியில் 17 . 07 . 1932
விண்ணில் 29 . 07 . 2014

அமரர் திருமதி
**சிவச்செல்வம் நல்லதம்பி**

அம்மா எங்களை மடியில் தாங்கி வைத்தாய்!
அப்பா எங்களை நெஞ்சில் தூக்கி வைத்தாய்!
குருவிடம் கல்வி கற்க சுமந்து சென்ற குலவிளக்கே!
நற்குணங்களையும், நல்வழி காட்டிய எங்கள் குடும்ப ஒளி விளக்கே!
உங்களை என்றும் நினைவாக நிழல் இருக்க பல ஆண்டு நினைவுகள் என்றுமே....
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

ராணி இல்லம், கொம்மாந்தறை, வல்வெட்டித்துறை.
(65959)(11.16)
குடும்பத்தினர்.

## க.பொ.த. சாதாரண தர பரீட்சை முடிவுகள்

கடந்த வாரம் வெளியான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளில் பாடசாலை ரீதியாக எமக்குக் கிடைத்த பெறுபேறுகள்.

**உடையார்கட்டு ம. வி.**
கு.விதுசன் 8ஏ,சி, இ.டிலோஜன் 7ஏ,பி,எஸ், தே.ஜதுசா 6ஏ,பி,2சி, தே.லொசான் 6ஏ,பி,சி,எஸ், த.யமுனா பிரியதர்சினி 5ஏ,2பி,சி,எஸ்.

**சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்**
அ.அசோதா 8ஏ,சி, மு.நிதர்சன் 6ஏ,பி,2எஸ், இ.கஸ்தூரி 4ஏ,3பி,2சி, ர.யதுர்சினி 3ஏ,3பி,3சி, து.கலாநிதி 2ஏ,5பி,சி, கே.கஜேந்தினி ஏ,4பி,2சி,2எஸ், வி.தர்மீகன் ஏ,4பி,2சி,எஸ், அ.கார்த்திகா ஏ,2பி,3சி,எஸ், க.இன்பராஜ் 2ஏ,பி,4சி,எஸ், த.நிசாந்தன் 4பி,3சி,எஸ், பா.தனுஜா 4பி,3சி,2எஸ், கு.டனுஜன் 3பி,2சி,3எஸ், ஜெ.அகலரசன் 2பி,3சி,3எஸ், அ.சியாந்தினி 2பி,3சி,எஸ், ம.சரண்யா 2பி,3சி,4எஸ், க.சுரேந்திரன் பி,7சி,எஸ், ஜெ.மதன்ராஜ் பி,4சி,2எஸ், ஜெ.ஜெயலோஜினி பி,4சி,3எஸ், ர.கௌரியதுர்சன் பி,2சி,6எஸ், ப.றுக்சியா 4சி,3எஸ்.

**மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்**
இ.சாம்பவி 9ஏ, க.சகிலன் 7ஏ,பி,சி, இ.பிரவீணா 3ஏ,3பி,2சி, செ.சதீஸ்குமார் 3ஏ,3பி,சி,எஸ், வீ.திவாஸ்கரன் 4ஏ,4சி, இ.பிரவீன் 3ஏ,2பி,3சி.

## சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்

கொழும்புத்துறை, மார்ச் 29

சர்வோதய மற்றும் தேசோதய அமைப்புக்களின் யாழ்.மாவட்ட கிளைகள் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தியாகி அறக்கொடை மண்டபத்தில் நடை பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், விசேட விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் தூதுவர் ஏ.நடராஜன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் என்.முரளிதரன் மற்றும் யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி உதயானி நவரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ற-ஜ-135

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீண்ட நாள்களாக நாடு முழுவதும் ஏற்பட்ட கடும் உஷ்ணத்தைக் குறைக்கும் வகையில் நேற்று நாட்டில் பல பகுதிகளில் மழை பெய்துள்ளது. யாழ் குடாநாட்டின் நகரப் பகுதியில் நேற்றுப் பெய்த மழையால் குடா நாட்டு மக்கள் மிகுந்த ஆனந்தம் அடைந்ததுடன் மழையை மகிழ்ச்சியாக வரவேற்றனர். (ந-ஜ-20)

# கடலுக்குச் சென்ற மகனை நேவிதான் பிடித்திருக்கும்

## ஆணைக்குழு முன்பாக தாய் கண்ணீர்

முல்லைத்தீவு,மார்ச் 29

கடலுக்குச் சென்ற எனது மகனை பரா வெளிச்சத்தில் இரவிரவாக தேடியும் கிடைக்கவில்லை, காலையில் வெற்றுப் படகு மட்டுமே கரையொதுங்கியது. எனது மகனை நேவி தான் பிடித்திருப்பினம், கண்டுபிடித்துத் தாருங்கள் என தாயொருவர் ஆணைக்குழுவின் முன் கதறி அழுதார்.

நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற காணாமற்போனவர்களைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சாட்சியம் அளிக்கும்போதே அந்தத் தாய் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளதாவது-

2004ஆம் ஆண்டு சுனாமி அடித்தது. அப்போது இருப்பதற்கு வீடுகள் எதுவும் அற்ற நிலையில் ஒரு முகாமில் வாழ்ந்து வந்தோம். முகாமில் இருக்கும் போது வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்வதற்காக எனது மகன் முல்லைத்தீவுக் கடலுக்குச் சென்று மீன் பிடித்து வருவான்.

2006 ஆம் ஆண்டு போர் இடம்பெற்ற போது எனது மகனும், இன்னுமொரு பிள்ளையும் கடலுக்குச் சென்றார்கள். அன்று இரவு 8.30 மணியளவில் கடலுக்குள் வெடிச்சத்தம் கேட்டது. நாங்கள் ஓடிச்சென்று கடற்கரையில் நின்று பார்த்தோம். நெஞ்சு பதறியது. இராணுவம் பரா வெளிச்சம் அடிச்சிருந்தது. அந்த வெளிச்சத்தில் நின்று பார்த்தோம். எதுவும் தெரியவில்லை.

மீனவர் சமாசத்தின் உதவியுடன் கடலுக்குள் 40 படகுகளுடன் தேடினோம். எனது மகன் எங்கும் கிடைக்கவில்லை. மகனுக்கு என்ன நடந்திருக்கும் என்று விடிய விடிய அங்கேயே நின்று பார்த்தேன். விடிஞ்சதும் வலைகளோ, இஞ்சினோ எதுவும் இல்லாது வெற்றுப் படகு மட்டும் முள்ளிவாய்க்காலில் கரை ஒதுங்கியது. எனது மகனையும் அவனுடன் சென்ற மற்றும் ஒருவரையும் காணவில்லை. எல்லா இடங்களுக்கும் அலைந்துவிட்டேன். இன்றுவரை எந்தப் பதிலும் இல்லை. மகனைக் கடத்தியது நேவிதான். தயவு செய்து எனது மகனைக் கண்டு பிடித்துத் தாருங்கள் - என்று கண்ணீர் விட்டுக் கதறினார்.

(ந-ஜ-21,ரி7)

### விபத்தில் 10 பேர் படுகாயம்

கிளிநொச்சி-முரசுமோட்டைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துச்சம்பவம் ஒன்றில் 10 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சிதருமபுரத்தில் இருந்து மண்பானை செய்வதற்கான பொருள்களை ஏற்றி கொண்டு வந்த பட்டாரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டு விபத்துக்கு உள்ளானது.

வாகனத்தில் பயணித்த 10 பேரும் படுகாயமடைந்த நிலையில் உடனடியாகக் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி3)

### திருமுறை மாநாடு

கரணவாய்,மார்ச் 29

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருமுறை மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 4.30 மணிமுதல் கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திணைக்களப் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறைச்சாலை மறுசீரமைப்பு புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனும், சிறப்பு விருந்தினராக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் திணைக்களத்தின் பதிப்புக்களான திருமுறையும் சைவத்திருநெறியும், பிரபந்த மாலை வரலாறும் ஆளுமைகளும் மற்றும் இலங்கையில் தமிழர் சமுதாயம் ஆகிய நூல்களின் வெளியீடுகளும் இடம்பெறவுள்ளன.

நூலின் வெளியீட்டுரையை பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார். (ந-ஜ-108)

### பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரிவு பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் எட்டாம் ஆண்டுப் பொதுக் கூட்டம், கடந்த 24 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

தலைவர் வீ.எஸ். வீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டத்துக்கு பிரதம விருந்தினராக பிரதேச செயலர் சிவசிறியும், சிறப்புவிருந்தினராக கணக்காளர் றஞ்சனும் கலந்து கொண்டனர்.

(ந-ஜ-ரி)

# உப உணவுப் பயிர்கள் தினமும் கட்டாக்காலி மாடுகளால் அழிப்பு

## சாவகச்சேரி விவசாயிகள் கவலை

சாவகச்சேரி,மார்ச் 29

சாவகச்சேரி பெருங்குளம், கல்வயல், கிராம்புவில், கெருடாவில் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட விளைபயிர்கள் கட்டாக்காலி மாடுகளால் தினமும் இரவு வேளைகளில் அழிக்கப்படுகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களில் பெருமளவு உப உணவுப் பயிர்ச்செய்கை விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ளன.

இந்த நிலையில் இரவு வேளைகளில் கூட்டமாக வருகின்ற மாடுகள் பயிர்களை அழித்து வருவதாகவும், மாடுகளைக் கட்டுப்படுத்த இரவு வேளைகளில் சுழற்சி முறையில் இரவுக் காவல் போடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர்.

இரவில் வருகின்ற மாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கமக்கார அமைப்புக்கள், கமநல சேவைகள் நிலையம், சாவகச்சேரி நகரசபை போன்றவற்றுக்கு முறையிடப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, கடந்த வருடம் மாடுகளிடமிருந்து பயிர்களைக் காப்பாற்ற கிராம்புவில் பகுதி விவசாயிகள் வயல்களைச் சுற்றி முட்கம்பி வேலிகள் அமைத்தபோது இனந்தெரியாதோர் அவற்றைப் பிடுங்கி எறிந்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-ஜ-9)

# வடமராட்சி கிழக்கில் படகு உற்பத்தி நிலைய நிர்மாணப் பணிகள் நிறைவு

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடமராட்சி கிழக்கில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் படகு உற்பத்தித் தொழிற்சாலைக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

இந்தப் படகு உற்பத்தித் தொழிற்சாலையின் புதிய கட்டடத்தை எதிர் வரும் ஏப்ரல் மாதத்தில் திறந்து வைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளரால் இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படும். பெரும்பாலும் ஏப்ரல் மாதத்தின் நடு பகுதியில் இதனைத் திறந்து வைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் படகு உற்பத்தித் தொழிற்சாலை மூலம் தயாரிக்கப்படும் படகுகளுக்கு இதுவரைக்கும் ஐம்பதுக்கும் மேற்பட்ட மீனவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

ஏற்கனவே, இந்தத் தொழிற்சாலை ஊடாக ஒரு படகு பரீட்சார்த்தமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தப் படகுத் தொழிற்சாலை மூலம் வடபகுதி மீனவர்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என்றும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

(ந-ஜ-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 80 வீத அரச பணியாளர் வெளிமாவட்டத்தினரே

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 29

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களில் 80 வீதமானவர்கள் வெளி மாவட்டங்களைச்சேர்ந்தவர்கள். இந்த நிலை எதிர்காலத்தில் மாற வேண்டும்.- இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிதியத்தால் நடத்தப்பட்ட கடந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் அனைத்துப்பிரிவுகளிலும் முதல் பத்து நிலைகளைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களில் நான் உட்பட 80 வீதமானவர்கள் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களே. மாவட்டத்தின் இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

மாவட்டத்தின் தலைமைத்துவம் இந்த மாவட்டத்துக்குரியதாக அமைய வேண்டும். அத்தோடு உத்தியோகத்தர்களும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு உரியவர்களாக இருக்க வேண்டும். அதற்குரிய சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும்.

கிளிநொச்சியில் வறுமை காரணமாக கல்வி கற்க முடியாது என்று எவரேனும் இருக்கக்கூடாது. அவ்வாறு இருந்தால் அவர்கள் எங்களுடன் உடனடியாகவே தொடர்பு கொண்டால் நாம் அதனை நிவர்த்தி செய்வோம்.- என்றார்.

இந்த நிகழ்வில் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிதியத்தால் கடந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் அனைத்துப்பிரிவுகளிலும் முதல் பத்து நிலைகளைப் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதோடு, மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் 36 பேருக்கான கல்விக்கான உதவிகளும் வழங்கப்பட்டன.

(ρ-ஐ-21)

# தனித்து நின்ற சிறுவர்களால் பரபரப்பானது பஸ் நிலையம்

வவுனியா, மார்ச் 29

வவுனியா பஸ் நிலையத்தில் தனித்து விடப்பட்ட மூன்று சிறுவர்களால் சிறிது நேரம் பரபரப்பானது பஸ் நிலையம். இந்தச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா பஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பஸ் நிலையத்தில் தனிமையில் நின்ற மூன்று சிறுவர்கள் வீரிட்டு அழுது தங்களுடைய தாயைக் காணாது தேடினர். வெகு நேரமாக அந்தச் சிறுவர்கள் பஸ் நிலையத்தில் நின்று அழுதவாறு நின்றுள்ளனர்.

நீண்ட நேரத்தின் பின்னர் சிறுவர்களுடைய தாய் குறித்த இடத்துக்கு வந்து சேர்ந்துள்ளார். பயணிகள் சிறுவர்களுடைய தாயாரை விசாரித்தபோது தான் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர் எனவும் பொருளொன்றை வாங்குவதற்காகக் கடைக்குச்சென்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதையடுத்து அந்தத் தாயை எச்சரிக்கை செய்து சிறுவர்களை ஒப்படைத்த பயணிகள் இது போன்று பிள்ளைகளைப் பொது இடத்தில் தனித்து விட்டுச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தினர்.

(ρ-ஐ-402,21)

# நீர் மட்டம் குறைந்தாலும் மின்வெட்டு இடம்பெறாது

## அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய வவுனியாவில் தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 29

நீர்த்தேக்கங்களில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் நீர்மட்டம் குறைந்து போனாலும், மின்வெட்டு நடைபெறாத வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்

வடக்கு மாகாண பாடசாலை மட்ட மின்சக்திக்கழகங்களை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா மகாவித்தியாலத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

மழைவீழ்ச்சி இன்மை காரணமாக நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. இதன் காரணமாக மின்னுற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் நாள்களில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படலாம் என்றும் அண்மைக் காலமாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

மழையின்மை காரணமாக நீர் மட்டம் குறைந்து மின்னுற்பத்தி பாதிக்கப்பட்டாலும், தேசிய மின் வழங்கலில் பாதிப்பு ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய வெப்ப காலநிலை காரணமாக மின்பாவனையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள போதிலும், அதனை முகாமைத்துவம் செய்து கொண்டு மின்வழங்கலை தடையின்றி முன்னெடுக்கும் வகையில் மின்சார சபை தயார் செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.(ஐ-2)

# பட்டுவன்கலவுக்கு வவுனியாவில் அஞ்சலி



வவுனியா, மார்ச் 29

இலங்கை சாரணர் சங்கத்தின் முன்னாள் பிரதம ஆணையாளரும், ஆசிய பசுபிக் சாரண வலயத்தின் முகாமைத்துவ உப குழுவின் முன்னாள் பணிப்பாளரும், சாரணர் சங்கத்தின் தலைவருமான ஊ.பட்டுவன்கலவின் மறைவை அடுத்து வவுனியா திரி சாரணர், ஜனாதிபதி சாரணர் மன்றத்தின் ஒழுங்கமைப்பில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வவுனியா உதவி மாவட்ட ஆணையாளர் சு.காண்டீபன் தலைமையில் தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயத்தில் குறித்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

கடந்த சனிக்கிழமை கொழும்புநகரில் காலமான ஊ.பட்டுவன்கலவின் இறுதி நிகழ்வுகள் நேற்று கொழும்பில் இடம்பெற்று சாரண மரியாதையுடன் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இலங்கை சாரணர் சங்கத்தால் கடந்த மூன்று தினங்கள் சாரண தேசிய துக்க தினமாக அறிவிக்கப்பட்டு மாவட்டங்கள் தோறும் சாரணக்கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டதுடன், அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அந்த வகையிலேயே வவுனியாவிலும் குறித்த அஞ்சலி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் மாவட்ட ஆணையாளர் எம்.எஸ். பத்மநாதன், உதவி மாவட்ட ஆணையாளர் கு.கமலகுமார், பெண் சாரண தலைவி திருமதி மோ.சுதர்ஷினி, திரி சாரணர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ρ-ஐ-21)

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் ஜனாதிபதியே இறுதித் தீர்மானம் எடுப்பார்

## ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

இந்திய இராணுவத்தால் காணாமற் செய்யப்பட்டோர் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது தொடர்பில் ஜனாதிபதியே இறுதித் தீர்மானம் மேற்கொள்வார்.- இவ்வாறு காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் அமர்வு வடக்கில் இடம்பெற்று வருகின்றன. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்திய இராணுவத்தினரால் காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கையில் குறிப்பிடப்படும். இது தொடர்பாக ஜனாதிபதி தீர்மானம் மேற்கொள்வார்.


ஜனாதிபதி ஆணைக்குழு இராணுவத்தின் மீது குற்றம் சுமத்தாது என்ற முடிவுக்கு வரமுடியாது. இராணுவமோ, விடுதலைப் புலிகளோ அல்லது வடக்கின் வேறெந்த அரசியல் கட்சிகளோ குற்றவாளிகளென நிரூபிக்கப்பட்டால் அதை நிச்சயமாக எமது இறுதி அறிக்கையில் குறிப்பிடுவோம்.

எமக்கு எல்லோரும் ஒன்றுதான். இந்த ஆணைக் குழு மிகவும் சுயாதீனமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் செயற்படுகின்றது. நாங்கள் ஒரு பக்கச்சார்பாக செயற்படுவதாக கூறுவது அநீதியானது.

எமது பணிகள் நிறைவடைந்து இறுதி அறிக்கை சமர்ப்பித்த பின்னர் எங்களைப் பாராட்டினாலோ, விமர்சித்தாலோ அதை நாங்கள் ஏற்றுக் கொள்வோம் - என்றார்.

(ρ-ஐ-5)

# பங்குனித் திங்கள் உற்சவத்தில் பெருமளவான பக்தர்கள்







சாவகச்சேரி,மார்ச் 29

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தில் நேற்று பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொண்டு தமது பொங்கல் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

அதிகாலையிலிருந்து அடியார்கள் ஆலயத்துக்கு வருகை தந்து பொங்கல் நேர்த்திகளை மேற்கொண்டனர். அத்துடன் காலை தொடக்கம் காவடிகள், பாற் செம்புகள், பறவைக்காவடிகள் என்பவை ஆலயத்தின் நாலாபுறமுமிருந்தும் வந்த வண்ணமிருந்தன.

பெருமளவு ஆண், பெண் பொலிஸார் கடமையில் சிவிலிலும் சீருடையிலும் காணப்பட்ட போதிலும் அடியார்கள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பெரும்சிரமங்களை எதிர்நோக்கினர்.

நேற்று மாகாண மட்டப் பரீட்சைகள் பாடசாலைகளில் நடைபெற்றதால் பாடசாலைகளின் சாரணர் குழுக்கள் காணப்படவில்லை. இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை முதலுதவிச் சங்கம் ஆகியவற்றின் தொண்டர்கள் பொலிஸாருக்கும் அடியார்களுக்கும் உதவிகளை வழங்கினர்.

ஆலயத்தின் நாலாபுறமும் பொங்கலுக்கான மண்டபங்கள் அமைக்கப்பட்டிருந்த போதிலும் அங்கு இடமில்லாததால் பலர் மர நிழல்களில் வைத்துப் பொங்கல் செய்ததைக் காணமுடிந்தது.

(ρ-ஐ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்குத் தமிழ் ஊடகவியலாளரை படையினர் கண்காணிப்பதில்லை

## யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 29
வடக்கில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீது தொடர்ச்சியாகப் பாதுகாப்புத் தரப்பின் கண்காணிப்போ அல்லது அவர்களைப் பின்தொடரும் சம்பவங்களோ இடம்பெறுவ்தில்லை. இது வெறும் வதந்தி.- இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

பலாலி படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகத்துறை அமைச்சருடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததில் இருந்து எமது இராணுவம் மிகவும் பலமான நிலையிலும், அதேபோல் நாட்டில் மக்கள் மத்தியில் மிகவும் கண்ணியமாகவும் தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றது.

> ஆட்சி மாற்றத்தின் பின்னர் இன்று வடக்கில் தேசிய பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு அச்சம் ஏற்படுத்தும் எந்தச் சூழ லும் இல்லை. பொதுமக்கள் தேசிய பாதுகாப்பைப் பாதுகாக்கும் வகையில் எமக்கு ஒத்துழைப்புக் கொடுத்துச் செயற்படுகின்றனர்.

எனினும் ஊடகத்தினருக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் இருந்த நெருக்கம் மிகவும் குறைவாக இருந்தமை இவ்வாறான கருத்துக்களை ஏற்படுத்தக் காரணமாக அமைந்து விட்டது. குறிப்பாக வடக்கில் உள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் இராணுவத்தினருடன் கொண்டிருந்த தொடர்பு குறைவாகவே இருந்தது. எவ்வாறு இருப்பினும் வடக்கில் ஊடகவியலாளர்களையோ அல்லது ஊடகங்களையோ கட்டுப்படுத்த வேண்டிய தேவை எப்போதும் இராணுவத்தினருக்கு இருக்கவில்லை.

போர் நடந்த காலத்திலும், இறுதிப் போர் நடந்த காலத்திலும் களத்தில் இருந்து போராடிய இராணுவ வீரர்கள் இன்றும் இராணுவத்தில் உள்ளனர். அவர்களின் மன நிலை இன்னும் சற்று மாறுபட்ட ஒன்றாகவே உள்ளது. அவ்வாறு இருக்கையில் அவர் களையும், மக்களையும் ஒன்றிணைக்கும் வேலைத்திட்டங்களை விரைவில் சரி செய்ய முடியும்.

எமது கடமை நாட்டின் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தி நாட்டைக் காப்பாற்றுவதேயாகும். அதை நாம் எப்போதுமே சரியாகச் செய்து வருகின்றோம். மிக நீண்ட காலப் போராட்டத்தில் பல இழப்புக்களின் பின்னர் நாம் போரைவெற்றிகொண்டுநாட்டைப் பாதுகாத்துள்ளோம். அந்த வெற்றியை மீண்டும் தாரை வார்த்து நாட்டைப் பிரச்சினைக்கு உள்ளாக்க நாம் விரும்பவில்லை.

போர் முடிவுக்கு வந்ததில் இருந்து பெருமளவில் பொதுமக்களின் காணிகளை இராணுவம் தக்கவைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. குறிப்பாக அரச நிலங்களும் பெரும்பாலான பொதுமக்களின் நிலங்களும் இந்தக் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டன. அரச நிலங்களில் பாதுகாப்பு முகாம்களைத் தொடர்ந்தும் வைத்திருப்பது எந்தச் சிக்கலையும் ஏற்படுத்தாது.

ஆனால் பொதுமக்களின் காணிகளில் இராணுவ முகாம்களை அமைக்கவோ அல்லது இராணுவத்தைத் தங்க வைக்கவோ முடியாது. ஆகவே போரின் பின்னர் இராணுவம் வசம் இருந்த பொதுமக்களின் காணிகளை உரிய மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு எமக்கு உள்ளது. இப்போது பொது மக்களின் காணிகளை நாம் அவர்களிடம் ஒப்படைத்து வருகின்றோம். எஞ்சியுள்ள காணிகளையும் உரிய மக்களிடம் ஒப்படைப்பது எமது பொறுப்பாகும்.

அதேபோல் இராணுவ வெளியேற்றம் அல்லது தேசிய பாதுகாப்பு விடயத்தில், கேள்வியை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதாகச் சிலர் கூறுகின்றனர். ஆனால் அவ்வாறான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் இன்று வடக்கில் தேசிய பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கு அச்சம் ஏற்படுத்தும் எந்தச் சூழலும் இல்லை. பொதுமக்கள் தேசிய பாதுகாப்பைப் பாதுகாக்கும் வகையில் எமக்கு ஒத்துழைப்புக் கொடுத்துச் செயற்படுகின்றனர்.

அதேபோல் இராணுவம் மட்டுமல்லாது கடற்படையினர், விமானப்படையினரின் முழுமையான ஒத்துழைப்புடன் வடக்கின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் – என்று தெரிவித்துள் ளார். (ற–ஐ–5)

---

### கும்பாபிசேகம்

கரணவாய், மார்ச் 29
இமையாணன் ஸ்ரீ முருகன் ஆலயத்தின் கும்பாபிசேகம் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி இடம் பெறவுள்ளது.

எண்ணைக் காப்புச் சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 7 மணிமுதல் மாலை 5 மணிவரை இடம்பெறும்

கும்பாபிசேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிசேகம் 24 நாள்கள் இடம்பெற்று , எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு 1008 சங்குகளுடன்சங் காபிசேகம் இடம்பெற்று, இரவு தெருவீதியுலா இடம்பெறும். மறுநாள் இரவு 7 மணிக்கு திருக் கல்யாண உற்சவம் இடம் பெறும். (ற–ஐ–108)

### இரு நூல்களின் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 29
ந. அரியரட்ணம் எழுதிய சந்நிதியும் அன்னதான மண்டபங்களும், சந்நிதியான் அற்புதங்கள் என்னும் இரண்டு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு செல்வச்சந் நிதி தொண்டமானாறு செல்லையா ஐயர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆலயத் தலைவர் சிவஸ்ரீ ஆ.சிவசண்முகம்தலைமையில் நடைபெறவுள்ள நூல்வெளியீட்டு விழாவில், நூலுக்கான வெளியீட்டு உரையை யாழ். புற்றாளை மகா வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதனும், மதிப்பீட்டுரையை கலாநிதி ஆறு.திருமுருகனும் நிகழ்த்தவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற–ஐ–ரி5)

---

# அரசின் மெகா பொலிசி திட்டக் குழுவில் வர்த்தகர்கள் உள்வாங்கப்பட வேண்டும்



மூதூர்,மார்ச் 29
நல்லாட்சி அரசால் முன்னெடுக்கப்படவுள்ள மெகா பொலிசி திட்ட ஆலோசனைக் குழுவில், கிழக்கில் உள்ள வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் மாவட்டத்தில் உள்ள வளங்கள் மற்றும் வாய்ப்புக்கள் பற்றிய ஆலோசனையை வழங்க முடியும் என திருகோணமலை மாவட்ட வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் கே.குலதீபன் தெரிவித்தார்.

திருகோணமலை ஜேகப் பாக் விடுதியில் நேற்று இடம் பெற்ற கிழக்கு மாகாண வர்த்தக சம்மேளனங்களில் ஒன்றியத்தின் கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது கிழக்கில் உள்ள மட்டக்களப்பு அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் வர்த்தக சம்மேளனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

இலங்கையில் உள்ள ஏனைய மாகாணங்களில் பெரும்பாலான மாகாணங்களில் மாகாண மட்டத்திலான வர்த்தக சம்மேளனங்கள் உள்ளன. இதனால் அரச மட்டத்தில் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியிலும் தங்களது தேவைகளையும் பிரச்சினைகளையும் தெரிவித்து நன்மைகளைப் பெறக் கூடியதாகவும் உள்ளது.

இதற்கு அவர்களின் ஒற்றுமையே காரணம். கடந்த காலங்களில் இவ்வாறான ஒன்றியத்தை ஏற்படுத்தப் பல்வேறு தடைகள் இருந்தன. இன்று நல்லாட்சி அரசில் அது சாத்தியமாகியுள்ளது.

> நாட்டில் தற்போதய அபிவிருத்திப் பயணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பல்வேறு திட்டங்களின் ஒப்பந்தங்கள் மாகாண மட்ட ஒப்பந்தகாரர்கள் மூலம் நடை முறைப் படுத்தப்பட வேண்டும்.

நாட்டில் தற்போதைய அபிவிருத்திப் பயணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பல்வேறு திட்டங்களின் ஒப்பந்தங்கள் மாகாண மட்ட ஒப்பந்தகாரர்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

எனவே தான் மாகாணத்தின் முதலீடும், பொருளாதாரமும் கிழக்கு மாகாணத்துக்குள் சுழலும். இது மாகாணத்தை வளமுள்ள மாகாணமாக வைத்திருக்க உதவும். – என்றார். (ற–ஐ–40)

---

### பழைய மாணவர் சங்கம் ஆரம்பிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கல்லூரியின் பணிப்பாளர் சு. முகுந்தன் தலைமையில் நேற்றுக் காலை 10.30மணிஅளவில்,அதற்கான கூட்டம் இடம்பெற்றது. அதில் தொழில்நுட்பவியல் கல்லூரிப் பணிப்பாளர், மேலதிக பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களின் உரைகளைத் தொடர்ந்து நிர்வாக சபை உறுப்பினர்களின் தெரிவு இடம்பெற்றது.

சங்கத் தலைவராக சி.சிவஜன் செயலாளராக பி.பிரணவன், பொருளாளராக இ.குகன் ஆகியோருடன் 15 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (வ–4)

### விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி,மார்ச் 29
வீதி வளைவில் சைக்கிளும், மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளோட்டிக்கு கால் முறிந்தது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை மந்துவில் மேற்கில் இடம்பெற்றது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் பாதுகாப்பு அலுவலராகக் கடமையாற்றும் மந்துவில் வடக்கைச் சேர்ந்த இளைஞர், கடமைக்குவந்துகொண்டிருந்த போது, அரிசி ஆலையில் நெல் குற்றிக் கொண்டு சைக்கிளில் சென்ற மந்துவில் மேற்கைச் சேர்ந்த 56 வயது குடும்பப் பெண் வீதியின் குறுக்கே சென்றதால் விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் இருவரும் சாவகச்சேரி வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற–ஐ–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்து வீட்டை அசைத்தால் மில்லியன் ரூபா தருகின்றேன்

## சவால் விடுகிறார் அமைச்சர் சுவாமிநாதன்

கொழும்பு, மார்ச் 29

பொருத்து வீட்டுக்குச் சமையல் எரிவாயு ஏன் கொடுத்தனர் என்று கேட்கின்றனர். விறகு ஒரு கிலோ 15 ரூபா. மாதாந்தம் விறகுக்கு மாத்திரமே 3 ஆயிரம் ரூபா தேவை. ஆனால் சமையல் எரிவாயுவுக்கு ஆயிரத்து 450 ரூபா தான் தேவை. பொருத்து வீடு 3 தொன் நிறையுடையது. அதனை அசைக்க முடியாது. ஆனால் அந்த வீட்டைக் கையால் அசைக்க முடியும் என்று அரசியல்வாதி ஒருவர் சவால் விடுகின்றார். அப்படி அவர் அந்த வீட்டைக் கையால் அசைத்தாரானால் நான் மில்லியன் ரூபா கொடுப்பதற்கும் தயாராக இருக்கின்றேன். - இவ்வாறு அமைச்சர் சுவாமிநாதன் தெரி வித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம் கிராமங்களில் முதற்கட்டமாக மீள்குடியேற்ற அமைச்சால் கையளிக்கப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு லட்சத்து 32 ஆயிரம் வீடுகள் தேவை. ஆனால் முதலில் 65 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்குத் திட்டமிட்டோம். இந்த வீடுகளைக் கட்டுவதற்கு அரசிடம் பணம் இல்லை.

இந்த வீடுகளை எவ்வாறு கட்டிக் கொடுக்க முடியும் என்பதை அறியாது பத்திரிகைகளில் எழுதுகின்றனர். அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்திலே பேசுகின்றனர். எனவே இதற்கான பணத்தை எவ்வாறு பெறுவது என்று அறிந்து பேசுவது நன்று.

65 ஆயிரம் வீடுகளை கட்டும் திட்டத்தில் ஒரு நிறுவனம் பணத்தைக் கொண்டு வந்து முதலிட அந்தப் பணத்தைத் திருப்பி அரசு 12 வருட காலத்தில் கொடுக்க முடியுமானால் தான் அந்த வீடுகளைக் கட்ட முடியும். அதற்காகவே நாங்கள் இணை யத்தளங்கள் மற்றும் பத்திரி கைகளில் சர்வதேச ரீதியாக விளம்பரம் செய்தோம்.

அதில் உலகத்திலே பிரபல்யமான 56 கிளைகளைக் கொண்டதும் 2 லட்சத்து 25 ஆயிரம் ஊழியர்கள் வேலை செய்யும் முதலாவது பெரிய நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்தோம். மக்களுக்கு ஒரு முன்னேற்றத்தைக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் இருக்கின்ற நிலையில் அல்லவா இருக்க வேண்டும். அப்படி முன் னேற்றம் இல்லாது வாழ வேண்டுமா? 30 வருட காலம் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் - முஸ்லிம் - சிங்கள மக்களுக்கு வேண்டியதைக் கொடுக்க வேண்டும். அந்த மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைக் உயர்த்த வேண்டும். அவர்களும் இவ்வாறான வீடுகளே தேவை என்கிறார்கள்.

> இந்த வீட்டுத் திட்டத்தை நான் செய்து முடிப்பேன். பிரச்சினை இருந்தால், எதுவும் பிழையிருந்தால் அதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். உங்களுக்குத்தான் நான் செய்கின்றேன். உங்கள் கட்சிக்குத்தான் செய்கின்றேன். உங்கள் கட்சிக்கு செய்ய வேண்டாம் என்றால் நான் செய்யமாட்டேன்.

தற்போது திறந்து வைத்துள்ள வீடுகள் (கல் வீடுகள்) தொடர்பாக நான் பேச விரும்பவில்லை. ஆகையால் அப்படியான வீடுகளைக் கொடுத்தால் திரும்ப அதே நிலையில்தான் மக்கள் இருப்பார்கள். அப்படியான நிலை தான் உங்கள் அரசியல்வாதிகளுக்கு வேண்டும். அதைத் தான் இந்த அரசியல்வாதிகள் கேட்கின்றார்கள்.

ஏன் சமையல் எரிவாயு கொடுத்துள்ளதாக சிலர் கேட்கிறார்கள். இன்று விறகு ஒரு கிலோ வாங்குவதற்கு 15 ரூபா தேவை. அவ்வாறாயின் மாதம் ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபா தேவை. ஆனால் சமையல் எரிவாயுவுக்கு ஆயிரத்து 450 ரூபா மட்டும் தான் தேவை.

கட்டப்படும் ஒவ்வொருவீடும் 3 தொன் நிறையுடையவை. அந்த வீட்டை அசைக்க முடியாது. அந்த வீட்டை கையால் அசைக்க முடியும் என்று ஓர் அரசியல்வாதி கூறினார்.

அந்த வீட்டை கையால் அசைக்க முடியுமானால் அவருக்கு நான் மில்லியன் ரூபா கொடுப்பதற்குத் தயாராகவுள்ளேன். நான் அந்த அரசியல் வாதியுடன் பந்தயம் பிடிப்பதற்கும் தயாராகவுள்ளேன். இந்த வீட்டுத் திட்டத்தை நான் செய்து முடிப்பேன். பிரச்சினை இருந்தால், எதுவும் பிழையிருந்தால் அதனை நான் ஏற் றுக் கொள் கின்றேன். செய்யாத பிழையை நான் எப்படி ஏற்றுக் கொள்வது.

நான் இப்படி வீடுகளைக் கட்டிக் கொடுத்தால் உங்கள் அரசியல் வாதிகளுக்குப் பயமாக இருக்கின்றதா? அரசியல்வாதிகள் பயப்படத் தேவையில்லை. உங்களுக்குத்தான் நான் செய்கின்றேன். உங்கள் கட்சிக்குத் தான் செய்கின்றேன். உங்கள் கட்சிக்கு செய்ய வேண்டாம் என்றால் நான் செய்யமாட்டேன்.

நான் யாழ்ப்பாணத்திலே, மட்டக்களப்பிலே வாக்குக் கேட்கத் தேவையில்லை. தமிழரசுக் கட்சிக்கு இன்னமும் ஆதரவு கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் நான் இதனைச் செய்கின்றேன். நான் சமுதாயத்துக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்கின்றேன். ஜனாதிபதியும் பிரதமரும் என்னிடம் கொடுத்த கடமையைச் செய்கின்றேன். அந்தக் கடமையைச் செய்வதற்கு இவர்கள் விடுவதாக இல்லை. சொல்வது எல்லாம் பொய்யாகவுள்ளது. உண்மையைச் சொன்னாலும் பரவாயில்லை. இந்தத் திட்டத்தில் களவு செய்வதாகவும் இல்லாத தொன்றைக் கூறுகிறார்கள் - என்றார். (ற-ஐ-5)

# பொலிஸின் மர்ம உறுப்பை கடித்த இருவர் கைதாகினர்

கொழும்பு, மார்ச் 29

கொஸ்கொட துவேமோதர எனுமிடத்தில் உப - பொலிஸ் பரிசோதகரின் அந்தரங்க உறுப்பைக் கடித்துக் காயப்படுத்தினர் என்று கூறப்படும் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் பொது இடத்தில் மதுபானம் அருந்திக் கொண்டிருந்துள்ளனர். அதனை உப - பொலிஸ் பரிசோதகர் கண்டித்துள்ளார்.

இதனையடுத்தே இவ்விருவரும் சேர்ந்து, உப-பொலிஸ் பரிசோதகரின் அந்தரங்க உறுப்பைக் கடித்துக் காயப்படுத்தியுள்ளனர். காயங்களுக்கு உள்ளான அவர், பலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ற-5)

# கோவாவில் கட்டப்படும் கப்பலை உயர் மட்டக் குழு பார்வையிட்டது

கொழும்பு, மார்ச் 29

இலங்கைக் கடற்படையினருக்காக இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டு வரும் இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களைப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தலைமையிலான உயர் மட்டக் குழுவினர் பார்வையிட்டுள்ளனர்.

இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களைக் கோவாவில் உள்ள, கோவா சிப்பிங்யார்ட் நிறுவனம் கட்டி வருகிறது. கப்பல்களைக் கட்டும் பணிகளைப் பார்வையிடுவதற்காக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தலைமையிலான உயர் மட்டக் குழுவினர் நேற்று முன்தினம் கோவா கப்பல் கட்டும் தளத்துக்குச் சென்றிருந்தனர்.

இந்தக் குழுவில் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா மற்றும் கடற்படை உயர் அதிகாரிகளும் இடம் பெற்றிருந் தனர்.

இதன்போது, கோவா சிப்பிங்யார்ட் நிறுவனத்தின் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ரியர் அட்மிரல் சேகர் மிட்டவலுடன், இலங்கைக் குழுவினர் பேச்சு நடத்தினர்.

கோவாவில் கட்டப்பட்டு வரும் இரண்டு ஆழ்கடல் ரோந்துப் படகுகளில் ஒன்று, 2017 ஓகஸ்ட் மாதமும், இரண்டாவது படகு அதற்கடுத்த ஆண்டும் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன. (ற-ஐ-5)

# மகிந்தவின் அலுவலகத்தில் குவியும் மக்களின் கோரிக்கைக் கடிதங்கள்

கொழும்பு, மார்ச் 29

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவித்து முன்னாள் ஜனாதிபதியும், குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்சவின் பத்தரமுல்ல அலுவலகத்தில் அதிக எண்ணிக்கையிலான கடிதங்கள் நாளுக்கு நாள் வந்து குவிந்தவண்ணம் உள்ளன என்று கூறியுள்ளார் அந்த அலுவலகத்தின் பிரதான அதிகாரி.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பத்தரமுல்லவில் எமது அலுவலகம் திறக்கப்பட்டது முதல், நல்லாட்சி அரசு இடைநிறுத்தியுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதிக எண்ணிக்கையிலான கடிதங்கள் வந்தவண்ணம் உள்ளன. .

இறப்பர், தேங்காய், தேயிலை போன்ற உற்பத்திப் பொருள்களுக்கு நிர்ணய விலையும், சாதாரண விலையும் கிடைப்பதில்லை. விவசாய மானியங்களுக்கும் பங்கம் விளைவிக்கப்படுகிறது. இராணுவத்தின் சுகபோகங்கள் இடைநிறுத்தப்படுகின்றன உள்ளிட்ட காரணங்களுடன், நல்லாட்சி அரசின் மீது பல குற்றச்சாட்டுகள் காரசாரமாக அந்தக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கவனம் செலுத்தியுள்ளார். தனிப்பட்ட ரீதியில் அவற்றுக்கான பதில்களும் அனுப்பப்பட்டுள்ளன. அத்துடன், குறித்த பிரச்சினைகள் தொடர்பில் கூட்டுஎதிரணியை நாடாளுமன்றில் குரல் எழுப்பும்படி உத்தரவிட்டுள்ளதுடன், உரிய நிறுவனங்களிலிருந்து பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் பொறிமுறையொன்றையும் செயற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. - என்றார். (ற-ஐ-5)

# தபால் பொதிகளின் ஊடாக போதைப் பொருள் கடத்தல்

## குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தகவல்

கொழும்பு, மார்ச் 29

போதைப் பொருள்களைத் தபால் பொதிகள் ஊடாகக் கடத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் தபால் திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்கு தொடர்பு உள்ளது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இங்கிலாந்து, பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஊடாக சிலர் மேற்கொண்டு வரும் சர்வதேச போதை மாத்திரை வர்த்தகத்துடன், தபால் திணைக்களத்தின் சிலருக்குத் தொடர்பு உண்டு என்பது ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக புலனாய்வுப் பிரிவினர், கொழும்பு மேலதிக நீதிவானுக்கு அறிவித்துள் ளனர்.

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட பொதியொன்று சுங்கப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படாது, உரிய விதிகளுக்கு புறம்பாக அதிவேக தபால் மூலம் விநி யோகம் செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பில் கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை அலுவலகத்தில் நடத்தப்பட்ட சோதனையின் போது, போதைப் பொருள்கள் தபால் பொதியூடாக விநியோகம் செய்யப்பட்டமை கண்டுபிடிக் கப்பட்டது என்று புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், அவரிடம் நடத்திய விசாரணைகளின் மூலம் பெருந்தொகைப் போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சிக்குள் பிளவு; உறுப்பினர்கள் விலக முடிவு

கொழும்பு, மார்ச் 29

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு தோன்றியுள்ளமையை அடுத்து சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கட்சியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர்களான பீலிக்ஸ் பெரேரா, இது தொடர்பில் கருத்துரைக்கையில், முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா, மகிந்த மற்றும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால ஆகியோர் கட்சியின் ஒற்றுமைக்காக பாடுபட வேண்டும் என்று கோரியுள்ளார்.

இது இடம்பெறாவிட்டால் கட்சியின் உறுப்பினர்கள் விலகிச் செல்வதைத் தடுக்க முடியாது போய் விடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். முன்னாள் அமைச்சர் பியசேன கமகே, முன்னாள் பிரதியமைச்சர்கள் மில்ரோய் பெர்னாண்டோ, சரண குணவர்த்தன ஆகியோர் இதற்குச் சமமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை தாம் விரைவில் உயிரிழக்க நேர்ந்தாலும், சுதந்திரக் கட்சி உயிரிழக்காது என்றும் முன்னாள் பிரதமர் டி.எம். ஜெயரட்ண அண்மையில் தெரிவித்திருந்தார். (ற-ஜ-5)

# இந்தியாவின் எக்சிம் வங்கி விரைவில் இலங்கையில்

கொழும்பு, மார்ச் 29

இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி (எக்சிம் வங்கி) இலங்கையில் விரைவில் கிளை ஒன்றைத் திறப்பதற்குத் திட்டமிட்டுள்ளது என்று புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் எக்சிம் வங்கி, இந்த மாதத் தொடக்கத்தில் பங்களாதேஷில் கிளை ஒன்றை ஆரம்பித்துள்ளது. இதையடுத்து இலங்கையில் அடுத்த கிளையைத் திறக்கும் முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

நேபாளம், சீனா, ஐவரி கோஸ்ட் ஆகிய நாடுகளிலும் கிளைகளை ஆரம்பிக்கும் முயற்சியில், இந்தியாவின் எக்சிம் வங்கி ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே வொஷிங்டன், லண்டன், சிங்கப்பூர், யங்கூன், அடிஸ்அபாபா, ஜெகன்ஸ்பேர்க் நகரங்களில் எக்சிம் வங்கியின் கிளைகள் இயங்குகின்றன.

இலங்கையில் புதிய கிளையை அமைப்பதற்கான ஒப்புதலுக்குக் காத்திருக்கின்றோம் என்று இந்தியாவின் எக்சிம் வங்கியின் தலைவர் யதுவேந்திர மாத்தூர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

# சுகாதாரச் சீர்கேடாக பாண் விற்றவருக்கு ரூ.12,000 அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

சுகாதார விதிமுறைகளுக்கு முரணாகவும், உரிய உணவு அதிகாரியின் அனுமதியின்றியும் பாண் விற்பனை செய்தவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்று 12 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தலுக்கமைய நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கடமையில் ஈடுபட்டிருந்த சுகாதாரப் பரிசோதகர் நடமாடும் பாண் விற்பனையில் ஈடுபட்ட ஓட்டோவை மறித்துச் சோதனை செய்தபோது சுகாதார விதிமுறைகளுக்கு மாறாகப் பாண் விற்பனை செய்தமை தெரியவந்தது.

இதையடுத்து சுகாதாரப் பரிசோதகரால் இவருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இவருக்கெதிராகச் சுமத்தப்பட்ட ஆறு குற்றச்சாட்டுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து நீதிமன்று அவருக்கு 12 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. (ற-ஜ-4,115)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெறும் மாய்மாலம் வேண்டாமே; பிரச்சினைக்குத் தீர்வு அவசியம்...

புதிய அரசமைப்பின் ஊடாக, வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதே எமது அரசின் நோக்கமும், விருப்பமும் ஆகும்.

அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு முன்வைக்கப்படாவிடின் தமிழ் இளைஞர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்தவே செய்வார்கள்.

அதனால் புதிய அரசமைப்புச் சட்டத்தின் மூலம் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து விடுவதே எமது அரசின் நோக்கம் ஆகும்.

அதனை இலக்காகக் கொண்டு, வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்களினது, தீர்க்கப்படாது உள்ள முக்கிய பிரச்சினைக்கு உகந்த தீர்வு காணப்பட வேண்டும். அதற்கு எமது அரசு முன்னுரிமை வழங்கும்.

மக்களின் கருத்துக்களை அறியும் நிகழ்வு ஒன்றில் மேற்கண்டவாறு தகவல் வெளியிட்டுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

வடக்கு, கிழக்கில் வாழும் மக்களின் தீர்க்கப்படாது உள்ள, இக்கட்டான முக்கிய பிரச்சினைகளை, மேலும் இழுத்தடித்துச் செல்லாமல்--

அவற்றுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்பட முடிவு செய்துள்ளோம்--என்றும் ஜனாதிபதி தகவல் வெளியிட்டிருக்கிறார்.

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, எமது அரசு முன்னுரிமை வழங்கி உள்ளது.

அதனை நாடி, போர் உண்டானதற்கான காரணங்கள் எவை என்பதை உள்ளார்ந்து கண்டறிந்து--

அந்த நிலைமை மீண்டும் எழாதிருக்க என்ன செய்ய வேண்டும் என்பதனைப் புரிந்து கொள்வது அவசியம்--என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டி உள்ளார்.

இறுதிப் போரின்போது, தமிழீழ விடுதலைப் புலிகள், அரசின் ஆயுதப் படையினரால் தோற்கடிக்கப்பட்ட போதிலும், அவர்களின் உயிர்கள் மடிந்த போதிலும், ஈழத்துக்கான கனவு, விடுதலைப் புலிகளின் ஈழத்துக்கான கொள்கை தோல்வி அடையவில்லை--என்றும் இந்த நாட்டின் அரசின் தலைவர் மனம் திறந்து கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இங்கே, உள்வாங்கப்பட வேண்டிய காத்திரமான விடயங்கள் பல உள்ளன. கடந்த காலங்களில், நாட்டில் பயங்கரவாதப் பிரச்சினை ஒன்றே உண்டு. வேறு எதுவும் இல்லை என்று பூசி மெழுகப்பட்டு வந்தது.

முள்ளிவாய்க்கால் போருடன் அதனை முன்னிறுத்த முடியாத, சங்கட நிலை இலங்கை அரசுக்கு உண்டானது. அதேவேளை பிரச்சினை அனைத்துலக மயப்பட்ட நிலையில், நாட்டின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று ஒப்பாசாரத்துக்கு எடுத்தியம்பப்பட்டு வந்தது.

ஆனால் அதனைப் புரட்டிப் பார்க்க, இப்போதைய அரசு ஒரு சதவீதமேனும் விரும்பவில்லை என்பதே உள்ளார்ந்த உண்மை.

அத்தகைய ஒரு நிலை மேலெழக் கூடாது என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. அனைத்துலக நாடுகளும் அதனையே விரும்புகின்றன.

ஆகையால், நல்லாட்சி அரசு வெறும் வாய்மாலம் காட்டாமல், உருப்படியாகச் செயற்பட்டு, வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களிடம் இருந்து பிரித்து எடுக்க முடியாத உரிமைகளை உருப்படியாக வழங்க வேண்டும். நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாமா? வெறும் மாய்-வாய்-மாலங்கள் வேண்டாமே...!

# நனையும் ஆடுகளுக்காக கவலைப்படும் ஓநாய்கள்!

வந்தியத்தேவர்

வடக்கில் படைகள் தமது முகாம்களைத் தொடர்ந்தும் பலப்படுத்தி விரிவாக்கி வருவதைக் காணமுடிகிறது. கோட்டை கொத்தளம் போன்ற வாயில்களுடன் முகாம்கள் ஒவ்வொன்றும் விரிவாக்கம் பெறுகின்றன. உண்மையில், தற்சமயம் வட பகுதியில் படைகளை நிறுத்தி வைத்திருக்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? இது எப்படி நல்லிணக்கத்துக்கு உதவும்? போரின் போது மக்களை மிகமோசமான இம்சைக்குள்ளாக்கியவர்கள் அரச படையினர்கள். அவர்களை விலக்கிக் கொள்வதிலே அப்படி என்ன தவறு இருந்துவிடப்போகிறது? தான் நிறுத்திய படைகளை யாழ்ப்பாணத்தில் இருந்து விலக்க முயற்சிக்கிறார்கள் என்று கூறும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு நாட்டை முன்னோக்கி இட்டுச் செல்லும் நோக்கம் இல்லை. ஆனால் அவரோ நாட்டை முன்னோக்கி இட்டுச் செல்லும் நோக்கம் இந்த அரசுக்கு இல்லை என்பதும் தமக்குக் கவலை – என்கிறார்.

> நாட்டை ஆட்சி செய்வதும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே, எனினும் அரசுத் தலைவர் ஒப்புக்கேனும் சில நல்ல நடவடிக்கைகளை எடுக்க முயற்சிக்கும்போது அதைக் கூடப் பொறுத்துக் கொள்ளமுடியாதவர்களாக கோத்தபாய போன்றோர் இருப்பதாலேயே இந்த நாடு சீரழிந்து வருகிறது.


நாட்டை முன்னோக்கி இட்டுச் செல்வது என்றால் வெள்ளை வானில் ஆள்களைக் கடத்திக் காணாமற்போக வைப்பதா? பத்திரிகையாளர்களைப் படுகொலைக்கு உள்ளாக்குவதா? படையினரைத் தவறான வழியில் பயன்படுத்துவதா? இவற்றின் மூலம்தான் நாட்டை முன்னோக்கி நகர்த்த முடியும் என்று கோத்தபாய நம்புகிறாரா?

நாட்டின் பாதுகாப்பு என்பது மக்களின் பாதுகாப்பு. மக்களையும் நாட்டையும் பாதுகாக்க வேண்டிய முக்கிய பதவியை வகித்த அவர், நாட்டையே கொலைக்களமாக்கிவிட்டு இப்போதைய அரசு நாட்டை முன்னோக்கி இட்டுச் செல்லும் நோக்கமின்றி இருக்கிறது–என்கிறார். தேசத்தை நேசிக்கும் ஒருவராகத் தன்னைக் காட்டி மக்களை ஏமாற்ற முனைகிறார். குருதி ஆறு வற்றி விட்டதால் நாடு முன்னோக்கி நகர முடியாது போய் விட்டது, அதற்கு இந்த அரசு காரணமாகி விட்டதே என்று கவலைப்படுகிறாரோ தெரியாது. குருதி ஆறு பெருக்கெடுத்து ஓடாததால் படுகொலைகளின் விளைச்சல்கள் பாதிக்கப்பட்டுள்ளதே என்று விசனப்படுகிறார் போலும்.

நாட்டில் இனவாதக் குழுக்களும், அவற்றுக்கு ஆதரவு வழங்கும் பெரும்பான்மைப் பிரிவும் நாட்டில் உள்ளன. நாட்டை ஆட்சி செய்வதும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே, எனினும் அரசுத் தலைவர் ஒப்புக் கேனும் சில நல்ல நடவடிக்கைகளை எடுக்க முயற்சிக்கும்போது அதைக் கூடப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்களாக கோத்தபாய போன்றோர் இருப்பதாலேயே இந்த நாடு சீரழிந்து வருகிறது.


இலங்கையைக் கட்டியெழுப்ப, அதை முன்னோக்கி நகர்த்த விருப்பம் கொண்டு தற்போதைய அரச தலைவர்கள் மக்களின் ஒத்துழைப்பைகோரும் போது, மைத்திரிபால சிறிசேன முயன்று வரும் போதும், அந்த முயற்சியைக் கைகூடாமல் தடுப்பதற்கு சகோதரர்கள் அணி

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பலதரப்பட்ட உத்திகளையும் முன்னெடுக்கிறது. அதன் வெளிப்பாடே கோத்தபாயவின் அண்மைய கூற்று.

அண்மையில் நாடு முழுவதும் இடம்பெற்ற மின்தடைக்குக் காரணம் மகிந்த ராஜபக்ச அணியினரே என்ற குற்றச்சாட்டும் ஒரு பக்கம் உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனப்பிழையாக இருக்க வேண்டும் என்பதைப்போல, தங்களுக்கு ஆட்சி அதிகாரம் கிடைக்க வேண்டும் என்பதற்காக இவர்கள் எதைச் செய்யவும் தயங்க மாட் டார்கள். அரசை மக்கள் திட்டினால் போதும் என்ற மனப்பாங்கு அவர்களுக்கு. இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுத் தருமாறு மன்றாடவும், நல்லாட்சி அரசின் மீது குற்றம் சுமத்தவும் நாமல் ராஜபக்ச, உதயகம்மன்பில, கெஹலிய ரம்புக்வெல போன்றவர்கள் ஜெனிவாவுக்குச் செல்லவுள்ளனராம். என்ன ஒரு வேடிக்கை பாருங்கள்!

எவரை எங்கே வைப்பது என்று தென்பகுதியில் உள்ள மக்களில் அனேகருக்குத் தெரியாததன் விளைவு இது. மகிந்த அணி முழுமையாக அரசியலில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய ஒன்று. நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்குத் தடையாக இருக்கும் இவர்களைப் போன்றவர்கள் அப்புறப்படுத்தப்பட்டால் மட்டுமே, இந்த நாடு புதிய பாதையில் பயணிப்பது சாத்தியமாகும். இல்லையேல் குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டுவது போல மீண்டும் மீண்டும் ஒரே தடத்திலேயே நாடு சுற்றிக்கொண்டிருக்க வேண்டி யிருக்கும்.

> **அண்மையில் நாடு முழுவதும் இடம்பெற்ற மின்தடைக்குக் காரணம் மகிந்த ராஜபக்ச அணியினரே என்ற குற்றச் சாட்டும் ஒரு பக்கம் உண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது. தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை, எதிரிக்குச் சகுனப்பிழையாக இருக்க வேண்டும் என்பதைப்போல தங்களுக்கு ஆட்சி அதிகாரம் கிடைக்க வேண்டும் என்பதற்காக இவர்கள் எதைச் செய்யவும் தயங்க மாட்டார்கள்.**

எத்தனை தடைகள் வந்தாலும் எமது பயணத்தை எவராலும் தடுக்க முடியாது, எவருக்கும் நாம் அஞ்சப் போவதில்லை என்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கூற்று சற்று தமிழ் மக்களுக்கு ஆறுதலளிக்கிறது. ஆனாலும் அது அவரால் முடியுமான காரியமா என்ற கேள்வி எழவே செய்கிறது. மகிந்த அணியினர் முன்னெடுக்கும் கடுமையான நிலைப்பாடுகள், சிங்கள பௌத்த வெறி கொண்ட மக்கள் கூட்டத்தை அவர்கள் பின்னால் அணிதிரள வைக்கின்றது. அதனை முறியடிப்பதற்கான உத்திகள் இந்த அரசிடமோ, ஜனாதிபதியிடமோ இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் மக்கள் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை முழுமையாக ஏற்று அதனை நிறைவேற்றி வைக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தென்பகுதி மக்கள் முழு ஒத்துழைப்பை வழங்கினால் மட்டுமே, மகிந்த அணியிரை அகற்றி இந்த நாட்டை விரைவில் முன்னேற்ற முடியும். இது குறித்து சிந்தித்துச் செயலாற்ற தென்பகுதி மக்கள் முன்வரவேண்டும்.

## நீர் நிலைகள் கவனிக்கப்படுமா?

வடக்கு மாகாணத்தைப் பிரதிபலிக்கும் ஆறுகளில் ஒன்றான வழுக்கையாறு வலிகாமத்தில் உள்ள 4 பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கியது. இந்த வழுக்கையாறு, தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு, சங்கானை பிரதேச செயலர்பிரிவு என்பவற்றை உள்ளடக்கிப் பினாக்கைக்குளம் முதல் கல்லுண்டாய் வரை ஊடறுத்துச் செல்கின்றது.

போர் நடைபெற்ற காலங்களில் இந்த வாய்க்காலுடன் தொடர்புடைய குளங்களாகிய பினாக்கைகுளம், பெருமாக்கடவைக்குளம், கந்தரோடை குளம், கண்ணகி அம்மன்குளம், ஆலங்குழாய்க்குளம் மற்றும் இதனுடன் தொடர்புடைய சிறிய குளங்கள் வாய்க்கால்கள் என்பவை காலத்துக்குக் காலம் ஆழமாக்கப்பட்டு, துருசுகள் எல்லாம் கதவுகள் போடப்பட்டு நீர்நிலைகள் பாதுகாக்கப்பட்டு, இவற்றுக்கு மேலாக சீரணி 5 கண் மதவும் சிறந்த முறையில் கதவுகள் பொருத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தது. தற்போது இந்த 5 கண் மதவும் இடம் தெரியாமல் போய்விட்டது. மேற் குறிப்பிட்ட இடங்களில் எத்தனை ஆயிரம் விவசாயிகள் இந்தக் குளங்கள், வாய்க்கால்களை நம்பி வாழ்கின்ற நிலையில், எமது வட மாகாண அரசோ மத்திய அரசோ இதுகுறித்துக் கவனத்தில் கொள்வதில்லை. ஏன் எமது பிரதேச செயலகங்களில் இடம்பெறும் அபிவிருத்திக்குழுக் கூட்டங்களில் கூட இந்த விடயம் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. தற்போது நல்லாட்சி அரசு என்று சொல்லிக் கொள்கின்றவர்கள் விவசாயத்துக்கு முன்னுரிமை அளிப்பவர்கள் கூட, இந்த விடயத்தில் கவனம் எடுத்தால் இங்கு நீர் நிலைகள் பாதுகாக்கப்படும். இதை நம்பியுள்ள விவசாயிகளும் நன்மை அடைவார்கள்.

மேற்குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் வாழும் மக்கள் கூட வெள்ளப்பாதிப்பில் இருந்து பாதுகாக்கப்படுவார்கள். எனவே எதிர் காலத்திலாவது இந்த நீர் நிலை பாதுகாக்கப்படுமா?

வலிகாமத்தான்

## கிராமப்புற மக்களின் வைத்திய தேவைகளையும் கவனியுங்கள்

கிராமப்புறங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு வைத்தியர்களை அனுப்புவது எப்பொழுதுமே சவாலுக்குரிய விடயமாகவுள்ளது.

புதிதாக நியமனம் பெறும் எம்பிபிஎஸ் வைத்தியர்கள் தமது உயர்கல்வி வாய்ப்புக்களைக் கருத்தில் கொண்டு வசதிகளைக் கொண்ட நகர்புற வைத்தியசாலைகளையே தெரிவு செய்கின்றனர்.

ஹிப்போகிறற்றீஸ் வாக்குறுதிகளும், பெற்ற இலவசக்கல்வியும் மறக்கப்படுகின்றன.

கிராமப்புற வைத்தியசாலைகளைக் கவனத்தில் கொண்டே ஆர்எம்பி, ஏஎம்பி வைத்திய சேவைகள் உருவாக்கப்பட்டன. இப்போது இந்தச் சேவையில் உள்ள வைத்தியர்கள் இன்னமும் சில வருடங்களில் இளைப்பாறியவுடன் இந்த இரண்டு சேவைகளும் முடிவுக்கு வரும்.

இந்தப் பயிற்சிகளை யார் எதற்காக நிறுத்தினார்கள் என்பது தெரியவில்லை.

ஆர்எம்பி, ஏஎம்பி தகுதிகொண்ட வைத்தியர்கள் சிறந்த சேவையாற்றியுள்ளார்கள். என்பதனை நாம் மறுக்க முடியாது. எனவே கிராமப்புற மக்களின் நலன்களைக் கவனத்தில் கொண்டு இந்த வைத் திய சேவைகளை மீள ஆரம்பிப்பது பற்றி சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

வாசகன்
பீற்றர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Faceboo
Twitter

# தவறான தகவல் அனுப்பியதற்கு மன்னிப்புக் கோரியது பேஸ்புக்

வொஷிங்டன், மார்ச் 29
பாகிஸ்தானில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பாதுகாப்பாக இருக்கிறீர்களா என்ற பேஸ்புக் செயலி ஒன்று உலகம் முழுவதும் உள்ள பேஸ்புக் பாவனையாளர்களைச் சென்றடைந்துள்ளது. இந்தத் தவறுக்கு பேஸ்புக் நிறுவனம் மன்னிப்பு கோரியுள்ளது.
பாகிஸ்தானில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இருந்து பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்தச் செயலி பாகிஸ்தானிலுள்ளபாவனையாளர்களுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் தவறுதலாக அது உலகில் உள்ள அனைத்துப் பாவனையாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. குண்டு வெடிப்பு இடம் பெற்ற இடத்தைக் குறிப்பிடாமல், குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டீரா எனக் கேள்வி கேட்கப்பட்டுள்ளது.
இந்தத் தவறுக்கு பேஸ்புக் நிறுவனம் மன்னிப்புக் கோரியுள்ளது.
இது தொடர்பில் தகவல் தெரிவித்த பேஸ்புக் ஊடகப் பேச்சாளர், லாகூரில் இருக்கும் பாவனையாளரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்த செயலியைச் செயற்படுத்தினோம். தவறுதலாகத் தகவலைப் பெற்றுக் கொண்ட ஏனைய பாவனையாளர்களிடம் மன்னிப்பு கோருகின்றோம் என தெரிவித்துள்ளார்.
பேஸ்புக்கின் இந்தத் தற்செயலான தவறுக்குப் பலரும் டுவிட்டரில் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். (த-ரி4)

# அமெரிக்காவில் வெடித்தது எரிமலை



அலாஸ்கா, மார்ச் 29
அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் உள்ள அலெசுயன் தீவுகளில் உள்ள எரிமலை வெடித்துள்ளது எனப் புவியியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 20 ஆயிரம் அடி உயரத்திற்குச் சாம்பல் எழும்பியது. பவ்லோக் எனப்படும் எரிமலையே இவ்வாறான வெடிப்புக்குள்ளாகியது.
அலெசுயன் பகுதியில் செயற்பாட்டில் உள்ள எரிமலை பவ்லொக் ஆகும். தற்போது இது வெடித்துள்ளதால் அப்பகுதி மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
2013 ஆம் ஆண்டு இந்த எரிமலை வெடித்த போது 27 ஆயிரம் அடி உயரத்திற்குச் சாம்பல் எழுந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த-ரி4)



# வன்முறையில்

# பெல்ஜிய சம

## ஆர்ப்பாட்டக்காரர்கள் மீ
## தண்ணீர் பாய்ச்சியதால்

பிரஸ்சல்ஸ், மார்ச் 29
பெல்ஜியத் தலைநகர் பிரஸ்சல்ஸில் நேற்று முன்தினம் சமாதானப் பேரணி இடம்பெற்றது. டி-லா-போர்ஸ் பகுதியில் ஐ.எஸ். அமைப்பைக் கண்டித்து ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டக்காரரைக் கலைக்க பொலிஸார் தண்ணீரைப் பீய்ச்சி அடித்தனர். ஆனாலும் பொலிஸாரால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.
கடந்த வாரம் பெல்ஜியத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது.
முன்னதாக பேரணி ஏற்பாட்டாளர்களைத் தாமதமாக ஏற்பாடு செய்யும்படி அதிகா
பாட்டக்காரர்கள் திட்
பேரணியின்போது
பாட்டக்காரரில் சில
ரின் இந்த நடவடிக்
இந்த நிலையில் நாட்
நடவடிக்கைக்குத் த
அமைதியாக இடம்
யீடு தேவையற்றது.
கண்டிக்கிறேன் என
இதற்கிடையில் குண்



அமெரிக்காவின் போண்டரண்ட் மாகாணத்தில் வயோமிங் பகுதியில், எல்க் எனப்படும் ஒரு வகை ஆட்டு இனம் வேட்டையாடப்பட்டுள்ளது. 19 எல்க் வகை ஆடுகள், வேட்டையாடும் போட்டி ஒன்றின்போது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளன. முன்னதாக அப்பகுதியில் வசிக்கும் ஓநாய்கள் ஆபத்தான இனப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. எல்க்குகள் ஓநாய்களின் உணவாகும். 19 எல்க்குகள் கொல்லப்பட்டமை 9 ஓநாய்களைக் கொன்றதற்குச் சமன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி4)

## கார்க் கடத்தலில்
## கலிபோர்னியாவி

கலிபோர்னியா, மார்ச் 29
கார்க் கடத்தலில் ஈடுபட்ட பெண் ஒருவர் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள சிமி பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.
குறித்த பெண், தான் கடத்திய கா
எடுத்துக் கொண்டு மிக வேகமாகச் சென்றுள்ளார். இதன்போது அவர் சென்ற வாகனத்தை நிறுத்த பொலிஸார் முயற்சித்துள்ளனர். எனினும் போக்குவரத்து விதிகளையும் மீறி,

## டொனால்ட் டிர
## சவுதிக்கு எச்சரிக்

வொஷிங்ரன், மார்ச் 29
ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புக்கு எ
வடிக்கையை சவுதி அரேபியா மேற்கொள்
என்றால் அந்த நாட்டில் இருந்து கச்சா எ
வாங்குவது நிறுத்தப்படும் என டொனா
எச்சரிக்கை விடுத்துள்ளார்.
அமெரிக்காவில் குடியரசு கட்சியின்
வேட்பாளர் போட்டியில் இருக்கும் டொனா
வெளியுறவுக் கொள்கை குறித்து நி
ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்துள்ள செவ்
அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அதில், ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு
போரிட சவுதி அரசு ராணுவத்தை அனுப்ப
என்று வலியுறுத்தியுள்ளார். (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ... முடிவடைந்தது
# ...ாதானப் பேரணி
## ...து பொலிஸார்
## வெடித்தது மோதல்

...ிகள் உத்தரவிட்டனர். இதனை மறுத்த ஆர்ப் ...மிட்ட தினத்தில் பேரணியை நடத்தினர். பலர் ... தமது அஞ்சலியைச் செலுத்தினர். ஆர்ப் ...ரைப் பொலிஸார் கைது செய்தனர். பொலிஸா ...கை பலரை முகம் சுழிக்க வைத்தது.
...டின் பிரதமர் சார்லஸ் மைக்கல், பொலிசாரின் ...னது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார். ...பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொலிஸாரின் தலை ... அவர்களின் இந்தச் செயலை வன்மையாகக் ... அவர் தெரிவித்தார்.
...ாடுவெடிப்புடன் தொடர்புடையவர்கள் என சந் தேகிக்கப்படும் 4 குற்றவாளிகளை நாடு தழுவிய ரீதியில் பொலி சார் தேடி வருகின்றனர்.
டபெல், மெசெலன் ஆகிய நகரங்களில் 13 இடங்களில் நேற்று முன்தினம் பொலிஸார் அதிரடிச் சோதனைகளை நடத்தினர். அப் போது சந்தேகத்தின் பேரில் 9 பேரைப் பொலிஸார் விசார ணைக் காகப் பிடித்துச் சென்றனர். பின்னர் இவர்களில் 5 பேர் விடுவிக் கப்பட்டனர். பொலிஸாரின் விசாரணை வளையத்தில் உள்ள மீதி 4 பேருக்கும் பிரஸ்சல்ஸ் நகரில் தாக்குதல் நடத்திய தீவிரவாதி களுக்கும் மிகவும் நெருக்கமான தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கும் பொலிஸார் பிடிபட்டவர்களிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (த-ரி4)

# பேஸ்புக்கில் பொலிஸுக்கு எதிராகக் கேலிச் சித்திரம்
## 18 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்

ஒகியோ, மார்ச் 29
அமெரிக்காவின் ஒகியோ மாகாணத்தில் ஒருவர் பொலிஸ் திணைக்களத்தைக் கேலி செய்து சித்திரம் வரைத்து பேஸ்புக்கில் பதிவேற்றிய குற்றச்சாட்டில் 18 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் எனப் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அன்ரனி நொவாக் எனப்படும் 27 வயதான நபரே குறித்த குற்றச் செயலுக்காகத் தண்டனையைப் பெறவுள்ளார்.
பொது மக்களுக்கான சேவையை வழங்குவதில் பொலிசார் அக்கறை காட்டுவதில்லை எனப் பொருள்பட இந்தக் கேலிச்சித்திரம் அமையப்பெற்றுள்ளது.
இந்தச்செயற்பாட்டுக்கு உச்சபட்சத் தண்டனையாக 18 மாதங்கள் சிறை வழங்கப்படலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன் அவரது முகநூலில் இருந்த கேலிச்சித்திரங்களும் அழிக்கப்பட்டன.
மேலும் இந்த நபர் அரசுக்கு முரணாக மூன்று செய்திகளைப் பிரசுரித்திருந்தார். இவற்றின் மூலம், அரசு, பொலிஸார் தரப்பினரை இழிவுபடுத்தியதுடன், மக்கள் அவர்கள் மீது வைத்த நம்பிக்கையைச் சிதைக்கும் வகையில் ஊழல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தமையால் விசாரணை செய்யப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டது.
இது குறித்துப் பொலிஸார் தமது சமூக வலைத்தளத்தில், குறித்த நபர் தொடர்பில் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. போலி முகநூலில் பதிவேற்றப்பட்டவையைநம்பவேண்டாம்எனப் பொது மக்களைப் பொலி ஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (த-ரி4)



# மாசுள்ள குடிதண்ணீரை பருகும் நாடுகளில் இந்தியா முதலிடம்

ஐக்கிய இராச்சியத்தின் நீர் நிறுவன அறிக்கையின்படி உலக நாடுகளில், தூய்மையற்ற நீரை அதிகளவில் பருகும் மக்கள் எண்ணிக்கையைக் கொண்ட நாடு இந்தியா என அறிவிக்கப்பட்டுள்ளது.
2016 ஆம் ஆண்டுக்கான உலக நீர்ப் பாவனைபற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டன.சுவதேசஅமைப்பின் கருத்துப்படி 7.58 கோடி பேர் அல்லது 1.25 பில்லியன் மக்கள் தொகையில் 100 இல் 5 பேர் பாதுகாப்பான, விலை உயர்ந்த குடிதண்ணீரைப் பருகுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-
7 கோடியே 57 லட்சத்து 77 ஆயிரத்து 997 பேர் பாதுகாப்பற்ற குடிதண்ணீரைப் பருகுகின்றனர். பாதுகாப்பற்ற நீர் பருகும் நாடுகளின் பட்டியலில் முதலாவது இடத்தை இந்தியா பெற்றுக் கொண்டுள்ளது. இந்தியாவில் நிலவும் மோசமான நீர் முகாமைத்துவமே இந்த நிலைமைக்கு காரணம் ஆகும். அத்துடன் அதிகரித்துவரும் சனத்தொகைக்கு குடிதண்ணீர் வழங்குவது சவாலான விடயமாக மாறியுள்ளது.
நீர் வழங்கும் நிறுவனங்கள் 85 சதவீதம் சுகாதாரமான நீரை வழங்கியபோதிலும், இந்தியாவில் இவற்றின் தரம் 56 சத வீதமாக வீழ்ச்சியடைந்துள் ளன. நீர்ப்பம்பிகளே நீருக்கான நெருக்கடி நிலையை மோசமாக்குகின்றன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஆபிரிக்கா, சீனா ஆகிய நாடுகளில் 63 மில்லியன் மக்கள் சுகாதாரமற்ற நீரைப் பருகுகின்றனர். உலக அளவில் 1990 ஆம் ஆண்டில் இருந்து உலக நடப்புகளினால் 2.6 பில்லியன் மக்கள் சுகாதாரமான நீரைப் பெறும் வகையில் முன்னேற்றம் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி4)

## ...ஈடுபட்ட பெண் ...ில் கைதானார்

...வாகனத்தை நிறுத்தாமல் சென்ற அந் ...தப் பெண்ணைப் பிடிப்பதற்கு பொலி ...ஸார் உடனே தீவிரம் காட்டியுள்ளனர். ...பின்னர் பல பொலிஸ் கார்கள் அந்த ...வாகனத்தை விரட்டியுள்ளன. இறுதி ...யாக ஓர் இடத்தில் அந்தக் கார் நிறுத் ...தப்பட்டதும், காரில் இருந்த பெண் ...இறங்கி பொலிஸ் காரில் ஏறித் தப்பிக்க ...முயற்சித்துள்ளார். எனினும் மிக ...வேகமாகச் செயற்பட்ட பொலிஸார் ...அவரை மடக்கிப் பிடித்துள்ளனர். பின் ...னர் அப்பெண் கைது செய்யப்பட் ...டார். (தி

# ஆப்கன் நாடாளுமன்றம் மீது நேற்று ஏவுகணைத் தாக்குதல்

காபூல், மார்ச் 29
ஆப்கனின் புதிய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி மீது ஏவுகணைத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. நேற்று இடம் பெற்ற இந்தத் தாக்குதலில், சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.
4 ஏவுகணைகளில் ஒன்று நாடாளுமன்றக் கட்டடத்துக்கு அண்மையில் விழுந்து வெடித்தது. ஆப்கனின் பாதுகாப்புப் படையினர், நாடாளுமன்ற உறுப்பி னருடன் கலந்துரையாடக் கட் டடத்தினுள் நுழைந்தபோது இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட் டுள்ளது.
பாகிஸ்தானில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் பின்னர் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. தாக்குதல் தொடர்பில் இதுவரை எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. குறித்த புதிய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி இந்தியாவால் கட்டப்பட்டதாகும், இந்திய- ஆப்கன் உறவைப் பலப்படுத்தும் வகையில் இது நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

## ...ம்ப் ...க்கை

...திரான நட ...ளவில்லை ...ண்ணெய் ...ல்ட் ரம்ப்
...ன் அதிபர் ...ல்ட் டிரம்ப், ...யூயோர்க் ...வியிலேயே
... எதிராகப் ... வேண்டும்

# ஆண் வேடத்தில் வாழ்ந்த பெண்

இஸ்லாமாபாத், மார்ச் 29
வடமேற்கு பாகிஸ்தானில் உள்ள ஒருநகரம்தென்வசிரீஸ். ஆப்கானிஸ்தான் எல்லை அருகேயுள்ள இந்தப் பகுதி தலிபான் தீவிரவாதிகளின் கோட்டையாகத் திகழ்கிறது.
உலக அளவில் மிகவும் ஆபத்தான இடங்களின் பட்டியலில் இது இடம்பெற்றுள்ளது. இங்கு பெண்களுக்கு அதிக கட்டுப்பாடுகள் உள்ளன. அங்கு பெண்கள் வீட்டை விட்டு வெளியில் செல்ல முடியாது. கல்வி கற்கவோ, ஆடம்பர உடை அணியவோ அனுமதி இல்லை.



இவ்வளவு கட்டுப்பாடு மிக்க இந்தப் பகுதியில் ஒரு பெண், ஆணைப் போன்று வேடம் அணிந்து வசித்துள்ளார். ஒரு விளையாட்டு வீராங்கனை ஆக வேண்டும் என்ற தனது லட்சியத்தை நிறைவேற்ற அவ்வாறு வாழ்ந்தார். அவரது பெயர் மரியா துர்பாக்கை.
இவர் 4 வயதிலேயே ஆண்கள் போன்று உடையணிந்து அப்பகுதியை வலம் வந்தார். அவருக்குத் தந்தை பக்க பலமாக இருந்தார். மரியா முதலில் தனது பெயரை செங்ஜிஸ்கான் என மாற்றிக் கொண்டார். முதலில் [illegible] வீரராகத் திகழ்ந்த அவர் பின்னர் ஸ்குவாஷ் விளையாட்டின் மீது அதிக ஈடுபாடு கொண்ட வீராங்கனையாக மாறினார்.
இந்த நிலையில் தீவிர மன அழுத்தம் காரணமாக தான் பெண் என்ற உண்மையை வெளியுலகுக்கு வெளிப்படுத்தினார். இதனால் தனது எதிர்காலம் வீணாகப் போய் விடும் எனக் கருதினார்.
எனினும் தொடர்ந்து போட்டிகளில் கலந்து கொள்ள அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது பாகிஸ்தானின் சிறந்த ஸ்குவாஷ் வீராங்கனையாக இருந்து வருகிறார். மேலும் உலக அளவில் சிறந்த வீராங்கனைப் பட்டியலில் 46 ஆவது இடத்தில் அவர் உள்ளார்.
இவர் தனது சுயசரிதையைப் புத்தகமாக எழுதியுள்ளார். அதில் பாகிஸ்தானில் தலிபான்களின் கட்டுப்பாட்டில் பெண்கள் அடையும் துன்பங்கள் குறித்தும், தனது வாழ்க்கையின் இளமைப் பருவம் தொடர்பாகவும் கூறியுள்ளார். (த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள்



*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் கும்ப ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிய விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.)*

## கும்பம்

**மாணவ-மாணவிகளே!**
படிப்பில் முழுக் கவனத்தையும் செலுத்துங்கள். மறதியால் மதிப்பெண் குறையும். நல்லவர்களின் நட்பை வளர்த்துக் கொள்ளுங்கள். பெற்றோரிடம் எதிர் விவாதம் செய்து கொண்டிருக்காதீர்கள்.

**கன்னிப் பெண்களே!**
மனசை அலைபாயவிடாமல் ஒருநிலைப்படுத்துங்கள். தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். திருமணப் பேச்சு வார்த்தைகள் தாமதமாகி முடியும். பெற்றோரின் ஆலோசனைகள் இப்போது கசப்பாக இருந்தாலும், பின்னர் அது சரியானது தான் என்பதை நீங்கள் உணர்வீர்கள். அவர்களுக்குத் தெரியாமல் எந்த நட்பும் வேண்டாம். வயிற்று வலி, தோலில் ஒவ்வாமை வந்துபோகும்.

**அரசியல்வாதிகளே!**
ஆதாரமின்றிஎதிர்க்கட்சியினரைவசைப்பாடவேண்டாம். தலைமையின் கட்டளையை மீறவேண்டாம். நீங்கள் எதைச் செய்தாலும், எதைச் சொன்னாலும் அதில் குற்றம் கண்டுபிடிக்கச் சிலர் முயல்வார்கள்.

**கலைத்துறையினரே!**
சிலர் உங்களின் மூளையைப் பயன்படுத்தி முன்னேறுவார்கள். சம்பள விடயத்தில் கண்டிப்புடன் இருங்கள். சின்னச் சின்ன வாய்ப்புகளையும் அலட்சியப்படுத்தாமல் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**விவசாயிகளே!**
வாய்க்கால் தகராறு, வரப்பு தகராறை என்பவற்றைப் பெரிதுபடுத்த வேண்டாம். பூச்சித் தொல்லை அதிகரிக்கும். மரப் பயிர்களும், தோட்டப் பயிர்களும் ஆதாயம் தரும்.

**வியாபாரிகளே!**
விரலுக்குத் தகுந்த வீக்கம் வேண்டும் என்பார்களே, அதுபோல இருக்கிற வியாபாரத்தை ஓரளவு பெருக்கப் பாருங்கள். இலாபம் மந்தமாக இருக்கும். கூட்டுத் தொழில் வேண்டாமே. புள்ளி விவரங்களை நம்பிப் பெரிய முதலீடுகள் செய்ய வேண்டாம். வேலையாள்களின் ஒத்துழைப்புக் குறையும்.
அயல்நாட்டிலிருப்பவர்கள், திடீரென்று அறிமுகமாகுபவர்களை நம்பிப் புதுத் தொழில், புது முயற்சிகளில் இறங்க வேண்டாம். கடையை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும்.

**உத்யோகத்தர்களே!**
முன்பு போல் அடிக்கடி விடுப்பில் செல்லாதீர்கள். மூத்த அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம். மேலதிகாரிகளைப் பற்றிய அந்தரங்க விடயங்களை வெளியில் சொல்லிக்கொண்டிருக்காதீர்கள். சக ஊழியர்கள் உங்களைப் பற்றி விமர்சித்தாலும் அனுசரித்துப் போங்கள். சிலர், வழக்கில் சிக்கவாய்ப்பிருக்கிறது.

**கேதுவின் பலன்கள்:**
இதுவரை உங்கள் ராசிக்கு இரண்டாமிடத்தில் நின்று கொண்டு உங்களைப் பக்குவமில்லாமல் பேச வைத்துப் பல பிரச்சினைகளில் சிக்க வைத்த கேதுபகவான் இப்போது உங்கள் ராசிக்குள்ளேயே வந்து அமருவதால் இனி இடம், பொருள் என்று பாராமல் வாய்க்கு வந்தபடி பேசத்தொடங்குவீர்கள். தடுமாறிக் கொண்டிருந்த உங்களுக்கு ஒரு நம்பிக்கை வரும். குடும்பத்தாருடன் இணக்கமான சூழ்நிலை உருவாகும். என்றாலும் ராசிக்குள் கேது அமர்வதால் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தப் பாருங்கள்.
எதிலும் ஒருவித சலிப்பு, முன்கோபம், தலைச் சுற்றல், ஒற்றைத் தலைவலி, கை, கால் மரத்துப் போதல் ஆகிய நோய்கள் வரும். பணம் வந்தாலும் கட்டுப் படுத்த முடியாதபடி செலவுகளும் இருந்துக் கொண்டேயிருக்கும்.

(தொடரும்)

சேரலாதன்

# இந்திய வீடுகளுக்கான கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும்

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அமைக்கப்படுகின்ற வீடுகள் தொடர்பாகத் திருப்தியற்றதொரு நிலையே தொடர்ந்தும் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் இந்திய வீட்டுத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதில் ஒவ்வொரு வீடும் அமைப்பதற்கு 8 லட்சம் ரூபா தேவையென மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால், வீடுகளை அமைக்கும்போது 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா மட்டுமே கட்டம் கட்டமாக வழங்கப்பட்டது. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த மக்கள் தமக்கு வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு வீடுகளை அமைப்பதில் எதிர்கொண்ட சிரமங்கள் சொல்லி மாளாதவை.

அதிகாரிகளின் அறிவுறுத்தல்களின் பிரகாரமும், அவரவர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலும் வீடுகளை அமைப்பதாயின், ஆகக் குறைந்தது 10 லட்சமாவது தேவைப்பட்ட நிலையில் மீதி 4 லட்சத்து 50 ஆயிரத்துக்கு அந்த ஏழைகள் எங்கே போவார்கள்? உரிய காலத்தில் வீடுகளை அமைக்காவிட்டால் அமைக்கப்பட்ட வீடு காணியுடன் பறிமுதல் செய்யப்படும் என்ற அதிகாரிகளின் எச்சரிக்கை அந்த மக்களின் தூக்கத்தைக் கெடுத்து நின்றது. ஏதோ இருந்த நகைகளை அடைவு வைத்தும், விற்றும் மேலதிகமாகத் தேவைப்பட்ட பணத்தை அதிகவட்டிக்குப் பெற்றும் அவர்கள் வீடுகளைப்பூர்த்திசெய்தனர். ஆனால், அவர்கள் பெற்ற கடன்கள் இன்னமும் தொலையாத நிலையில் பயமுறுத்தி நிற்கின்றன. இந்த மக்களின் துயரம் தொடர்பாக இலங்கை அரசு மட்டுமல்லாது, வீட்டுத் திட்டத்தை வழங்கிய இந்திய அரசும் கவனத்தில் கொள்ளவில்லை. ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட 8 லட்சம் ரூபாவில் மீதி 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயையாவது அந்த ஏழை மக்களுக்கு வழங்கினால் அந்த மக்களின் துயரத்தில் பாதியையாவது குறைத்துவிட முடியும். ஆனால், இதில் எவருமே கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் தமக்கு இந்திய வீட்டுத் திட்டம் தேவையில்லையென புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட மக்களில் ஒரு தொகுதியினர் தெரிவித்து விட்டனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் மூலமாக இந்திய வீட்டுத் திட்டத்திலுள்ள குறைபாடு தெளிவாகத் தெரிகின்றன. தற்போது மீள்குடியேற்ற அமைச்சின் 65 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்தை உள்ளூர் அரசியல்வாதிகள் பலரும் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர். இந்த வீட்டுத் திட்டத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டுமெனவும், வீடுகளின் தரம் தொடர்பில் சந்தேகம் இருப்பதாகவும் இந்த வீட்டுத் திட்டத்தை எதிர்ப்பவர்கள் கூறி வருகின்றனர்,

ஆரம்பத்தில் 12 லட்சம் ரூபா செலவில் வீடுகளை அமைப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டதாகவும், பின்னர் அது திடீரென 21 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுவதால், இதில் தவறு ஏதும் ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகமும் எழுகின்றது. மேலும், இந்திய வீடுகளுக்கு வெறும் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கிவிட்டுத், தற்போது 21 லட்சம் ரூபா செலவில் வீடுகளை அமைப்பதாகக் கூறுவது எந்தவகையிலும் நியாயமானதல்ல. பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு சாராருக்கு மிகமோசமான வகையில் அநியாயம் இழைப்பது நல்லாட்சி அரசுக்கு நல்லதல்ல. ஆகவே இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு மீதிப்பணத்தை வழங்குவதற்கு உடனடியாகவே நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

> ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட 8 லட்சம் ரூபாவில் மீதி 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவையாவது அந்த ஏழை மக்களுக்கு வழங்கினால், அந்த மக்களின் துயரத்தில் பாதியையாவது குறைத்துவிட முடியும். ஆனால், இதில் எவருமே கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

வடக்கு மாகாண சபையில் 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்குக் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. பொருத்து வீட்டுத் திட்டம் எமது பிரதேசத்துக்குப் பொருத்தமானதல்ல எனவும், ஒரு வீட்டுக்குச் செலவழிக்கப்படவுள்ள 21 லட்சம் தொகையில் நல்லதாக இரண்டு வீடுகளை அமைக்க முடியுமெனவும் உறுப்பினர்கள் பலரும் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அத்துடன் இந்தப் பொருத்து வீடுகள் நீண்டகாலப் பாவனைக்குப் பொருத்தமற்றவையெனவும் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

ஆனால், இவையெல்லாம் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் என மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மறுத்துள்ளார். என்னதான் எதிர்ப்புக்கள் வந்தாலும் வீட்டுத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் அவர் உறுதியாக இருப்பது தெரிகின்றது. இதேவேளை- மீள்குடியேற்ற அமைச்சர் சில விடயங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். வெளிநாடுகளில் பொருத்து வீடுகளை அமைக்கிறார்கள் என்பதற்காக அவற்றை எமது நாட்டிலும் அமைக்க முயல்வதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாது. மேலும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் ஒரு பிரிவினருக்கு 5லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கிவிட்டு, வேறொரு பிரிவினருக்கு 21லட்சம் ரூபா செலவிட்டு வீடுகளை அமைத்துக் கொடுப்பது நியாயமானதா என்பதையும் அமைச்சர் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு ஆகக் குறைந்தது 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவையாவது வழங்கிவிட்டு, மீதித் தொகையில் எமது பிரதேசத்துக்குரிய பாரம்பரிய வீடுகளை அமைத்து வழங்குவதே நியாயமானதாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ந்த குழந்தை அழுதுதான் இறக்க வேண்டுமா?

## முதுமையின் சவால்களும் அதற்கான தீர்வுகளும்

த.கிருபாகரன்

பிறக்கும்போது பூமிக்காற்றுப்பட்டு வீரிட்டு அழும் குழந்தை, வளர்ந்து இளமைப் பருவத்தைக் கடந்து முதுமையடைகிறது. இந்த முதிர்ந்த மனிதன் வளர்ந்த குழந்தையாக வந்ததும், அழுதுதான் இறக்கவும் வேண்டுமா? நாங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.





கைதடி அரச முதியோர் இல்லத்தில் சிவராத்திரியை முன்னிட்டு அறிவியல் கருத்துப் பகிர்வுக்களம் ஒன்றின் முகவுரைகள், முக வரிகளாக இங்கு சுட்டப்படுகின்றன. மூத்தோர் பராமரிப்பின் சவால்களும் அதற்கான தீர்வுகளும் என்ற தலைப்பு ஆர்வமேலீட்டில் மிகையாகிக் கொள்கின்றது. ஆர்வலர்களின் ஆக்கிரமிப்பில் கருத்துக் களம் விரிந்து கொள்கின்றது. அனைத்து வயதினரும் தமது கருத்துக்களை விதைப் பதற்காக நாற்காலிகளில் அமர்ந்து கொள்கின்றார்கள். குளிரூட்டப்பட்ட திரையரங்கு மண்டபம் களை கட்டிக் கொள்கின்றது. இல்ல மூத்தவர் ஒருவரின் இறை வணக்கப் பாடல் அனைவரின் சிந்தனைகளுக்கும் இறக்கைகளாகிக் கொள்கின்றன.

இலங்கையில் மூத்தோர் எண்ணிக்கை 2024இல் சனத்தொகையில் 24வீதமாக போகின்றது. முதல் வார்த்தைகள் அனைவரையும் நிமிர்ந்து உட்கார வைக்கின்றன. மூத்தவர்கள் பராமரிப்பு, முதியோர் இல்லங்களிலும், சமூகத்திலும் பெரும் சவாலாகவே உள்ளது என்ற கருத்துப் பகிர்வும், சூழலை நிரப்பிக்கொள்கின்றது. வாழ்வியலில் கூட்டுக்குடும்ப அமைப்பின் வலுவிப்பும் மூத்தோரின் அனுபவங்களை நாடும் வழக்கத்தின் வெறுமையும் குடும்பங்களில் வறுமையை ஏற்படுத்தித் துயரங்களை இருப்பாக்கிக் கொண்டுவிட்டன. ஆக்ரோசமான கருத்துச் சிந்தனைப் பகிர்வுக்கு இவை வந்தனையாக அமைந்து கொள்கின்றன.

மூத்தவர்கள் 60 வயதின் மேல் ஒரு கட்டத்தில் சாவுப் பயத்துக்கு ஆட்படுகின்றார்கள். இதனால் குறிப்பிட்டதொரு காலகட்டம் அவர்களைக் குழப்படிக்காரர்களாக அடையாளப்படுத்துகிறது. பிடிவாதம், கோபம், பயம், வெறுப்பு இவையெல்லாம் இருப்புக்களாக அமைந்து விடுவதால், பொறுப்பில்லாதவர்கள் என வெறுப்பு வருகிறது. இத்தகைய வளர்ந்த குழந்தைகளின் செய்கைகளால், பராமரிக்கப்பட முடியாத நிலையில் குடும்பங்களிலிருந்து மூத்தோர் வெளியேற்றப்படுகின்றார்கள். இந்த நிலையைக் கடக்கும்போது ஆன்மிகத்தில் நாட்டம் வந்து மற்றவர்களைத் திரும்பிப் பார்க்கச் செய்கிறார்கள்.

முதியோர் இல்லங்களில் ஐந்து வருடத்துக்கு மேல் ஒரு முதியவரைப் பராமரிப்பதென்பது சவாலானது. அனைத்து உறவுகளும் அறுக்கப்பட்ட நிலையில், தேவையற்ற பொருள்களை எல்லாம் உடைமைகளாக்கிக் கொள்வதில் ஆசை வந்து அவர்கள் விரக்தியில் வாழ்கிறார்கள். கோபப்படுபவர்களாகவும், தமது உறவுகளைத் தேடுபவர்களாகவும் காணப் படுகின்றனர். எவ்வளவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தாலும் உறவைத் தேடுவதில் அவர்களின் நாட்டம் மிகையாகிக் கொள்கிறது.

தேடலின் உச்சக்கட்டத்தில் மனநிலைப் பாதிப்புக்கள் வெளிக்கிளம்பிக் கொள்கின்றன. மூத்தோரின் மனநிலைப் பாதிப்புக்கள் ஏக்கங்களாகி,பின்னர், அவையே அவர்களின் சொத்தாக மாறுகின்றன. எழுபது வயதின் மேல் மனிதனின் வயது மீண்டும் ஒன்றிலிருந்து தொடங்கிக் கொள்கின்றது. குழந்தைப் பருவத்தின் இயல்பு, நடத்தையிலும் தோற்றத்திலும் வெளிப்படத் தொடங்குகின்றது. ஆனாலும் மூப்பு என்பது ஆப்பு அல்ல என்ற கருத்து சலசலப்பை அவர்களிடம் வரவழைத்துக் கொள்கிறது. ஐம்பது முதல் அறுபது வயதுவரை ஒரு மனிதன் நேரிடையான எண்ணங்களை மனதில் நிரப்பிக் கொள்வதன் மூலம் உடல் உள ஆன்மிக, சமூக ரீதியில் ஆரோக்கியமான வாழ்வின் பயணத்தில் இணைந்து கொள்கின்றான். இதன் மூலம் ஆரோக்கியம் ஏற்பட்டு சுகமாக முதுமையடைய அவனால் முடிகின்றது. சுகமான முதுமையால் மனிதர்கள் எத்தகைய சமூகத்திலும் தம்மை நிலைநிறுத்தி வாழக்கூடிய பக்குவத்தைப் பெறுகின்றனர் என்பது சமூகவியல் ஆய்வுகளின் முடிவாகும். இந்த நிலை கூர்ப்பில் நின்று நிலைக்கக்கூடிய சமூக வலுவூட்டலை ஏற்படுத்துகின்றது.

பிரச்சினைக்குரியவர்கள் என நினைக்கும் சில மூத்தவர்களைச் சமூகத்தில் அடக்கி வைப்பதற்கும், அவர்களின் உரிமைகளை மழுங்கடிப்பதற்கும் ஆயுதமாகப் பைத்தியம் என்ற சொல் பயன்படுத் தப்படுகிறது. நேர்மையானவர்கள், மாற்றுக் கருத்துக்களை அதிகம் கொண்டவர் கள் இந்தப் பாதிப்பை அதிகம் எதிர்கொள் கிறார்கள். முதுமையில் ஊரோடு ஒத்தோட முடியாதவர்களின் இருப்பு கேள்விக் குறியாகிப்போகின்றது. இத்தகைய வர்களுக்கு சில இடங்களில் குடும்ப உறுப்பினர்கள் பொறுப்புடன் காவல் காப்பவர்களாக இருக்கிறார்கள்.

முதுமை எப்போதும் பழைய நினைவுகளை மீட்டுப்பார்க்கும் பருவம். சொன்ன விடயங்களை மீண்டும் சொல்லிக்கொள்ளும் நிலமைகளைத் தாரளமாகத் தன்னகத்தே கொண்டது இந்தப் பருவம். மந்தி போல் குந்தி நடந்தாலும், முதுமையில் மன வலிமையும், மனமகிழ்வும் குறைவின்றியிருந்தால், இளமைப்பருவம்கூட வழிவிட்டு நிற்கும் எனக் கூறியபடி அட்டகாசமாகத் தனது வாயைத் திறந்து சிரித்துக் கொண்டார் வந்திருந்த ஒரு முதியவர். இத்தனை சவால்களுக்கும் எத்தனை தீர்வுகள் உள்ளன?

இலங்கையில் 271 முதியோர் இல்லங்கள் இயங்குகின்றன. 3 அரச முதியோர் இல்லங்கள் செயற்படுகின்றன. இலங்கையின் முதலாவது முதியோர் இல்லமாக 1954இல் கைதடி அரச முதியோர் இல்லம் அமைந்தது. அதிகரிக்கும் முதியோர் எண்ணிக்கைக்கு முதியோர் இல்லங்கள் தீர்வு அல்ல. மூத்தோர் சமூகத்தில் வைத்துப் பிள்ளைகளால் அல்லது உறவுகளால் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டியவர்கள். 11 பேர் இணைந்து முதியோர் சங்கம் உருவாக்கி முதியோர் பகல் நிலையம் என்ற பரிணாமத்தில் பல வசதிகள் ஏற்படுத்தும் செயற்பாடுகள் உள்ளன. தமது அனுபவங்களைப் பகிரவும், மன உளைச்சல்களைப் போக்கவும் பகலில் ஒன்றுகூடும் நிலையமாக இது ஒவ்வொரு கிராமங்களிலும் அமைக்கப்படும் ஏற்பாடுகள் உள்ளன. மாற்று வலுவுள்ளளோர் பயன்படுத்தும் உபகரணங்கள், வறிய மூத்தவர்களுக்கும் வழங்க சமூக சேவைத் திணைக்களத்திடம் ஏற்பாடுகளும் உள்ளன. சுயதொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் மூலம் ஓய்வூதியர்களாக முதுமையில் மாறிக் கொள்ளும் ஏற்பாடுகள் உள்ளன. இவையெல்லாம் பிரதேச செயலகங்களில் சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் வழி காட்டுதலில் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

மூத்தோர் பாராமரிப்புச் சேவைத் தொண்டர்களின் உருவாக்கம், எதிர்காலத்தில் தேவையுள்ளதொன்றாக அமையப் போகின்றது. வைத்தியசாலைப் பராமரிப்பு, வீடுகளில் மூத்தோர் பராமரிப்பு என்பவை முக்கியத்துவம்மிக்க தொழில்களாக இருக் கப்போகின்றன. மூத்தோர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அல்லது குறைக்க முதியோர் பகல் நிலையங்கள் விளங்க வேண்டும் என்பதற்கான திட்டங்கள் முனைப்பாகி உள்ளன. மூத்த குடிமக்கள் தமது எதிர்பார்ப்புக்களை நிறைவுசெய்யக் கூடிய விதத்தில் ஆலோசனை பெறும் மையமாக இன்று வடக்கில் அரச முதியோர் இல்லம் கைதடியில் செயற்படுகின்றது. மூத்தோர் பராமரிப்பில் உளவளத் துணை, உடற்பயிற்சிகள், ஆத்மீக சுற்றுலாக்கள் அனுபவப் பகிர்வுக் களங்கள் என்பவை மைற்கற்களாக அமைகின்றன.

மூத்தோரிடத்தில் அன்பாகவும் , பண்பாகவும் பேசுங்கள், அவர்களின் அனுபவங்களைப் பகிர்வதற்குரிய ஏற்பாட்டாளர்களாக இருங்கள், மகிழ்வான நேரிடையான சிந்தனைகளை விதைப்பவர்களாக இருங்கள், தன்னம்பிக்கையையும் சுயகௌரவத்தையும் பேணுபவர்களாக இருங்கள், இப்படி எத்தனையோ கருத்துக்கள் பாத்திரங்களாக என்னுள் கனதியாக இறங்கிக் கொள்கின்றன. மூத்தோரின் மறதி, புரிந்து கொள்ளாமை, கோபப்படுதல் என்பவை முதுமையில் சாதாரணமானவை. ஆனால், இவை நிலையானவை அல்ல, உடல் உறுப்புக்களின் செயல் இழப்புக்களின் வெளிப்பாடுகளாக இவை அமைந்து விடுகின்றன. சுகமான முதுமை சுகமான சாவையும் தந்துவிடும். பிறக்கும்போது பூமிக்காற்றுப் பட்டு வீரிட்டு அழும் குழந்தை, வளர்ந்து இளமைப் பருவத்தைக் கடந்து முதுமையடைகிறது. இந்த முதிர்ந்த மனிதன் வளர்ந்த குழந்தையாக வந்ததும் அழுதுதான் இறக்கவும் வேண்டுமா? நாங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். கலந்துரையாடலில் பங்குபற்றியவர் கணீர் என்ற குரலோசையில் தனது எண்ணங்களைப் பதிவாக்கிக் கொள்கிறார்.

2000ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் நூல்கள் கையளிக்கப்படுகின்றன. அன்பான உணர்வுகளால் பண்பாகக் கோயில் கட்டி, கோயிலின் மூலத்தில் மூத்தோரை இருத்தி, முகாரி இராகங்களை நிறுத்தி காத்திரமான பயணத்தில் நாங்களும் ஒருபாத்திரமாகிப்பயணிக்கவேண்டும். அன்பான வேண்டுகோள் இது! அர்ச்சிக்கும் வார்த்தைகள், கர்ச்சிக்கும் தோரணையில் கருத்துப் பகிர்வுக் களத்தின் முற்றுப்புள்ளிக்கு வித்திட்டுக் கொள்கின்றன.

*(கட்டுரையாளர், அத்தியட்சகர், அரச முதியோர் இல்லம், கைதடி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்னீர் நன்று

சிறுபொழுதுகளுள் ஒன்றான ஏற்பாடு என்பது இரண்டிலிருந்து ஆறு மணிவரையிலான நேரம். இப்போதைய பெயர் பிற்பகல். இந்தப் பிற்பகலில் எங்கோ மரத்தில் மறைந்திருந்து குக்.. குக்.. குக்.. என ஒலித்தது குக்குறுவான். ஆனால் அப்பறவையின் இருப்பிடத்தைப் பசுமைப் பாடசாலைக் குழந்தைகளால் எளிதில் பார்க்க முடியவில்லை. அவர்கள் நாணல் அடர்ந்த ஒரு சிறு ஆற்றின் கரையில் நின்றுகொண்டிருந்தனர்.

நீர்ப் பூதம் பற்றிய பாடம். ஆற்று நீரில் வரிசையாக வருகிற மீன்களைப் பார்த்துவிட்டாள் நந்தியா. ஒரு மீனைப் பார்த்ததும் "அதோ மீன் மீன்!" என்று கூவினாள். அந்த மீன் நெருங்கி வந்து சொன்னது, "உங்களுக்கு ஓர் உண்மை தெரிந்தால் அதிர்ச்சியடைந்து விடுவீர்கள். இந்த உலகம் தோன்றியபோது எவ்வளவு நீர் இருந்ததோ அந்த அளவிலிருந்து ஒரு சொட்டுக்கூட கூடவும் இல்லை, குறையவும் இல்லை. அதே அளவு நீர்தான் இன்றும் இருக்கிறது."

குழந்தைகள் அதை நம்ப முடியாமல் திகைத்தனர்.

"அப்படியானால் ஏன் இந்த அளவுக்குத் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுகிறது?"

"மனிதர்கள்தான் காரணம். நீரைப் பொதுவாக நிறத்தின் அடிப்படையில் மூன்று விதமாகப் பிரிப்பார்கள். அவை பச்சை நீர், நீல நீர், சாம்பல் நீர். இதில் நீல நீர் என்பது நீர்ப் பரப்புகளில் தேங்கியிருக்கும் நீர். பச்சை நீர் என்பது வளிமண்டலத்தில் நீராவி வடிவத்தில் காணப்படுவது. இந்த இரண்டு நீராலும் எந்தச் சிக்கலும் இல்லை. சாம்பல்நீர்தான் தண்ணீர்ப்பஞ்சத்துக்குக் காரணம்."

"அது என்ன சாம்பல் நீர்?" என்றாள் நந்தியா.

"சாம்பல் நீர் என்பது தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவு நீர். இந்தச் சாம்பல் நீர் நிலத்தடி நீருடனும், ஆறுகள், குளங்கள் போன்ற நீர் நிலைகளுடனும் கலப்பதால் அந்த நல்ல நீரும் கெட்டுப் போய்ச் சாம்பல் நீராக மாறிவிடுகிறது. இதனால் நன்னீர் அளவு குறைந்து நீர்வாழ் உயிரினங்களும் பாதிக்கப்பட்டு வருகின்றன. அதனால்தான் தண்ணீரைக் காசு கொடுத்து வாங்கும் நிலை வந்துவிட்டது."

குழந்தைகள் ஆச்சரியமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

"தண்ணீர் என்பது இயற்கைப் பொருள். மனிதர்களால் ஒரு சொட்டு நீரையாவது செயற்கையாக உற்பத்தி செய்ய முடியாது. அப்படியானால் தண்ணீரை விற்பதற்கு மட்டும் என்ன உரிமை இருக்கிறது, சொல்லுங்கள் குழந்தைகளே?" என்ற மீன் தொடர்ந்தது.

"உண்மைதான், இனித் தண்ணீரை விலை கொடுத்து வாங்க மாட்டோம். அது மட்டுமல்ல, தண்ணீர் என்பது அனைத்து உயிரினங்களின் அடிப்படை உரிமை. மனிதர்கள் அதை விலை கொடுத்து வாங்கிவிடலாம். மீன்களாகிய நாங்களும், மற்ற உயிரினங்களும் என்ன செய்வது? தண்ணீரைக் காசு கொடுத்து வாங்க முடியுமா?"

மீனின் கேள்வி பற்றிக் குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் யோசிக்க வேண்டும்.



## வர்ணம் தீட்டுவோம் வாங்க....





## வரலாற்றில் இன்றைய தினம்

1549 - பிரேஸிலின் முதலாவது தலைநகரான சல்வடோர் டா பாஹியா ஸ்தாபிக்கப்பட்டது.

1849 - பஞ்சாப் ஐக்கிய ராச்சியத்துடன் இணைக்கப்பட்டது.

1886 - அட்ரான்ரா தோட்டமொன்றில் வைத்தியர் ஜோன் பெம்பேட்டன் அவர்களால் கொக்கோ கோலா முதலாவது தொகுதி வடித்தெடுக்கப்பட்டது.

1945 - இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஜேர்மனியின் 4ஆவது படையணி சோவியத் செம்படையால் அநேகமாக முற்றாக அழிக்கப்பட்டது.

1988 - தெற்கில் ஜனவரியிலிருந்து 819 பேர் காணாமற்போயினர் என புள்ளிவிவரம் தெரிவிப்பு. கொழும்பில் காணாமற்போன 119பேர் உட்பட.

1991 - எம் 1911 45 ஏசிபி கைத்துப்பாக்கி அமெரிக்க இராணுவத்தின் பகுதி ஆயுதமாகியது.

1993 - இந்திய உத்தரப் பிரதேசத்தில் சமோலி மாவட்டத்தில் 6.8 மக்னிரியூட் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதில் 103 பேர் சாவு.

2002 - இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானின் மீது அணுகுண்டு வீசிய விமானியின் அனுபவம் பற்றிய புத்தகம் ரூபா 2 கோடிக்கு விலைபோனது

2002 - மன்னாரிலிருந்து நெடுந்தீவுக்கு தனியார் படகுச்சேவை.

2004 - பல்கேரியா, எஸ்டோனியா, லத்வியா, லுதுவானியா, றோமேனியா, ஸ்லோவேகியா மற்றும் ஸ்லோவேனியா ஆகிய நாடுகள்முழு அளவிலான உறுப்பு நாடுகளாக நேட்டோவில் இணைந்தன.

2013 - தான்சானியா வர்த்தக தலைநகரான டார்எஸ் சலாமில் 16 அடுக்குக் கட்டம் இடிந்து வீழ்ந்ததில் 36பேர் சாவு


2014 - ஒரே பாலின திருமணங்கள் முதன்முதலாக இங்கிலாந்திலும் வேல்ஸிலும் நடைபெற்றன.

## எம்மைப் பற்றி.....

1. மனிதனால் மட்டுமே நேரான கோடு வரைய முடியும்
2. மனிதன் சிரிக்கும் போது 17 தசைகள் இயங்குகின்றன.
3. மனித டி.என்.ஏ யில் 800000 ஜீன்கள் இருக்கின்றன.
4. 4.2அடிக்குக் குறைவாக உள்ள ஆண்களும், 3.9அடிக்குக் குறைவாக உள்ள பெண்களும் குள்ளர்களாகக் கருதப்படுகிறார்கள்.
5. மனிதக் குருதியில் உள்ள வெள்ளை அணுக்கள் 2 முதல் 4 நாள்கள் வரை வாழ்கின்றன. சிவப்பு அணுக்கள் 3 முதல் 4 மாதங்கள் வரை வாழ்கின்றன.
6. ஒவ்வொரு மனிதனும் 25 மில்லியன் தடவை தனது வாழ்நாளில் விரல்களை மூடித் திறக்கிறான்.
7. மனித மூளை, உலகில் உள்ள எல்லா கைபேசிக்கும் செலவாகும் மின்சாரத்தை ஒரு நாளில் உற்பத்தி செய்யும்.
8. மனித மூளையில், ஒரு நாளைக்கு, ஒரு வினாடிக்கு 100000 வேதியல் மாற்றங்கள் நிகழ்கின்றன.
9. பிறக்கும் குழந்தையின் மூளையில் 14 பில்லியன் செல்கள் இருக்கும், அது அந்தமனிதன் இறக்கும் வரை கூடுவதே இல்லை. ஆனால் 25 வயதுக்குப் பிறகு ஒரு நாளைக்கு 100000 செல்கள் வீதம் குறைகின்றன. ஒரு நிமிடத்தில் ஒரு பக்கத்தை படிக்கும் போது 70 செல்கள் இறக்கின்றன. 40 வயதுக்குப் பின்னர் மூளையில் உள்ள நியுரான்கள் குறையத் தொடங்குகின்றன, 50 வயதுக்கு மேல் நியுரான்கள் குறைபாட்டால் மூளையின் அளவு சுருங்குகிறது.
10. சராசரி மனிதனுக்கு 2 மில்லியன் வியர்வைச் சுரப்பிகள் இருக்கின்றன.
11. ஒருலீற்றர் வியர்வையில் 540 கலோரி இழப்பீடு ஏற்படுகிறது. பெண்ணை விட ஆணுக்கு 40 சதவீதம் அதிகம் வியர்வை சுரக்கிறது.
12. வலதுப்பக்க நுரையீரல் இடதுப்பக்க நுரையீரலை விட அதிக காற்றை நிறைக்கிறது.
13. ஒரு மனிதன் ஒரு நாளைக்கு சராசரி 23000 தடவை மூச்சு விடுகிறான்
14. எமது வாயில் 40000 பக்றீரியாக்கள் இருக்கின்றன.
15. கண்ணைத் திறந்து கொண்டு எம்மால் ஒரு போதும் தும்ம முடியாது.
16. மனித உடலில் முதுகுத்தண்டில் 33 முதல் 34 எலும்புகள் இருக்கின்றன.
17. ஆணைவிடப் பெண் இரு மடங்கு கண் சிமிட்டுகிறாள்.
18. மனித உடலில் மிகச்சிறிய செல் விந்துவில் உள்ளது.
19. குழந்தைகள் பிறக்கும் போது ஏறத்தாழ 300 எலும்புகளுடன் பிறக்கின்றன. மனித உடலில் உள்ள சராசரி எலும்புகளின் எண்ணிக்கை 206.
20. எமது உடலில் 7 சவர்க்காரக் கட்டிகள் தயாரிக்கும் அளவுக்குக் கொழுப்பு இருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


திருமதி இராஜினி சிவலிங்கம்



# மாணவர் வாழ்விலும் நலம் தரும் யோகா

வருடாந்த இல்ல மெய்வன்மை திறனாய்வு நிகழ்வுகள் முதலாம் தவணையில் அனைத்துப் பாடசாலைகளிலும் நடைபெற்று முடிந்திருக்கின்றன. கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டிகள் கல்லூரியின் முதல்வர் ச.வேலழகன் தலைமையில் கல்லூரியின் நவரத்தினராஜா விளையாட்டுத் திடலில் நடைபெற்றன. பிரதம விருந்தினராக இந்தியத் துணைத்தூதர் ஆ.நடராஜன் கலந்துகொண்டார். இடைவேளை நிகழ்வாக கல்லூரி மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட யோகக் கலைப் பயிற்சி நிகழ்வுகள் அனைவரது பாராட்டையும் பெற்றன.

உலக யோகா தினத்தில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட யோகக் கலைப் பயிற்சி நிகழ்வில் பங்கு பற்றிய கல்லூரி மாணவர்கள் பலர் இந்த நிகழ்விலும் பங்கு பற்றினர். ஆண் மாணவர்களுக்கான யோகா உடற் பயிற்சியில் சுமார் 25 மாணவர்கள் பங்கு பற்றினர். இந்த நிகழ்வை கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் செ.செல்வச்சந்திரனின் வழிகாட்டலில் யோகக் கலைப் பயிற்சியாளர் எஸ்.கோணேஸ்வரன் நெறிப்படுத்தினார்.



பெண்களுக்கான யோகா நடன நிகழ்வில், சுமார் 30 மாணவிகள் பங்குபற்றினர். நடன நிகழ்வை கல்லூரியின் நடன ஆசிரியை திருமதி கௌலி ஹாசனும், கல்லூரியின் அலுவலக உத்தியோகத்தர் செல்வி ஞா.நிருத்திகாவும் பயிற்சி அளித்து நெறிப்படுத்தியிருந்தனர்.

உலக யோகா தினத்தில் நடைபெற்ற யோகா நடன நிகழ்ச்சியில் பங்குபற்றிய செல்வி ஞா.நிருத்திகா மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கினார்.

இருவரது கடின உழைப்பும், காலத்தின் தேவையறிந்து நெறிப்படுத்தப்பட்ட இந்த யோகா நிகழ்வுகள் பார்வையாளரைக் கவர்ந்ததோடு அனை வரது பாராட்டையும் பெற்றன.

இந்த நிகழ்வில் பங்கு பற்றிய மாணவிகள் குறுகிய காலத்தில் கடின முயற்சியுடன் பயிற்சி எடுத்து மனத்துணிவுடன் மிகச் சிறந்த நிகழ்வை நடத்தி, கல்லூரிக்கும் பெருமை தேடித்தந்தனர். அவர்களின் திறமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர்களை நெறிப்படுத்தி நிகழ்ச்சிகளை வழங்கிய பயிற்சியாளர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகளின் இடையே வெறும் கேளிக்கைப் பொழுதுபோக்கு நிகழ்வுகளை நடத்துவதைவிடவும், மாணவர்களின் முன்னேற்றத்துக்கு பெரிதும் பயனுள்ளதாக அமையும். இவை போன்ற நிகழ்வுகளை நடத்துவது மாணவர்களுக்கு மட்டுமன்றி கலந்து கொள்ளும் பார்வையாளர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் பயன்தருவதாக இருக்கும்.

# தமிழர்கள் என்பதால் பாரபட்சம் காட்டுவதா?

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரண தரப் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இந்துப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி, கடந்த காலங்களையும் விட இம்முறை அதிகளவிலான மாணவர்கள் சித்தி எய்தியுள்ளனர். எனினும், மூன்றுமொழி மூலங்களிலும் இந்தப் பொதுப் பரீட்சையை நடத்தி பெறுபேறுகளை வெளியிட்டுள்ள பரீட்சைத் திணைக்களம், கடந்த காலத்தைப் போன்று தற்போதும் சிங்கள மொழி மூலத்தில் தோற்றிய மாணவர்கள் மத்தியில் மாத்திரம் தரப்படுத்தலை மேற்கொண்டு முதல் பத்து இடங்களை வெளியிட்டிருக்கிறது.

இந்த நடைமுறையானது, ஏனைய மொழிமூலமாகப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நடைமுறை குறித்து இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கமும், கல்வி நிர்வாக சேவையின் கிழக்கு மாகாண சங்கங்களும் ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

இந்த நாட்டில் இலவசக் கல்வித் திட்டம் நடைமுறையில் உள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் இந்நாட்டில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் 14 வயது வரையும் கட்டாயம் கல்வி வழங்கப்பட வேண்டும். -இவ்வாறு கட்டாய இலவசக் கல்வி வழங்கும் இந்த நாட்டில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை என முக்கிய மூன்று பொதுப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலும் ஏனைய இரு பரீட்சைகளும் மூன்று மொழிகளிலும் நடத்தப்படுகின்றன. அந்த வகையில் இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் மூன்று மொழிகளிலும் நடத்தப்படுகின்ற இந்தப் பரீட்சையில் இந்தமுறை ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றினர். இந்தப் பரீட்சையின் பெறுபேறே இப்போது வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பாரபட்ச செயற்பாடுகள் நல்லாட்சியிலும் தொடர்கின்றதா? என்றகேள்வியும் எழுந்துள்ளது.

உண்மையில் கடந்த ஆட்சிக் காலத்தில் வருடா வருடம் இந்தப் பொதுப் பரீட்சைகள் மூன்று மொழிகளிலும் நடத்தப்பட்ட போதிலும், சிங்கள மொழி மூல மாணவர்கள் மத்தியில் மாத்திரம் முதல் பத்து இடங்களும் தெரிவுசெய்யப்பட்டு பகிரங்கமாக அறிவிக்கப்பட்டதோடு, அந்த மாணவர்கள் அலரி மாளிகைக்கு வரவழைக்கப்பட்டுப் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு வெளிநாடுகளுக்கும் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். இந்தச் செயற்பாடு காரணமாகத் தமிழ் பேசும் மாணவர்கள் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகினர். “தாம் எவ்வளவுதான் முயற்சி செய்தபோதிலும் முயற்சியின் பெறுபேறுகளும் திறன்களும் கருத்தில் கொள்ளப்படுவதாக இல்லையே என்ற ஆதங்கம் மாணவர் மத்தியில் நிலவியது. இந்த நிலைமையையிட்டு தமிழ் பேசும் பெற்றோர் பெரும் கவலைக்கு உள்ளாகினர். இருந்தும் கடந்த ஆட்சிக் காலத்தில் இவை சிறிதளவேனும் கருத்தில் கொள்ளப்படவில்லை. அந்த ஆட்சிக் காலத்தில் பாரபட்சங்கள் வெளிப் படையாகவே இடம்பெற்றன. இதனை எவரும் மறுக்கமாட்டார்கள். இதுவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக் களின் ஆதரவையும் வாக்குகளையும் இழப்பதற்கும் தோல்வி அடைவதற்கும் காரணமாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. கடந்த ஆட்சிக் காலத்தில் நடந்ததைப் போன்ற பாரபட்சங்கள் நல்லாட்சியிலும் இடம்பெற இடமளிக்கலாகாது என்பதே மக்களின் நிலைப்பாடு.



நாட்டில் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளும் சிங்கள மொழிப் பாடசாலைகளும் தனித்தனிப் பாடசாலைகளாக இயங்குகின்றன. அத்தோடு பரீட்சைகளும் தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலங்களில் வேறுவேறாகவே நடத்தப்படுகின்றன. அப்படியிருக்கையில் ஒரு மொழி மூலத்துக்கு மாத் திரம் தரப்படுத்தலை வெளியிடுவது எவ்வாறு நியாயமாகும் என்பதே தற்போது முன்வைக்கப்படும் பிரதான கேள்வி யாகவுள்ளது. ஆகவே, இந்த விடயத்தில் விசேட கவனம் செலுத்தப் பட வேண்டும். கடந்த ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற பாரபட்சங்களும் ஒதுக்கல்களும் இந்த ஆட்சியிலும் தொடரலாகாது. அதுவே நாட்டு மக்களின் பிரதான எதிர்பார்ப்பு.

எனவே, இந்தச் செயற்பாட்டின் மூலத்தைச் சரியாக இனங்கண்டு அதனை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். அதுவே நாட்டுக்கு சுபீட்சத்தையும் வளத்தையும் தேடிக் கொடுக்கும் எனப் புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நாட்டில் சிங்கள மக்களே அனைத்து உரிமைகளுக்கும் உரித்தானவர்களென்றும், சிறுபான்மையின மக்கள் இந்த நாட்டில் உரிமைகளுக்கு தகுதியற்றவர்களெனவும், தென்னிலங்கையில் இனவாத தரப்புகள் நச்சு விதைகளைத் தூவிவருகின்றன. இவ்வாறான கருத்துகளுக்கு உரமூட்டும் வகையில் இந்தச் செயற்பாடும் இருக்கிறது. இது ஆபத்தான செயற்பாடாகும். இதனால் உலகில் வேறு எங்குமே காணாதபடி இனவாதமும் மதவாதமும் நிறைந்த நாடாகவே எந்தக் காலமும் இலங்கை நோக்கப்படுவதற்கான ஆபத்தும் இருக்கிறது என்பதை சம்பந்தப்பட்ட தரப்பினர் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 8 | | | | |
| | 2 | | 9 | | 4 | | | 8 |
| 5 | | | | | 3 | 4 | | |
| | | | | | | 6 | | 7 |
| 7 | 9 | 1 | | 6 | | 8 | 5 | 4 |
| 3 | | 8 | | | | | | |
| | | 9 | 2 | | | | | 3 |
| 8 | | | 6 | | 5 | | 2 | |
| | | | | 7 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 1 | 2 | 8 | 9 | 6 | 3 | 4 |
| 2 | 8 | 3 | 5 | 6 | 4 | 7 | 1 | 9 |
| 6 | 9 | 4 | 3 | 1 | 7 | 8 | 2 | 5 |
| 1 | 4 | 8 | 7 | 9 | 2 | 5 | 6 | 3 |
| 7 | 6 | 5 | 8 | 4 | 3 | 2 | 9 | 1 |
| 3 | 2 | 9 | 6 | 5 | 1 | 4 | 8 | 7 |
| 9 | 1 | 6 | 4 | 2 | 5 | 3 | 7 | 8 |
| 4 | 3 | 2 | 9 | 7 | 8 | 1 | 5 | 6 |
| 8 | 5 | 7 | 1 | 3 | 6 | 9 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**தில்லு முல்லு தினா** @Dinavel27
வேறு கிரகத்தில் உயிர் வாழத் தகுதி உள்ளதா என தேடுகின்றனர், உயிர் வாழ அனைத்துத் தகுதியும் பெற்றிருந்த பூமியை நாசமாக்கிய மக்கள்...



# மலையாளத்தில் அமலாபால்

தமிழ் மற்றும் மலையாளப் படங்களில் முக்கிய நடிகையாக இருந்த அமலாபால், இயக்குநர் விஜய்யைத் திருமணம் செய்து கொண்டதன் பின்னர் நடிப்புக்குச் சிறிது இடைவெளி விட்டிருந்தார்.
தற்போது நல்ல கதைகள் அமைந்ததால் நடித்தும் வருகிறார். திருமணத்துக்கு பின்னர் தமிழில் "பசங்க2" படத்தில் சூர்யாவுடன் நடித்த அமலாபால், இப்போது மலையாள சூப்பஸ்ரார் மம்முட்டிக்கு ஜோடியாக நடிக்கிறார்.
"தோப்பில் ஜோப்பன்" என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்தில் மம்முட்டி கபடி வீரராக நடிக்கிறார். படத்தைப் பிரபல மலையாள இயக்குநர் ஜானி ஆண்டனி இயக்குகிறார். இவர் ஏற்கனவே மம்முட்டி நடித்த இரண்டு படங்களை இயக்கி இருக்கிறார். இது இவர்கள் இருவரும் இணையும் மூன்றாவது படம். அமலாபால், மோகன்லாலுடன் ஏற்கனவே இரண்டு படங்களில் நடித்து இருக்கிறார். இப்போது மலையாளத்தில் மற்றொரு சூப்பர் ஸ்ரார் மம்முட்டியுடன் ஜோடி சேரவுள்ளதால் உற்சாகத்தில் உள்ளாராம்.



கணவன்–மனைவி இருவருக்கும் இடையே பயங்கரச் சண்டை. கணவன்–மனைவியைத் திட்டி விட்டு கோபத்துடன் அலுவலகத்துக்குச் சென்று விடுகிறான். ஒரு மணி நேரம் கழித்து தனது கணவனுக்குப் போன் செய்கிறாள் மனைவி. பிறகு,
**மனைவி :** ஹலோ...என்னங்க?
**கணவன் :** என்னடி? என்ன விசயம்?
**மனைவி :** ஏன்னங்க, நான் உங்க மேலை உள்ள கோபத்திலை எல்லா தூக்க மாத்திரையையும் போட்டுட்டேங்க.
**கணவன்:** [சந்தோசத்தை மறைத்துக் கொண்டு] அடிப்பாவி மகளே. உனக்கு அறிவு இல்லையா? உங்கிட்டை நான் சண்டை போட்டால் கொஞ்ச நேரம் கழிச்சு நானே உன்னைச் சமாதானம் பண்ணுவன் என்று தெரியும். அதுக்குள்ளை அவசரப்பட்டு ஏண்டி இப்படிச் செய்தனி. ஐயோ! இப்ப நான் என்ன பண்ணுவேன். அலுவலகத்தில் இருந்து வீட்டுக்கு வாரதுக்கு ஒரு மணி நேரம் ஆகும். அதுக்குள்ள உனக்கு எதாவது ஆயிடுமோ. இரடி நான் அம்புலன்ஸை வரச் சொல்கிறேன். கடவுளே...!
**மனைவி:** ஐயோ! நீங்க நினைக்கிற மாதிரி ஒன்றுமில்ல. உங்க மேலை உள்ள கோபத்தில "நீங்க தினமும் தூக்கம் வருவதற்காக இரவில போட வைச்சிருந்த எல்லா தூக்க மாத்திரையும் குப்பையில போட்டுட்டேங்க' வரும் போது வேற வாங்கிட்டு வாங்க எண்டு சொல்லத்தான் போன் பண்ணினனான்.
**கணவன் :** அடி...அதானே பார்த்தேன். இப்படி நல்ல விசயம் என்ர வாழ்க்கையில இனி நடக்குமா?



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** இலட்சியத்தை உணர்ந்து செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். இலாபம் சுமார். உடல் நலனில் கவனம் தேவை. பெண்கள், பிள்ளைகளின் நலனில் கவனம் செலுத்துவர்.

**இடபம்:** சிந்தனையில் புதிய மாற்றம் உருவாகும். தொழிலில், உற்பத்தி, விற்பனை திருப்தி கரமாகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். மனைவியின் அன்பைக் கண்டு மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** எதிர்கால நலனில் அக்கறை செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். சுப நிகழ்ச்சியில் பங்கேற்று மகிழ்வீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கடகம்:** சொந்தப் பணிகளில் அதிக கவனம் செலுத்துவீர்கள். தொழிலில், வருமானம் சுமாராக இருக்கும். பெண்கள், அத்தியவாசியச் செலவுக்குக் கடன் பெறுவர். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**சிங்கம்:** அவமதித்துப் பேசுபவரிடம் இருந்து விலகுவீர்கள். தொழிலில், இலாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவில் சிக்கனம் நல்லது. ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** இளமைக் கால இனிய நினைவுகளில் மகிழ்வீர்கள். நேர்த்தியுடன் பணிபுரிந்து, தொழிலில் வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். இலாபம் அதிகரிக்கும். பெண்கள் அழகுசாதனப் பொருள்களை வாங்குவார்கள்.

**துலாம்:** உங்களின் கருத்தை குடும்பத்தினர் ஏற்கத் தயங்குவர். தொழிலிலுள்ள அனுகூலத்தைப் பாதுகாக்க, விடாமுயற்சி தேவைப்படும். மிதமான பணவரவு கிடைக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** உற்சாக மனப்பான்மையுடன் பணியாற்றுவீர்கள். தொழிலில், உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். இலாபம் திருப்திகரமாகும். பணியாளர்களுக்குப் பாராட்டு, வெகுமதி வந்து சேரும்.

**தனுசு:** அவசரப் பணி உருவாகி, சிரமத்தை உருவாக்கலாம். தொழில், வியாபாரத்தில், இருக்கும் நிலையைப் பாதுகாக்கவும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். தாயின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை அளிக்கும்.

**மகரம்:** புதிய வாய்ப்பை ஆர்வத்துடன் பயன்படுத்துவீர்கள். தொழிலில், திட்டமிட்ட உற்பத்தியால், விற்பனை கூடும். இலாபம் அதிகரிக்கும். மங்கல நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கும்பம்:** உங்களின் திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய சாதனை படைப்பீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். நண்பருடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**மீனம்:** செயலில் நிதானத்தைப் பின்பற்றுவது அவசியம். தொழிலில், உற்பத்தி, விற்பனை, சுமாராக இருக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதில் தாமதமாகலாம். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில குறிப்புகள்

- கோவா முதலியவற்றை வேக வைக்கும்போது ஒரு வித நாற்றம் வரும். அதைத் தடுக்க சிறிது எலுமிச்சம் பழச் சாறு, அல்லது ஒரு சிறிய இஞ்சித் துண்டைச் சேர்த்து வேகவைக்கலாம்.
- மிக்ஸியில் இட்லி மா அரைக்கும் பெண்கள், அரிசி மா நன்றாக அரைபடவில்லை, நேரமாகிறது என்பார்கள். அவர்கள் கவலையைப் போக்க எளிய வழி, புழுங்கல் அரிசியை வெந்நீரில் ஊறவைத்து அரைத்தால் சுலபமாக அரைபடும்.
- "தேங்காய் பர்பி" தயாரிக்கும் பொழுது சில சமயம் பதம் தவறி முறுகி விடலாம். அப் படி நேரும்போது அதைப் பாலில் ஊற வைத்து, மீண்டும் கிளறி இறக்கும் சமயம் நெய்யில் வறுத்த கடலை மாவைச் சிறிது தூவி இறக்கினால், பர்பி மறுபடியும் சரியான பதத்துக்கு வந்துவிடும்.
- எலுமிச்சம் பழங்களை உப்புச் சாடியில் போட்டு வைத்துவிட்டால், அவை எப்போதும் புதியதாக இருக்கும். அந்த எலுமிச்சம் பழங்களிலிருந்து நிறையச் சாறும் கிடைக்கும்.
- காய்கள், பழங்கள் வாங்கும்போது நல்ல சிவப்பு நிறமாக இருப்பதையே வாங்க வேண்டும். அவற்றில்தான் இரும்புச்சத்து அதிகமாக உள்ளது.



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | | கிளிநொச்சி | | | சாவகச்சேரி | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 300 | 100 | – |
| கணவாய் | 550 | 600 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 500 | 500 | 400 |
| சுறா | 550 | 500 | 600 | 800 | 700 | – | 600 |
| சீலா | 250 | 400 | 400 | 450 | 450 | 500 | 350 |
| விளை | 600 | 400 | 400 | 500 | 400 | 500 | 350 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 120 | – | 350 |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 400 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 200 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 200 | 300 | – | – |
| நகரை | 200 | 300 | – | 250 | 300 | – | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 120 | – | – |
| ஒட்டி | 250 | 200 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 350 | 250 | – | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 250 | – | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 350 | 200 | 250 | 350 | 500 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 300 | 400 | – | – |

## நாளை

பங்குனி -17
புதன்கிழமை 30.03.2016
திதி: ஸப்தமி
பி.இ.04.33 வரை
நட்சத்திரம்: கேட்டை
மு.ப.08.32 வரை
ராகுகாலம்:
12.12-01.42 வரை
சுபநேரம்:
04.42-06.12 வரை






### அலங்காரக் கிளிப்புகள்

அலங்காரமான கொண்டைக் கிளிப்புகள் அறிமுகமாகியுள்ளன. கற்கள் வேலைப்பாடுகளுடன், பலவித வகைகள், அளவுகளில் அவை விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றின் விலை 80 ரூபா தொடக்கம் 150 ரூபா வரையாகும்.

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | – | 50 | 40 | 30 | 40 | 25 | 25 |
| கத்தரி | 60 | 60 | 70 | 80 | 60 | 120 | 50 | 80 |
| கரட் | 70 | 90 | 80–160 | 100 | 70 | 200 | 80 | 80 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 50 | 70 | 80 | 100 | 60 | 120 | 40 | 50 |
| பாகல் | 100 | 100 | 100 | 120 | 100 | 160 | 110 | 110 |
| கருணைக்கிழங்கு | 100 | 70 | 80 | – | 60 | – | 50 | 20 |
| பெ.வெங்காயம் | 80 | 70 | 70 | 80 | 70 | 80 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 70 | 80 | 60 | 60 | 80 | 65 | 65 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 | 40 | 60 | 30 | 35 |
| தக்காளி | 30 | 40 | 30 | 50 | 30 | 80 | 25 | 25 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 40 | 40 | 60 | 30 | 40 |
| கீரை | 30 | 50 | 30 | 20 | 40 | 40 | 20 | 15 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 35 | 20 | 40 | 20 | 20 |
| பச்சை மிளகாய் | 100 | 110 | 100 | 80 | 80 | 120 | 80 | 120 |
| புடோல் | 40 | 60 | 50 | 60 | 60 | 60 | 30 | 50 |
| கோவா | 40 | 60 | 50 | 50 | 50 | 80 | 40 | – |
| வெண்டி | 80 | 60 | 50 | 80 | 80 | 60 | 60 | 60 |
| போஞ்சி | 160 | 140 | 120 | 160 | 80 | 120 | 70 | 70 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 | 140 | 100 | 160 | 100 | 70 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40 | 30 | 30 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 | 80 | 70 | 80 | 65 | 60 |
| தேசிக்காய் | 100 | 60 | 120 | 140 | 180 | 160 | 110 | 110 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 08 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 120 | 120 | 160 | 80 | 80 |
| இராசவள்ளி | 150 | 140 | 130 | 160 | 140 | – | 110 | 110 |
| முருங்கைக்காய் | 700 | 400 | 500 | 250 | 550 | – | 350 | 400 |
| பனங்கிழங்கு | 05 | 04 | – | – | 03 | – | – | – |



## பூண்டு கார சோஸ்

### தேவையானவை:

பூண்டு – 20 பல்
பச்சை மிளகாய் – 2
மிளகாய்த்தூள் – ஒரு தேக்கரண்டி
மிளகுத்தூள் – அரைத் தேக்கரண்டி
எண்ணெய் – 2 மேசைக்கரண்டி
தக்காளி சோஸ் – 2 மேசைக்கரண்டி
சோயா சோஸ் – ஒரு மேசைக்கரண்டி
தண்ணீர் – கால் கப்
உப்பு – தேவையான அளவு

### செய்முறை:

- பூண்டைத் தோலுரித்து அதனுடன் பச்சை மிளகாய் சேர்த்து நன்றாக விழுதாக அரைத்துக் கொள்ளவும்.
- சட்டியில் எண்ணெய் விட்டு நன்குகாய்ந்தவுடன் அரைத்த பூண்டு விழுதைப் போட்டு இரண்டு நிமிடங்கள் மிதமான தீயில் வதக்கவும்.
- அதன்பின்னர் மிளகாய்த் தூள் சேர்த்து மேலும் ஒரு நிமிடம் வதக்கவும்.
- அதன்பிறகு மிளகுத்தூள், தக்காளி சோஸ், சோயா சோஸ் சேர்த்து தேவையான அளவு உப்புப் போட்டு அதன் பின்னர் தண்ணீர் ஊற்றிக் கொதிக்க விடவும்.
- கொதி வந்தவுடன் மேலும் இரண்டு நிமிடங்கள் அனலில் வைத்து இறக்கவும்.
- அவ்வளவுதான் சுவையான, உடம்புக்கு நலம் தரும் பூண்டு கார சோஸ் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்




## சாதனை படைத்த கார்

எதிர்காலத்தில் இலத்திரனியல் கார்கள் போக்குவரத்துத் துறையில் முக்கிய பங்கு வகிக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. எனினும் எரிபொருளில் இயங்கும் கார்களும் தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்ட வண்ணமே உள்ளன.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஹையுண்டாய் ஐஎக்ஸ் 35 எனும் கார் ஆனது ஐதரசனை எரிபொருளாகப் பயன்படுத்தி தொடர்ச்சியாக 9 ஆயிரத்து 810 கிலோ மீற்றர் பயணம் செய்து உலக சாதனையை நிலை நாட்டியுள்ளது.

இந்தக் காரானது,எரிபொருளை நிரப்புவதற்காக மட்டுமே நிறுத்தப்பட்டதுடன், தொடர்ச்சியாக 6 நாள்கள் பயணித்துள்ளது.

மேலும், ஒரு முறை தாங்கி முழுவதுமாக நிரப்பப்பட்ட ஐதரசனுடன் 643 கிலோ மீற்றர்கள் வரை பயணித்துள்ளது.

இதற்கிடையில் ஐதரசனை எரிபொருளாகக் கொண்டு 8 பஸ்களை 112,6540 கிலோ மீற்றர்கள் தூரத்துக்கு லண்டனின் பிரபல்யமான பாதைகளின் ஊடாக பயணிக்க செய்து மற்றுமொரு சாதனையையும் நிலைநாட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## வயலெர்ஸ் கமரா

இன்றைய நிலையில் வயர்கள் இல்லாத கமராக்கள்தான் எல்லா இடங்களிலும் உள்ளன என்பது எமக்குத் தெரியும்.

அப்படியான கமராக்களில் சற்று வித்தியாசமாக ஒரு கமரா வடிவமைக்கப்பட்டுள்ளது. இது வயலெர்ஸ் தொழில்நுட்பத்தில் இயங்கும்.

நாணய வடிவில் இந்த கமரா வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த கமராவை எங்கு வேண்டுமானாலும் எளிதாக பொருத்திக் கொள்ள முடியும்.

2 மெகாபிக்சல் திறன் கொண்டது என்றாலும் 120 டிகிரி அளவுக்கு உள்ள இடத்தை முழுவதுமாக இது படம் பிடித்துக் காட்டுகிறது.



## சூரிய ஒளி மூலம் கறை நீக்கும் நுட்பம்

சூரிய ஒளியின் மூலம் அல்லது வெளிச்சத்தின் மூலம், துணிகளில் உள்ள கறைகள் நீக்கும் தொழில்நுட்பத்தை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆர்.எம்.ஐ.டி. பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

நனோ ரெக்னாலஜியைப் பயன்படுத்தி துணியில் புதிய நனோகட்டுமானங்களை உருவாக்குவதன் மூலம் துணிகளின் கறைகள் நீக்கப்படுகின்றன.

துணியில் நனோகட்டுமானங்களை உருவாக்க கொப்பர் மற்றும் சில்வர் பயன்படுத்தப்படுகிறது.

நனோகட்டுமானங்களுக்கு உட்படுத்தப்பட்ட துணிகளை சூரிய ஒளியில் அல்லது லைட் வெளிச்சத்தில் போடும்போது அவைகளின் கறைகள் நீங்கிவிடுகின்றன என்று கண்டுபிடிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கண்டுபிடிப்பு பயன்பாட்டுக்கு வந்தால் ஏகப்பட்ட நேரம் மிச்சமாவதுடன், தண்ணீரையும் சேமிக்க முடியும்என அவர்கள்நம்பிக்கைவெளியிட்டுள்ளனர்.

# டோக்கியோ சிமெந்து சுப்பர் குயிஸ் பருவம் 3 ஆரம்பச் சுற்றுக்கள் நிறைவு

டோக்கியோ சிமெந்து சுப்பர் குயிஸ் பருவம் 3 இன் ஆரம்பச் சுற்றுப் போட்டிகள் அண்மையில் நிறைவடைந்திருந்தன. கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த போட்டிகளுடன் முதல் சுற்று நிறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கொழும்பு மாவட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் ஆனந்தாக் கல்லூரி, விசாகா வித்தியாலயம், தேர்ஸ்டன் கல்லூரி மற்றும் ஸ்ரீ ராகுல பெண்கள் வித்தியாலயம் (மாலபே) ஆகியவை இறுதிச் சுற்றுக்காக தெரிவாகியிருந்ததுடன், கம்பகா மாவட்டத்திலிருந்து விகாரமகாதேவி பெண்கள் பாடசாலை (கிரிபத்கொட) மற்றும் வத்தளை புனித அந்தோனியார் கல்லூரி ஆகியவை இறுதிச்சுற்றுக்கு தெரிவாகியிருந்தன. இந்த ஆறு பாடசாலைகளுடன், ஏனைய 26 பாடசாலைகளும் இலங்கையின் 25 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுவர்ணவாஹினி தொலைக் காட்சியில் இடம்பெறவுள்ள இறுதிச் சுற்றுக்கான தகைமைகளை பெற்றுக்கொண்டுள்ளன.

கொழும்பு மாவட்ட போட்டிகள் தொடர்பில் கொழும்பு கல்வி வலயத்துக்கான பணிப்பாளர் டபிள்யு.எம். ஜயந்த விக்ரமநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், டோக்கியோ சிமெந்து சுப்பர் குயிஸ் என்பது கல்வி அமைச்சின் அனுமதியுடன் முன்னெடுக்கப்படுகிறது. அறிவுபூர்வமான விடயங்களை பகிர்ந்து கொள்வதற்கு மிகவும் உகந்த போட்டியாக அமைந்துள்ளது. இன்றைய




பாடசாலை கல்வி முறையை கவனத்தில் கொள்ளும் போது, மாணவர்கள் மத்தியில் பொது அறிவு குறைந்த நிலையில் காணப்படுகிறது. பெருமளவான மாணவர்கள் தம்மைச் சூழ்ந்து காணப்படும் உலகில் நடைபெறும் விடயங்கள் பற்றி தம்மை தயார்ப்படுத்திக் கொள்வது பற்றி பெருமளவு கவனம் செலுத்துவதில்லை. தற்போதைய பாடசாலை பாடவிதானம் காரணமாக அவர்களுக்கு போதியளவு நேரமின்மை இதற்கு பிரதான காரணியாக அமைந் துள்ளது - என்றார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் ஆனாலும், டோக்கியோ சிமெந்து மற்றும் சுவர்ணவாஹினி தொலைக் காட்சி ஆகியவற்றுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற மிகச்சிறந்த வினாவிடை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். பாடசாலைக் கல்வியுடன், மேலதிக அறிவை பெற்றுக் கொள்ள மிகவும் முக்கியமானதாக இது அமைந்துள்ளது - என்றார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், நாளாந்தம் மாற்றம் கண்டு வரும் இந்த உலகில் புதிய தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் தொடர்பில் தமது அறிவை மேம்படுத்திக் கொள்வதற்குச் சிறுவர்கள் ஆர்வம் செலுத்த வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளக்கூடிய ஆற்றல்கள் படைத் தவர்களாக இருப்பார்களாயின், அவர்களுக்கு தமது எதிர்கால வாழ்க்கையை வெற்றிகரமானதாக அமைத் துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். பிரத்தியேக அபிவிருத்தியுடன் அறிவைத் தேடுவது என்பது பாடசாலை மாணவர்களுக்கு சகல துறை விற்பன்னர்களாக திகழ்வதற்கு பெரிதும் உதவுவதாக அமைந்திருக்கும். எனவே, மருத்துவ விஞ்ஞானம், பொறியியல், ஆகாயவிமான தொழில்நுட்பம், கப்பல் விஞ்ஞானம் போன்ற பல்வேறு துறைகளில் நிகழும் முக்கியமான விடயங்கள் பற்றி கட்டாயமாக அறிந்திருக்க வேண்டும். தற்போது, பாடசாலைக்கல்வியைப்பூர்த்திசெய்துவெளியேறுவோர் மத்தியில், சிலர் மட்டுமே முறையாக தயாரப்படுத்தப்பட்ட நிலையிலுள்ளனர். போதியளவு அறிவு, தகைமை ஆகியவற்றைக் கொண்டவர்களாக உள்ளனர். இந்த சுப்பர் குயிஸ் மட்டுமல்ல, வாழ்க்கையில் அறிவை நாடுவது என்பது எம் அனைவருக்கும் பெற்றுத்தரக் கூடியதாக அமைந்திருக்கும் - என்றார்.

இந்தப் போட்டிகளை முன்னெடுத்திருந்த றோயல் கல்லூரியின் அதிபர் பி.ஏ.அபேரட்ன கருத்துத் தெரிவிக்கையில், சுப்பர் குயிஸ் போட்டிகளின் முதல் பருவக் கால வெற்றியாளராக றோயல் கல்லூரி தெரிவாகியிருந்தது. காலி ரிச்மெண்ட் கல்லூரி இரண்டாம் பருவக் கால வெற்றியாளராக தெரிவாகியிருந்தது. எனவே, இதன் மூலமாக டோக்கியோ சிமெந்து நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் போட்டிகளில் மாபெரும் பரிசை வெற்றியீட்டுவதற்கு எந்த அணிக்கும் அதிகளவு வாய்ப்புள்ளமை தெரிந்து கொள்ள முடிந்தது. பொது அறிவு வினாவிடை போட்டிகள் மூலமாக மாணவர்களுக்கு தகவல்களை அறிந்து கொள்ள சிறந்த வாய்ப்பு கிடைத்திருந்தது. இளம் தலைமுறையினருக்கு முறையாக திட்டமிடப்பட்ட விடயங்களை எவ்வாறு வெளிப்படுத்துவது என்பது பற்றி அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. அத்துடன், இந் தத் துறையில் அவர்களுக்கு தமது அறிவை பரிசோதித்துக் கொள்ளக்கூடியதாகவும் உள்ளது -என்றார்.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்படும் போட்டியில் 32 அணிகள் போட்டியிடவுள்ளன. இந்த அணிகள் வருமாறு:- கிரிபத்கொட விகாரமகாதேவி பெண்கள் வித்தியாலயம் மற்றும் வத்தளை புனித அந்தோனியார் கல்லூரி (கம்பஹா), ஆனந்தாக் கல்லூரி, விசாகா வித்தியாலயம், தேர்ஸ்டன் கல்லூரி மற்றும் மாலபே ஸ்ரீ ராகுல பெண்கள் வித்தியாலயம் (கொழும்பு), சைவப் பிரகாச பெண்கள் கல்லூரி (வவுனியா), கிளிநொச்சி மத்திய கல்லூரி (கிளிநொச்சி), வித்தியானந்தக் கல்லூரி (முல்லைத்தீவு), தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி (யாழ்ப்பாணம்), அல்-அஸார் தேசிய பாடசாலை (மன்னார்), ஸ்ரீ சண்முக கிந்து மகளிர் கல்லூரி (திருகோணமலை), டி.எஸ்.சேனநாயக்க தேசிய பாடசாலை (அம்பாறை), சாகிரா தேசிய பாடசாலை (புத்தளம்), மெதடிஸ்ட் மத்திய கல்லூரி (மட்டக்களப்பு), புஷ்பானந்த பெண்கள் வித்தியாலயம், தர்மராஜ கல்லூரி மற்றும் மகாமாய பெண்கள் கல்லூரி (கண்டி), மலியதேவ கல்லூரி (குருநாகல்), மெதபெத்த மத்திய கல்லூரி (மாத்தளை), சி.டபிள்யு.டபிள்யு.கன்னங்கர மத்திய மகா வித்தியாலயம் (களுத்துறை), மகிந்த கல்லூரி மற்றும் ரிச்மென்ட் கல்லூரி (காலி), புஹுலு வெல்ல மத்திய மகா வித்தியாலயம் (மாத்தறை), விஜத மத்திய மகா வித்தியாலயம் (பொலனறுவை), அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயம் (அநுராதபுரம்), புனித. ஜோசப் பெண்கள் மகா வித்தியாலயம் (கேகாலை), பலாங்கொட மத்திய மகா வித்தியாலயம் (இரத்தினபுரி), ராஜபக்ச மத்திய மகா வித்தியாலயம் (அம்பாந் தோட்டை), பதுளை மத்திய கல்லூரி (பதுளை), றோயல் மத்திய மகா வித்தியாலயம் (மொனராகலை) மற்றும் ஸ்ரீபாத மத்திய மகா வித்தியாலயம் (நுவரெலியா).

இலங்கையின் முன்னணி சிமெந்து மற்றும் கொங்கிறீற் உற்பத்தியாளரான டோக்கியோ சிமெந்து குறித்த போட்டிகளை 2013 ஆம் ஆண்டு ஆரம்பித்திருந்தது. இரண்டாம் நிலை கல்வியில் அறிவை மற்றும் போட்டிகரத்தன்மை ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் இந்த செயற்பாட்டை முன்னெடுத்திருந்தது.

(இ)

வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரத்தை

அதிக வெப்பம் காரணமாக மின்சார நுகர்வு அதிகரித்த காரணத்திற்காகவே, இந்த நேர மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாதாரணமாக 2 ஆயிரத்து 200 மெகா வோட்ஸ் மின்சாரம் பயன்படுத்தப்பட்டு வந்தது. எனினும், தற்போது அது 200 மெகா வோட்ஸால் அதிகரித்துள்ளது.

இந்நிலையிலேயே நேர மாற்றம் குறித்த பேச்சுகள் எழுந்துள்ளன.

தற்போது மழை காலநிலை ஆரம்பித்துள்ளதால், நேர மாற்றம் குறித்து சிந்திக்கத் தேவையில்லை எனத் தெரிவித்துள்ள மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திவலு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, இது தொடர்பான பேச்சுகள் அமைச்சு மட்டத்தில் இடம்பெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், இது தொடர்பில் குறிப்பிட்ட சில தரப்பினரால் பேசப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இன்று அலரி மாளிகையில் இடம்பெறும் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் அடங்கிய குழுவினது சந்திப்பில் நேர மாற்றம் குறித்து செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட மின்சாரப் பற்றாக்குறை காரணமாக இவ்வாறு நேர மாற்றம் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (து-வ-சி)




**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்வியியற் கல்லூரியில்
முகாமைத்துவ
உதவியாளராகக்
கடமையாற்றும் திருமதி
யோ.ஞா.விஜிதா அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி**
**மரியகொறற்றி**
**கனகராஜா**

அவர்களுக்கு எமது கண்ணீர்
அஞ்சலிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்.

**யாழ்ப்பாணம் தேசிய**
**கல்வியியற் கல்லூரிச் சமூகம்.**

**29 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
**இ.கதிரவேலு**
(அம்மான்)

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் தெய்வமே
உங்கள் நினைவுகளில்
நாம் வாழ்கின்றோம்.

குடும்பத்தினர்.

சந்தை வீதி,
தெல்லிப்பழை.

தோற்றம் 30.09.1930
மறைவு 29.03.1987

**மரண அறிவித்தல்**

**வேலுப்பிள்ளை வியாகரத்தினம்**



யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் பிரான்சை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வியாகரத்தினம் 24.03.2016 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும் நாகலட்சுமியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் இரத்தினானந்ததேவி (இலங்கை), விமலராஜா (பிரான்ஸ்), ஆனந்தராஜா(பிரான்ஸ்), சௌந்தரராஜா(நோர்வே), வசந்தராசா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான தர்மராசா, நடராசா(பாலசுந்தரம்) மற்றும் செல்லமலர், சோமசுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சபா விநாயகமூர்த்தி(J.P ஓய்வுபெற்ற பொது முகாமையாளர் வேலணை ப.நோ. கூ. சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க வேலணைப் பிரிவு தலைவர்), புஸ்பராணி(பிரான்ஸ்), சிவகுமாரி (பபா- பிரான்ஸ்), யதுகுலமணி(நோர்வே), கல்பனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராசையா, தர்மலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரதீபன்(பொதுமுகாமையாளர்- அனலைதீவு ப.நோ.கூ.சங்கம்) சந்துரு(பிரான்ஸ்), விஜயாழினி(பிரான்ஸ்), விதுஷா (பிரான்ஸ்), விநோஜன்(பிரான்ஸ்), விதுஷன்(பிரான்ஸ்), விந்துசன்(பிரான்ஸ்), விமிர்சன் (பிரான்ஸ்), வீரா(பிரான்ஸ்), வித்தியா(நோர்வே), விவேதன் (நோர்வே), வினைதா (பிரான்ஸ்), விதுரன்(பிரான்ஸ்), விஷ்ணுகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் விஷாலனின் (இலங்கை) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (26.03.2016) தொடக்கம் 1 Boulevard du General Leclerc, 92110 Clichy, Franceஎனும் முகவரியில் பி.ப. 3.00- 5.00 மணி வரைக்கும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (30.03.2016) புதன்கிழமை ந.ப 12.00 - 2.20 மணிவரை நடைபெற்று பூதவுடல் Crematorium Clu pere Lachaise, 71 Ruedes Rondeaux, 75020 Paris, France (Metro, Gam betta) எனும் முகவரியில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.02 வெங்கடேசன்
வடக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(70328)
(12.17.18)

தகவல்: .சபாவிநாயகமூர்த்தி
(மருமகன்)

**021 373 7353**

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

மலர்வு
25
01
1941



இறையடி
28
02
2016

அமரர்
**கலாநிதி கந்தையா குணராசா**
(சாகித்யாரத்னா செங்கை ஆழியான்)

கடந்த 28.02.2016 அன்று இறையடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தையா குணராசா அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் 29.03.2016 அன்று நடைபெறும். 30.03.2016 அன்று கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் மணி மண்டபத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து மதியபோசன விருந்தில் குடும்ப சமேதராகக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு :- இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்கள் யாருக்காவது அழைப்பிதழ் அனுப்பத் தவறியிருப்பின் பெரிய மனதுடன் எம்மை மன்னித்து நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

75/10A, பிறவுண் வீதி,
நீராவியடி.

**குடும்பத்தினர்.**

**077561148, 222 2337**

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

அமரர்
**கந்தையா**
**சிவகுருநாதன்**

தோற்றம்
26.09.1945



மறைவு
29.02.2016

கடந்த 29.02.2016 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் கந்தையா சிவகுருநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (30.03.2016) புதன் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு துயர்பகிர்ந்தும், பல வழிகளில் பல்வேறு உதவிகள் புரிந்தும் எமது கவலையைப் பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அராலி கிழக்கு,
அராலி.

(70276)(1,16)

**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு

29 • 03 • 1932



இறப்பு

27 • 03 • 2016

## திரு.அப்பாத்துரை சீவரத்தினம்

(ஓய்வுபெற்ற நிர்வாக செயலாளர் அஞ்சல் திணைக்களம்)

யாழ். கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை சீவரத்தினம் அவர்கள் 27-03-2016 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்-சென்றவர்களான நடராஜா, இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சண்முகதேவி அவர்களின் அன்புக் கணவரும், சிவசக்தி, முகுந்தன், ரமணஹரன், அருணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், இராஜலக்சுமி, குணபாலசிங்கம், முத்துலிங்கம், காலஞ்சென்ற கந்தரலிங்கம், பாலசரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வி.பி பரமலிங்கம், சுகந்தி, சிவராகினி, சிவகுமாரி (மஞ்சு) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரி, இராஜரத்தினம், மற்றும் கமலேஸ்வரி, கமலரஞ்சினி, விவேகானந்தராஜா ஆகியோரின் அன்பு மைத்து-னரும் வைகுந்தன், ஹம்ஸத்வனி வினய், விநாயகன், டிலாரா, ஹரிணி, நாராயணி, சோபிணி, ராம்சரன், ரமவீசன், சுவாஸினி, வத்சன் ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

*அன்னாரின் இறுதிக்கிரியை 30-03-2016 புதன்கிழமை அன்று மு.ப 11:00 மணியளவில் No: 38/2A, Shrubbery Gardens, Colombo- 04 என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கனத்தை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்*

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
தொலைபேசி : +94112592529
+94772974996

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## கைலாசபிள்ளை செல்வராணி



வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், 149/3 கலாசாலை வீதி (பாற்பண்ணை வீதி), திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை செல்வராணி 27.03.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சங்கவதியம்மா தம்பதிகளின் அன்பு மகளும் விசுவலிங்கம் நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் கைலாசபிள்ளை (வடிவேல் ஸ்ரோர்ஸ் - வங்களாவடி, முன்னாள் வர்த்தகர்) அவரின் அன்பு மனைவியும், மகேந்திரனின் பாசமிகு சகோதரியும், நடேசமூர்த்தி, நாகேஸ்வரி, விக்கினேஸ்வரன், விக்கினேஸ்வரி, மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார். ஜசிந்தா (ஆசிரியர் யா/றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை) ஜெகதீசன் (பொறியியலாளர் சிங்கப்பூர்) ஜெனார்த்தனி, ஜெயகாந்தன் (B.com லண்டன்) ஜெயமாலா (ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயக்குமார், (முன்னாள் வர்த்தகர் அம்பாள் ஸ்ரோர்ஸ், காலி) ரஜந்தி (சிங்கப்பூர்), சதீஸ் (உரிமையாளர் மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்), தர்சினி (B.Com) ஆயவன் (ஆசிரிய ஆலோசகர் கிளிநொச்சி வலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். சானுஜன், கயூரன், ரக்சயன், ஆதித்தியா, ஐஸ்வரியா, ஜெய்காஸ், பிரஹாயினி, டயாளினி, தருணிகா, அர்ட்சயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29.03.2016 செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்கான கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துக் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

149/3 கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

*தகவல்*
குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

திருவாளர்

## செல்லத்துரை மாசிலாமணி

**மலர்வு: 13.06.1948 உதிர்வு: 27.03.2016**

நயினாதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா தோணிக் கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மாசிலாமணி அவர்கள் 27.03.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், நாரந்தனை வடக்கு ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான அருளம்பலம்-குலக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், புஸ்பரெத்தினத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சதானந்தன் மற்றும் ஓங்காரநாதன், திருவாசகம் (தியாகு), காலஞ்சென்ற நேமிநாதன் மற்றும் கமலேஸ்வரன் (கருணா), மோகனா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீவரதன், சுதர்சனன், ஸ்ரீசங்கர், மயூரன் ஆகியோரின் பேரன்புத் தந்தையும், சுவாதினி, லோகதர்ஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சோதிலிங்கம், தட்ஷணாமூர்த்தி, கருணாமூர்த்தி, கோணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், விஜயராணி, சுபத்திரா, ராணி, இந்திராணி, சுகந்தி, நித்தியானந்தன் ஆகியோரின் மைத்துனரும், இந்திராணி, இந்திராணி, இந்திரேஸ்வரி, லோகேஸ்வரி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் ஸ்ரீவர்ஷன், மகிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.03.2016 புதன்கிழமை அவரின் இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**இல.26, சேக்கிழார் வீதி,**
**தோணிக்கல், வவுனியா.**
**0242224295, 0777488211.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(68239) (10,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவே கோத்தாவை தேர்தலில் நிராகரித்தார்

## அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு



கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது பிரதமர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச மற்றும் சமல் ராஜபக்ச ஆகியோரின் பெயர்கள் பரிந் துரைக்கப்பட்ட போதிலும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அதனை நிராகரித்தார் என்று அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை ஒன்றில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கோத்தபாய ராஜபக்சவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியொன் றைப் பெற்றுக் கொடுக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களிடையே பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று ஊடகங்களில் தகவல் வெளியாகியுள் ளது.

கோத்தபாய ராஜபக்சவைப் பிரதமராகக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த அரசின்போது விருப்பம் தெரிவித்திருந்தார். எனினும், இந்த யோசனைக்கு மகிந்த ராஜபக்சவே முதலில் எதிர்ப்புத் தெரிவித்தார் என்று அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ஐ-5)

### வித்தியா

வித்தியா என்ற மாணவி தொடர்பான வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது வழக்கில் குற்றஞ்சுமத்தப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதில் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி வழக்குத் தொடர்பான நிலைமை பற்றிய மேலதிக தகவல்களை நீதிமன்றுக்கு அறிவித்தார்.

இதனையடுத்து 2 சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையாகும் தென்பகுதி சட்டத்தரணி அசேல டி சில்வா, பொதுவாகவே குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்படுபவர்கள், சுமார் ஒரு வருடத்தின் பின்னர் பிணையில் விடப்படவேண்டும் என்ற நியதி உள்ளது. தவிர, குறித்த 2 சந்தேக நபர்களையும் சந்தித்துக் கதைப்பதற்கு அனுமதி தரவேண்டும் என்று கோரினார்.

எனினும் குறித்த வழக்கு முக்கியமான வழக்கு. சமூகத்தின் பார்வை இந்த வழக்கின் பக்கம் திரும்பியுள்ளது. இதனைச் சாதாரண நிலைமையாகக் கொள்ள முடியாது என்று குறிப்பிட்ட நீதிவான், அவர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்திருப்பது பற்றிய அனுமதி சட்டமா அதிபரிடம் பெறப்படும் என்று தெரிவித்தார்.

தவிர, குறித்த 2 சந்தேக நபர்களையும் சந்திக்க அனுமதி வழங்குவது பற்றியும் சட்டமா அதிபரிடம் அனுமதி பெற்ற பின்னரே கூற முடியும் என்று நீதிவான் அறிவித்தார்.

அது மட்டுமன்றி வித்தியா கூட்டு வன்புணர்வில் கொல் லப்பட்டமை தொடர்பில், அங்கு வேறு யாராவது சென்று விசாரணை மேற்கொண்டுள்ளனரா என்பது பற்றியும், அவர்களது சுற்றாடல் நிலைமை பற்றியும் விசாரணை செய்யுமாறும் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு, நீதிமன்று கட்டளையிட்டது.

இவற்றைவிடக் குறித்த வழக்கில் முதல் 3 சகோதரர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களது விசாரணையின் மூலமாகச் சுவிஸ் குமார் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பற்றிய விசாரணை தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில், வித்தியாவின் வீட்டுக்குச் சென்று அவர் பற்றி விசாரித்தபோது, பின்னர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த 10 சந்தேகநபர்களும் விளக்கமறியலில் இருந்து விசாரிக்கப்பட்டு வரும் நிலையில், 11 ஆவது சந்தேக நபராக ஒருவர் உள்ளார் என்று பொலிஸார் ஒருவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளபோது, 12 ஆவது சந்தேக நபராகக் கண் கண்டசாட்சி ஒருவர் உள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

பின்னர் குறித்த 12 ஆவது சந்தேக நபரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். விசாரணைகள் தொடர்வதாகப் பொலிஸார் கூறுகின்றனர். இதுவரை பொலிஸாரின் தகவலின்படி 12 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் முன்னர் கைது செய்யப்பட்ட 9 பேர் பற்றிய மரபணுப் பரிசோதனை அறிக்கை உள்ளிட்ட எந்தவொரு அறிக்கையும் பொலிஸாரால் இதுவரை நீதிமன்றில் முற்படுத்தப்படவில்லை. அவற்றைச் சமர்ப்பிப்பதில் இன்னும் இழுபறி நிலையே காணப்படுகிறது.

இந்த நிலையில் இந்த வழக்கு எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவி சார்பில் சட்டத்தரணிகளான கே.சுகாஸ், வி.மணிவண்ணன், ஏ.றஞ்சித்குமார் ஆகியோரும் எதிரிகளில் 10 ஆவது சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி ஜோய்மகிழ் மகாதேவாவும் ஏனைய 2 சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி அசேல டீசில்வாவும் முன்னிலையாகியிருந்தனர். (த-வ-4)

### கிணறு

அங்கு பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லூர்-யமுனாவீதியில் கல்வியங்காடு சந்தியை அண்மித்து உள்ள தனியார் காணி ஒன்றிலிருந்து நேற்றுப் பிற்பகல் குறித்த வெடி பொருள் மருந்துகள் மீட்கப்பட்டுள்ளன. அவை டைனமற், டெற்றனேற்றராக இருக்கலாம் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு, இன்று அவை மீட்கப் படவுள்ளன. கிணறு வெட்டுவதற்காக நிலத்தைத் தோண்டிக்கொண்டிருக்கும்போது, அவை வெளிப்பட்டுள்ளன. முதலில் சிறிய பெரல் மீட்கப்பட்டுள்ளது.

அதனை மீட்கும்போது, பிரிந்துவிட்டதனால் அவை வெடிமருந்து தூள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. தவிர புதையுண்ட நிலையில் அங்கு இன்னும் சில பெரல்கள் காணப்பட்டதனால் அது தொடர்பில் அந்தப் பகுதி கிராம அலுவலர் ஊடாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து குறித்த இடத்திற்குச் சென்ற பொலிஸார், அந்தப் பகுதியில் பாதுகாப்புக் கடமையினை மேற்கொள்கின்றனர்.

அத்துடன், நீதிமன்றின் அனுமதி பெற்று, குறித்த இடத்தை மேலும் தோண்டி, வெடி மருந்து தொடர்பில் ஆராயவுள்ளதாக பொலிஸார் குறிப் பிட்டனர். (வ-4)

## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை கிளமென்ற் (ஜலந்தர்)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை கிளமென்ற் (ஜலந்தர்) நேற்று (28.03.2016) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2016) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 076 6833754 தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி பக்தகௌரியம்மா (கௌரி) இராதாகிருஷ்ணன்

(ஓய்வு பெற்ற பொறுப்பு தாதிய உத்தியோகத்தர்- போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)



**தோற்றம்- 29.09.1943**
**மறைவு- 27.03.2016**

யாழ் எழுவைதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பக்தகௌரியம்மா இராதாகிருஷ்ணன் 27.03.2016 ஞாயிற் றுக்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-கனகம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான இராசையா-வள்ளிநாயகி தம்பதியினரின் மருமகளும் இராதா கிருஷ்ணன் (கனடா) அவர்களின் அன்பு மனைவியும் வண்மீகலிங்கம் (சுவிஸ்) அவர்களின் அன்புச் சகோதரியும் சாயிபிரதீபா (கனடா), பார்த்திபன் (மின்பொறியியலாளர்-இலங்கை மின்சார சபை) Dr.பிருந்தா (போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லம்போதரன் (கனடா), சுபாசினி (பிரதேச செயலகம்,சங்கானை) Dr. நளிதன் (ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அபிஷனா, அஷ்விகா, அனிஷ்கன், லுஷாரா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (30.03.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

54/4, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
மகன் : 0777638186

### அம்பலவாணர் சிவலோகநாதன்

**பிறப்பு 27.11.1948 இறப்பு 27.03.2016**



சூறாவத்தை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சிவலோகநாதன் 27.03.2016 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-பார்வதி தம்பதியரின் பாசமிகு மகனும், இளையவி - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும் அனுசியா (ஜேர்மன்),அனுரா (ஜேர்மன்), மாலினி, சிவசங்கர், விமல் (பிரான்ஸ்), சுயன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சக்திவேல், ஜெசிந்திரா, குமுதராஜா (மதி), அனுசா (கனடா), வாஜினி ஆகியோரின் அன்பு மாமனும் சுருதி, சஞ்சய், சுவேதி, ஆரதி, குபேரன், குக்ஷன், றிசானி ஆகியோரின் அன்புப் பேரனும் திருச்செந்திவேல் காலஞ்சென்ற மகாலிங்கம் (மகான்) மற்றும் கமலராணி (ராணி) காலஞ்சென்ற ஈஸ்வரி (வவா) மற்றும் அருணகிரி நாதன், திலகவதி, சத்தியதேவி காலஞ்சென்ற சிவகுருநாதன் (நாதன்) மற்றும் சடாச்சரலிங்கம் (சற்குரு-கனடா) பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனலட் சுமி, பாலகிருஷ்ணன், குணரட்ணம், சிவபாக்கியம், சந்திரகுமார், வேலாயுதம் (செல்லக்கிளி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.03. 2016) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சூறாவத்தையிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 10.04.2015
இறைபதம் அடைந்த

### அமரர் இராசரத்தினம் யோகேஸ்வரன்



வாழ்க்கை என்னும் பாதையில்
எம்மோடு பயணித்து
இவ்வுலகைவிட்டு பிரிந்து இன்றுடன்
ஓராண்டு காலம் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு என்றென்றும் மறையாது.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.*

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(70348)(10.17.18)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

### சடையன் செல்லன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.06.1937 | 28.02.2016 |



கடந்த 28.02.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.03. 2016) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]

(70347)
(10.17.18)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் வல்வை ஆதி சக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(ம-108-23)

# கிண்ணம் வென்றது டயமன்ஸ் கரவெட்டிப் பிரதேச கால்பந்தில்

மாங்குளம், மார்ச் 29

கரவெட்டிப் பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் டயமன்ஸ் அணியை எதிர்த்து யங் கம்பன்ஸ் அணி மோதியது. ஆட்டத்தின் முதல் பாதியிலேயே டயமன்ஸ் தனது ஆதிக்கத்தை வலுவாகப் பதிவுசெய்தது. அந்த அணியின் துசிகரன், பிறேம் குமார் இருவரும் 6ஆவது, 9ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்தனர். 19ஆவது நிமிடத்தில் கிடைத்த மூலை உதையை யங்கம்பன்ஸின் பிரகாஸ் சரியாகப் பயன்படுத்த முதல் பாதியின் முடிவில் டயமன்ஸ் 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.



இரண்டாம் பாதியில் தேடி வந்த சில வாய்ப்புக்களை யங்கம்பன்ஸ் அணி வீணாக்க அதுவே அந்த அணிக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தியது. 10ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி, தனக்குக் கிடைத்த தண்டனை உதையையும் சரியாகப் பயன்படுத்த முடிவில் அந்த அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-422-108)

## அல்ஹிஜிராவின் கால்பந்துத் தொடர்

யாழ்ப்பாணம், மார்ச் 29

சமூக நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் வவுனியா அல்ஹிஜ்ரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தத் திட்டமிட்ட விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் முதலாம் திகதி முதல் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெறவுள்ளது. மேற்படி தொடரில் 22 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-23)

## இறுதியில் 786

யாழ்ப்பாணம், மார்ச் 29

யங்ஸ்ரார் வி.கழகம் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் 786 அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் 'ஏ' அணியை எதிர்த்து 786 அணி மோதிக் கொண்டது. இதில் 786 அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

### தமிழில்

உருவாக்கும் வகையில் வெசாக் கொண்டாட்டம் நடைபெறவுள்ளது. இதுபோன்று முஸ்லிம்களின் இப்தார் கொண்டாட்டமும், இந்துக்களின் பண்டிகைகள், கிறிஸ்தவர்களின் பண்டிகைகள் என்பனவும் எதிர்வரும் காலத்தில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் நாடு பூராகவும் கொண்டாடப்படவுள்ளன.

நான் தென்பகுதியில் இருந்த போது தீபாவளி தினத்தை இதே போன்று கொண்டாடினேன். மத நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவதற்காக, இந்த வெசாக் கொண்டாட்டத்தை வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளவுள்ளோம். இதற்கான ஆரம்பக் கலந்துரையாடல் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி, அரச அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்டது.

நல்லிணக்க வெசாக் கொண்டாட்டத்துக்கு, கல்வித் திணைக்களம், இராணுவத்தினர், சர்வமதக் குழுவினர், நாக விகாரையின் பௌத்த பாதுகாப்பு மகா சபையினர் அனைவரும் ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு, வடக்கு மாகாணப் பாடசாலைகளில் வெசாக் கூடுகளை அமைப்பதற்கான போட்டிகளும், அன்னதான நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. துரையப்பா விளையாட்டரங்கம் முதல் நாக விகாரை வரையில் வெசாக் தோரணங்களும் கூடுகளும் அமைக்கப்படவுள்ளன.

இவற்றை அனைவரும் பார்வையிடலாம். அத்துடன் வடக்கில் முதல் முறையாக நாகவிகாரையில் வெசாக்தினத்தன்று பௌத்த உபதேசம் தமிழ் மொழியில் மத குருவால் ஓதப்படவுள்ளது. தென்பகுதி மக்களை அழைத்து வரவுள்ளோம் – என்றார்.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த சிறீ விமல தேரர்,

வடக்கில் உள்ள 12 விகாரைகளிலும் கொண்டாட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. தென்பகுதியில் இருந்து கொண்டு வரப்படும் பொருள்கள் அன்னதானமாக வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளன. வடக்கில் வறிய நிலையில் காணப்படும் பாடசாலை ஒன்று தென்பகுதியில் உள்ள சிறந்த பாடசாலையுடன் இணைக்கப்படவுள்ளது. நாவற்குழியில் உள்ள 37 சிங்களக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவுள்ளன – என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் சர்வமதப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட போதும் அவர்கள் கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை.

(த-வ-5-ரி5)

### பழைய

புதிய தேர்தல் முறைமை அறிமுகம் செய்வதாக அரசு வாக்குறுதி வழங்கியது. இந்த நிலையில் பழைய முறையில் தேர்தல் நடத்த முடியாது. தேர்தல் முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென அனைத்து அரசியல் கட்சிகளும் இணங்கியுள்ளன. தேர்தல் நடத்தாமை அரசுக்குச் சிக்கல் என்றபோதிலும் உரிய முறையில் தேர்தலை நடத்த வேண்டியது அரசின் கடமையாகும்.

மேலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சிலர் பெயர்ப் பலகைக்குள் மட்டுப்படுத்த முயற்சிக்கின்றனர். அது முடியாத காரியம். சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ஆகியோர் பங்கேற்கும் கூட்டங்களில் பங்கேற்றுக் கூக்குரல் இடுவதனால் கட்சியைத் தோற்கடித்துவிட முடியாது.

சிலர் திட்டமிட்டு இவ்வாறு கூக்குரல் இடுவதனால் கட்சியை உள ரீதியாகப் பாதிப்படைச் செய்ய முடியும் என்று நினைக்கின்றார்கள். ஒன்றைக் கூற விரும்புகின்றேன். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் போன்று நேர்மையான – ஜனநாயக ரீதியான ஓர் அரச தலைவர் நாட்டில் இருந்ததில்லை.

சுதந்திரக் கட்சி மைத்திரிபால சிறிசேனவுக்கோ, மகிந்த ராஜபக்சவுக்கோ அல்லது சந்திரிக்கா பண்டாரநாயக்கவுக்கோ சொந்தமான தனிச்சொத்து கிடையாது. இதனால் அனைத்துத் தலைவர்களும் ஒன்றிணைந்து கட்சியைப் பாதுகாத்து கொள்ள முயற்சிக்க வேண்டும் – என்றார்.

(த-வ-5)

### 65,000 வீட்டுத்

திட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. வடக்கு மாகாண சபையிலும் குறித்த பொருத்து வீட்டை நிராகரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் கடந்த 18 ஆம் திகதி, வீடமைப்பை மேற்கொள்ளும் தனியார் நிறுவனம் பொதுமக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக விண்ணப்பப் படிவங்களைத் தயார் செய்து மாவட்டச் செயலகத்துக்கு வழங்கியது. மாவட்டச் செயலகத்தினால் அவை பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டன.

குறித்த படிவத்தில் அதனை விநியோகிப்பவர்கள் யார் என்பது தொடர்பிலான எந்தவொரு அதிகார உரிமை கோரலும் இடம்பெறவில்லை. அநாமதேயப் படிவம் போன்றே அவை விநியோகிக்கப்பட்டது.

இந்த நிலையில், மீள்குடியேற்ற அமைச்சு தனது அமைச்சின் அதிகாரபூர்வ உரிமை கோரலுடன் 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவுக்கான விண்ணப்பப் படிவத்தை மாவட்டச் செயலகத்தின் ஊடாகப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தின் அடிப்படையிலேயே பயனாளிகள் தெரிவு, புள்ளியிடல் மூலமாக மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-வ-5)

### வடக்கில்

அமைப்பினர், அங்குள்ள சிங்கள மக்களுடன் கலந்துரையாடல் நடத்தியதுடன், அவர்களுக்கான உதவித் திட்டங்களையும் வழங்கியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தின் அவுரந்துலாவ பிரதேசத்துக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிங்க லே அமைப்பின் தலைவர் ஜம்துரே சந்திரரட்ண தேரர் உள்ளிட்ட குழுவினர் வருகை தந்தனர்.

இந்தப் பகுதியிலுள்ள சிங்கள மக்கள் சில தினங்களுக்கு முன்னர் வீதிப் புனரமைப்புக் கோரி, போராட்டம் நடத்தியிருந்தனர். இந்தப் போராட்டத்தின் முடிவில் கோரிக்கை மனுவைச் சிங்க லே அமைப்பிடமும் அனுப்பி வைத்திருந்தனர். அந்த மனுவினைப் பரிசீலிப்பதற்காக வருகை தந்ததாக சிங்க லே அமைப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

இருப்பினும் குறித்த பகுதியில் சிங்க லே அமைப்பின் நிதி உதவியில் அமைக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கான சுகாதார வைத்திய நிலையம் ஒன்றினையும், அவர்கள் இந்தப் பயணத்தின்போது திறந்து வைத்துள்ளனர்.

அத்துடன் அங்கு வாழும் விசேட தேவைக்குட்பட்டோர், வறுமைக் கோட்டுக்குட்பட்டோர், விகாரையில் கல்வியைத் தொடரும் மாணவர்கள் எனப் பலருக்கும் பல்வேறு விதமான உதவித் திட்டங்களை வழங்கி வைத்துள்ளனர்.

தென்பகுதியிலுள்ள சிங்கள – பௌத்த அமைப்பான பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் அண்மையில் முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இதன்போது முல்லைத்தீவிலுள்ள சிங்கள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன் பின்னர் தென்பகுதியிலுள்ள சிங்கள – பௌத்த அமைப்பான சிங்க லே அமைப்பின் பிரதிநிதிகள் வடக்குக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

### சூட்டைத்

டிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் திடீரென யாழ்ப்பாணத்தில் மழை பெய்தது. காலையிலிருந்து மாலை வரையிலான அளவீடுகளின் அடிப்படையில் 1.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 36 பாகை செல்சியஸ் வெப்பம் நிலவி வந்தது. மழையினால் வெப்ப நிலையில் பெரியளவில் மாற்றம் ஏற்படவில்லை.

இடப்பெயர்ச்சிப் பருவகாலம் ஆரம்பமாவதால் மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் எனவும் திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

(த-வ-5-ரி4)

### நயினையில்

ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நயினாதீவில் 75 அடி உயரமான புத்தர் சிலை 12 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கான ஆரம்பக் கட்ட வேலைகளும் பூர்த்தியாகியிருந்தன. தற்போது இதன் தொடர் வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்தப் புத்தர் சிலைக்கு யாழ். மாவட்டச் செயலகத்திடம் அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இதன்போது மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகம், சிலை அமைப்பது தொடர்பில் உள்ளூராட்சி திணைக்களம் மற்றும் கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றின் அனுமதிகளைப் பெற்று, அதன் பின்னர் விண்ணப்பிக்குமாறு அறிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் ஆளுநரிடம் இந்தப் புத்தர் சிலை அமைப்பது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டபோதே, அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

பௌத்த விகாரைகளிலும் இந்து தெய்வங்களின் சிலைகள் காணப்படுகின்றன. இந்தப் புத்தர் சிலை இந்து ஆலயத்தை மறைத்து அமைக்கப்படுவதாகக் குற்றம் சுமத்துகின்றனர். உண்மை அதுவல்ல. மேலும், இந்தப் புத்தர் சிலை அமைக்கும் பணிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டமைக்கு உண்மையான காரணம், கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதால்தான் – என்றார் ஆளுநர்.

(த-வ-5-ரி5)

### மல்லாவி

ஆசிரியரே உயிரிழந்துள்ளார்.

குறித்த ஆசிரியர் நேற்றைய தினம் பாடசாலை முடிந்து மோட்டார் சைக்கிளில் தனது சகோதரியின் வீட்டுக்குச் செல்லும் வழியில், பாலிநகருக்குத் திரும்பும் மல்லாவி – ஒட்டறுத்தகுளம் அந்தோனியார் கோவிலடி வீதியில், ஓட்டோவுடன் மோதுண்டுள்ளார். இந்த விபத்தில் ஆசிரியர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக மல்லாவிப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மல்லாவி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(த-வ-422-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரையிறுதியில் காளியம்பாள்

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ். மாவட்ட தாச்சித் தொடரில் தாவடி காளியம்பாள் அணி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் தாவடி காளியம்பாள் அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் அணி மோதிக் கொண்டது. இதில் தாவடி காளியம்பாள் அணி 9:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (ம-23)

## ஜேர்மனியை வீழ்த்தியது இங்கிலாந்து



இங்கிலாந்து , ஜேர்மனி அணிகளுக்கு இடையே கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சிநேகபூர்வ கால்பந்தாட்டம் ஒன்றில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்த ஆட்டத்தின் 43 ஆவது, 57ஆவது நிமிடங்களில் முறையே ஜேர்மனியின் ரொனி குரூஸ், மரியோ கோமிஸ் இருவரும் கோல்களைப் பெற்றிருந்த நிலையில் இங்கிலாந்து 0:2 என்று பின்தங்கியிருந்தது. பின்னர் ஆட்டத்தின் 61ஆவது, 74ஆவது, 91ஆவது நிமிடங்களில் முறையே ஹரி கேன், ஜேமி வர்டி, எரிக் டையர் ஆகியோர் இங்கிலாந்து சார்பாக கோல்களைப் பதிவுசெய்ய அந்த அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம)



## ஓட்டங்களைக் குவிக்க வேண்டும் என்ற பசி கோக்லியிடம் அதிகமாக உள்ளது –டோனி

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் சிறப்பாக ஆடிய விராட் கோக்லிக்கு இந்திய அணித்தலைவர் டோனி பாராட்டுத் தெரிவித்துள்ளதுடன் சிறப்பாகச் செயற்படாத ஆரம்ப வீரர்களான ரோகித், தவான் இருவரையும் மறைமுகமாகத் தாக்கிப் பேசியுள்ளார்.


ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் தனியாளாக போராடிய கோக்லி, கடைசி வரை ஆட்டமிழக்காமல் 51 பந்துகளில் 82 ஓட்டங்கள் குவித்து இந்திய அணியின் வெற்றிக்கு உதவினார். வெற்றியின் பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே டோனி இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

டோனி மேலும் தெரிவிக்கையில் –நாம் எப்போதும் கோக்லியை மட்டுமே நம்பிக் கொண்டிருக்கக் கூடாது, மற்ற வீரர்களும் பங்களிப்பை வழங்க வேண்டும். கோக்லியைத் தவிர்த்து இந்திய அணியின் மற்ற துடுப்பாட்ட வீரர்கள் 60 அல்லது 65 சதவீதத்தை மட்டும் தான் தங்களது திறமையில் வெளிப்படுத்தி வருகிறார்கள். அவர்கள் அதை மாற்றி முழுத் திறமையோடு ஆட வேண்டும். கோக்லியின் ஆட்டத்தை எதிர்முனையில் நின்று நான் ரசிப்பது இது முதன்முறை கிடையாது. கடந்த சில வருடங்களாக கோக்லி தனது ஆட்டத்தைத் தானே மேம்படுத்தியுள்ளார். அணிக்காக ஓட்டங்களை குவிக்க வேண்டும் என்ற பசி அவரிடம் அதிகமாகவே உள்ளது. எனவே தான், அவர் ஒவ்வொரு ஆட்டத்திலும் புதிய உச்சங்களைத் தொட்டு வருகிறார். ஓடி ஓட்டங்கள் சேர்ப்பது என்பது தற்போதைய கிரிக்கெட் உலகில் மிக முக்கியமான செயலாகும். ஒரு ஓட்டம் ஓட வேண்டிய நேரத்தில் இரண்டு ஓட்டங்களை ஓடுவது எதிரணியினருக்கு சோர்வைக் கொடுக்கும். நானும் கோக்லியும் இதைத்தான் செய்தோம்– என்றார். (ம)

## மியாமி ரென்னிஸ் தொடரில் வாவ்ரிங்கா அதிர்ச்சித் தோல்வி

நடைபெற்றுவரும் மியாமி ரென்னிஸ் தொடரில் சுவிற்சர்லாந்தின் வாங்ரிங்கா அதிர்ச்சித் தோல்வியடைந்துள்ளார்.

ரஷ்யாவின் ஆந்ரே குஸ்னெட்சோவை எதிர்த்து நேற்று முன்தினம் மோதிய அவர் முதல் செற்றை 4-6 என்ற கணக்கில் இழந்தார். இரண்டாவது செற்றிலும் வாவ்ரிங்காவின் தடுமாற்றம் தொடர்ந்தது. இதனால் அவர் இரண்டாவது செற்றை 3-6 என்ற கணக்கில் பறிகொடுத்து அதிர்ச்சித் தோல்வி கண்டார். (ம)



## 'வெட்கப்படுகிறோம் வெட்கப்படுகிறோம்' பாகிஸ்தான் அணிக்கு எதிராக ரசிகர்கள்

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் சொதப்பி நாடு திரும்பிய பாகிஸ்தான் வீரர்களுக்கு அந்த நாட்டு ரசிகர்கள் எதிர்ப்புக் குரலை எழுப்பியுள்ளனர்.

பாகிஸ்தான் அணி தான் எதிர்கொண்ட நான்கு ஆட்டங்களில் ஒன்றில் மட்டுமே வெற்றி பெற்றது. இந்தியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய அணிகளிடம் தோல்வியடைந்த பாகிஸ்தான், பங்களாதேஷை மட்டுமே வீழ்த்தியது. இதனால் 2 புள்ளிகள் மட்டுமே பெற்று தொடரை விட்டு வெளியேறியது. நேற்று சொந்த மண் திரும்பிய வீரர்களுக்கு எதிராக விமான நிலையத்தில் வந்திருந்த ரசிகர்கள் "வெட்கப்படுகிறோம்" "வெட்கப்படுகிறோம்" என எதிர்ப்புக் குரலை வெளிப்படுத்தியுள்ளனர். பாகிஸ்தான் அணியின் தலைவர் அப்ரிடி இன்னும் நாடு திரும்பவில்லை. டுபாயில் தங்கியுள்ள அவர், தனது ஓய்வு குறித்து முடிவெடுக்கவுள்ளார். (ம)





## பாதியில் விலகிய நடால்

உலகின் முன்னணி ரென்னிஸ் வீரர்களில் ஒருவரான ரபேல் நடால், கடந்த ஆறு ஆண்டுகளில் முதன்முறையாக, ஓர் ஆட்டத்தின் நடுவிலிருந்து விலகியுள்ளார்.

மியாமி ரென்னிஸ் தொடரின் ஆட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு விலகியுள்ளார்.

இந்தத் தொடருக்காக 5ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டிருந்த ரபேல் நடால், உலகின் 94ஆம் நிலை வீரரான பொஸ்னியாவைச் சேர்ந்த டமிர் ஸும்ஹுருக்கெதிராக விளையாடிக் கொண்டிருந்தார். ஆட்டத்தின் முதல் செற்றை 6-2 என்ற கணக்கில் கைப்பற்றிய நடால், அடுத்த செற்றை 4-6 என்ற புள்ளிகள் அடிப்படையில் இழந்தார். மூன்றாவது செற்றில் 0:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பின்தங்கியிருந்த போது, விலகுவதாக அறிவித்தார்.

விலகியமை தொடர்பாக நடால் தெரிவிக்கையில்–முதலாவது செற்றின் இறுதிவரை அனைத்துமே சரியாக இருந்தன. அதன் பின்னர் மயக்கம் வருவது போன்று உணர்ந்தேன். அது தொடர்ந்தும் மோசமடைந்தது. இதனால் ஆட்டத்தை முடிக்க விரும்பினேன், ஆனால் என்னால் முடிந்திருக்கவில்லை. எனது உடலாரோக்கியம் தொடர்பாக [illegible] தை நான் நிறுத்தினேன்– என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் ரி–20 அரையிறுதிகள்

பெண்களுக்கான ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன. நாளை நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை எதிர்த்து இங்கிலாந்து மோதவுள்ளது. நாளை மறுதினம் நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்தை எதிர்த்து மேற்கிந்தியத் தீவுகள் மோதவுள்ளது. (ம)



# இலங்கையை ஊதித்தள்ளியது தென்னாபிரிக்கா சகல துறைகளிலும் அசத்தலாகச் செயற்பட்டு

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இலங்கை, தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 8 இலக்குகளால் இலங்கையை வீழ்த்தியது தென்னாபிரிக்கா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. கடந்த ஆட்டத்தில் மத்தியூஸிற்கு தசைப்பிடிப்பு ஏற்பட்ட காரணத்தினால் நேற்றைய ஆட்டத்தில் அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டிருந்தது. இதனால் தலைவராக சந்திமல். ஆரம்ப வீரர்களாக சந்திமல், டில்சான். இலங்கை பெரும் ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தால் தரப்படுத்தலில் இறுதி இடத்துக்குச் செல்லுவதற்கான வாய்ப்பும் இருந்தது. இதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் ஆரம்பத்திலேயே இருவரும் வெளுத்து வாங்கினர். பந்துப்பரிமாற்றத்துக்கு பத்து ஓட்டங்கள் என்றவாறாக அமைந்தது இலங்கையின் சராசரி. சந்திமல்லை போல்ட் செய்து இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் பங்கிசோ. அடுத்த பந்தில் போல்ட் ஆனார் திரிமன்னே. சராசரியில் சடுதியான வீழ்ச்சி ஏற்பட்டது. பந்துகளை வீணடித்து ஓர் முனையில் நிலைத்து நின்ற டில்சான் சிறிது நம்பிக்கை கொடுத்த சிறிவர்தனவை, தவறான அழைப்பின் மூலம் ரண்அவுட் ஆகும் வாய்ப்பையும் ஏற்படுத்தினார் . கப்புகெதர நான்கு ஓட்டங்களுடனும், பெரேரா எட்டு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க 36 ஓட்டங்களுடன் டில்சானின் இன்னிங்ஸும் முடிவுக்கு வந்தது. இந்த 36 ஓட்டங்களுக்காக அவர் 40 பந்துகளை எடுத்துக் கொண்டார். பின்வரிசை வீரர்களாலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாததால் 120 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக அப்பொட், பங்கிசோ, பெக்கார்டின் மூவரும் தலா இரு இலக்குகளையும், தாகிர், ஸ்ரெயின் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கியது தென்னாபிரிக்கா. முதல் பந்துப்பரிமாற்றம் சிகான் ஜெயசூரியவிடம் கொடுக்கப்பட்டது. இரு பவுண்டரிகளை விளாசினார் குயின்டன் டி ஹொக். குயின்டனை ரண்அவுட் செய்தார் டில்சான். அம்லா. பிளாசிஸ் இணைய மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா. 31 ஓட்டங்களுடன் லக்மலின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. ஆனார் பிளாசிஸ். ஆனால் அது துடுப்புமட்டையில் பட்ட பின்னரே கால் கவசத்தில்பட்டமை தெளிவாகத் தெரிந்தது. அரைச்சதம் கடந்தார் அம்லா. தேவையான ஓட்டங்களும் மீதமிருந்த பந்துகளும் சரிசமனாக இருந்தன. களத்தில் வில்லியர்ஸ் நின்றார். சானக விசிய 17 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் சிக்சர், பவுண்டரி பதிவாக ஆட்டம் அப்படியே மாற்றம் பெற்றது. முடிவில் 14 பந்துகள் மீதமிருக்க 8 இலக்குகளால் இலங்கையை ஊதித்தள்ளியது தென்னாபிரிக்கா. அம்லா 56 ஓட்டங்களுடனும், வில்லியர்ஸ் 20 ஓட்டங்களுடனும் களத்தில் ஆட்டமிழக்காதிருந்தனர். பங்கிசோ ஆட்டநாயகனானார்.

(ம)

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 480
சீட்டிழுப்பு திகதி 2016.03.28
வெற்றி இலக்கங்கள்
04 15 57 66 Z
ரூ. 49,411,880/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1249
சீட்டிழுப்பு திகதி 2016.03.28
வெற்றி இலக்கங்கள்
03 08 34 40 S
ரூ. 11,938,140/=

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 003
சீட்டிழுப்பு திகதி 2016.03.28
வெற்றி இலக்கங்கள்
09 23 47
143
27,630,080/=

வீட்டுப் பணிப்பெண் தேவை
உணவு, தங்குமிடம் இலவசம்.
இடம் - வல்வெட்டித்துறை
077 599 5659

வாடகைக்கு டிப்பர் தேவை
6 மாதத்துக்கு 3QF டிப்பர் வாடகைக்குத் தேவை. முற்பகல் 10.00 மணி தொடக்கம் ஒரு மணிவரை தொடர்பு கொள்ளவும்.
(உரிய ஆவணங்களுடன்)
தொடர்பு:
மாறுதி ரெடிமிக்ஸ் பிறைவேற் லிமிட்
கேரதீவு வீதி, நாவற்குழி,
யாழ்ப்பாணம்.
021 205 0999, 077 151 2122

காணி வாடகைக்குத் தேவை
யாழ் நகரின் மையப்பகுதிகள் அல்லது அண்மித்த பகுதிகளில் பிரதான வீதியோரம் உள்ளதான காணி வாடகைக்குத் தேவை. கவர்ச்சிகரமான மாதாந்த வாடகை வழங்கப்படும்.
தொடர்பு: 071 924 4126

வீடு காணி விற்பனைக்கு
வவுனியா, திருநாவற்குளம் பிரதான வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்றுடன் காணி விற்பனைக்கு உண்டு.
தொலைபேசி இல : 0774874982 : 0772056133

தற்காலிக கடைகள் ஏலம்
சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தான மகோற்சவத்தை முன்னிட்டு நாளை 30.03.2016 மு.ப 10.00 மணிக்கு தற்காலிக கடைகள் ஏலத்தில் விடப்படும்.
ஆதீன கர்த்தா தம்பையா பரஞ்சோதி
சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்,
சீரணி-சண்டிலிப்பாய்.

## 750 வெற்றிகளுடன் தொடர்கிறது செரினா வில்லியம்ஸின் பயணம்

நடைபெற்றுவரும் மியாமி ரென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் வெற்றிபெற்று, தனது ரென்னிஸ் வாழ்க்கையின் 750 ஆவது வெற்றியைப் பதிவுசெய்துள்ளார் செரினா வில்லியம்ஸ்.

தரப்படுத்தலில் முதலாம் இடத்தில் உள்ள அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸை எதிர்த்து 97ஆம் நிலை வீராங்கனையான ஜரினாடியாஸ் மோதினார். இந்த ஆட்டத்தின் முதல் செற்றில் ஜரினாடி, வில்லியம்ஸுக்கு பெரும் சவாலகவிருந்தார். இருப்பினும் 7-5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் செரினா அந்த செற்றைக் கைப்பற்றினார். இரண்டாவது செற்றில் செரினாவின் ஆதிக்கம் மிகையாக இருக்க அந்த செற்றை அவர் 6:3 என்ற கணக்கில் கைப்பற்றி காலிறுதிக்கு முந்தைய செற்றுக்கு தகுதி பெற்றதுடன் தனது ரென்னிஸ் வாழ்க்கையின் 750 ஆவது வெற்றியையும் பதிவுசெய்தார்.

750 வெற்றிகள் என்ற மைல்கல்லை எட்டிய 7ஆவது வீராங்கனை செரீனா ஆவார். அதிக வெற்றிகளைப் பெற்ற வீராங்கனைகளின் வரிசையில் முதல் 6 இடங்களில் அமெரிக்காவின் நவரத்திலோவா (1,442 வெற்றிகள்), கிறிஸ் எவர்ட் (1,309 வெற்றிகள்), ஜெர்மனியின் ஸ்டெபி கிராப் (902 வெற்றிகள்), இங்கிலாந்தின் விர்ஜினியா வேட் (839 வெற்றிகள்), ஸ்பெயினின் சாஞ்சஸ் விகாரியோ (759 வெற்றிகள்),அமெரிக்காவின் லின்சே டேவன்போர்ட் (753 வெற்றிகள்) ஆகியோர் உள்ளனர்.

(ம)

## தென்னாபிரிக்காவை வென்றது இலங்கை பெண்கள் ரி-20 உலகக்கிண்ணத் தொடரில்



பெண்களுக்கான ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இலங்கை-தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இலங்கை அணி 10 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணித்தலைவியும் ஆரம்ப வீராங்கனையுமான ஜெயங்கனியின் சிறப்பான இன்னிங்ஸால் அந்த அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது.அதிகபட்சமாக ஜெயங்கனி 52 ஓட்டங்களையும்,வீரக்கொடி 15 ஓட்டங்களையும், கௌசல்யா 12 ஓட்டங்களையும் பெற்றனர்.பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணியின் சார்பாக கப், லியூஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், இஸ்மைல், லெஸ்ட்லோ இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் வீராங்கனைகள் பந்துப்பரிமாற்றத்துக்கு6 ஓட்டங்களுக்கும் குறைவாகவே இறுதிவரை சென்றனர். இதனால் அந்த அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் 7 இலக்குகள் இழப்புக்கு 104 ஓட்டங்களையே எடுத்தது. அதிகபட்சமாக சிட்டி 26 ஓட்டங்களையும், நிக்கிறேக் 24 ஓட்டங்களையும், கப் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை அணியின் சார்பாக சுகந்திகா, உடஸ்சிகா இருவரும் தலா இரு இலக்குகளையும், ஜெயங்கனி, கௌசல்யா இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.